கல்கி





பெண்களை இழிவு செய்யும் கொடுமை!

—கல்லூரி மாணவிகள் கலந்துரையாடல்


KALKI 12.2.89 ரூ. 2.

வண்ண வண்ணத் திருவிழாவிலே— மங்கை எண்ணமதைக் கவர்ந்திடுவாள்!



திருவிழாக் காலங்களில் திருமகளெனக் காட்சி அளிப்பீர், எண்ணற்ற பட்டுப்புடவைகளின் வண்ண ஜாலத்திலே! நிகரற்ற தரம். எண்ணிலடங்கா டிசைன்கள். இன்முகத்துடன் சேவை. இவை அனைத்திற்கும் சிறந்த ஷோ-ரூம்... லக்ஷ்மி சில்க் ஹவுஸ்!

ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்திருக்கும்.





லக்ஷ்மி சில்க் ஹவுஸ்

பனகல் பார்க் எதிரே, மாடியிலே தி-நகர், சென்னை 600 017.

Our Associate: லக்ஷ்மி சில்க் ஹவுஸ்

மாதுங்கா (மத்திய ரயில்வே), பம்பாய் 400 019.

நினைவிருக்கட்டும், எங்கள் ஷோ-ரூம் மாடியில் உள்ளது.

market movers/LSH/1001/87 Tamil



குதிரைப் பந்தயங்களில் கோல்மால்!


'சென்னை ரேஸ் கிளப் குதிரைப் பந்தயங்களை நியாயமான முறையில் நடத்தவில்லை என்பதால், இனி சென்னை குதிரைப் பந்தயங்கள் பற்றிய செய்திகளை நாங்கள் வெளியிட மாட்டோம்' — இவ்வாறு ஜனவரி 26 அன்று அறிவித்திருந்தது ஹிந்து நாளிதழ்.

அப்படி என்ன அநியாயங்கள் நடக்கின்றன சென்னை ரேஸ் கிளப்பில்...? 'வெள்ளைக்காரன் காலத்திலிருந்து நான் மெட்ராஸ் ரேஸுக்குப் போயிண்டிருக்கிறவன் சார்...' என்று கூறும் அனுபவஸ்தர் ஒருவர் விளக்கினார்:

"பந்தயம் என்றால் குதிரைகளை ஓட விட்டு எந்தக் குதிரை முதலில் வருகிறதோ அதற்குப் பரிசும் அதன் பெயரில் பணம் கட்டியவர்களுக்குப் பணமும் தர வேண்டும். ஆனால் எந்தக் குதிரை ஜெயிக்க வேண்டும் என்று, ரேஸ் நடப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னால் ஒரு நபர் தீர்மானித்து, அதன் பேரில் பல புக்கிகளிடம் பணம் கட்டிவிடுகிறார். அந்தக் குதிரைதான் ஜெயிக்கிறது! அவருக்கு எக்கச்சக்க லாபம். கணக்கு வழக்குப் பார்த்து, 'டிப்ஸ்' களைப் படித்து முன்கூட்டியே 'ஜாக்பாட்'டுக்கு வேறு குதிரைகள் பேரில் ஆயிரம் இரண்டாயிரம் என்று பணம் கட்டுபவர்களுக்கு அநியாய நஷ்டம்! — சுருக்கமாகச் சொன்னால் இதுதான் இப்போது சென்னை ரேஸ் கிளப்பில் நடக்கிற அக்கிரமம்.

"எந்தக் குதிரை ஜெயிக்கணும்ங்கறதை 'ஒருத்தர்' எப்படித் தீர்மானம் செய்ய முடியும் என்று கேட்பீர்கள். அந்த ஒருத்தரைத் தட்டிக் கேட்க ஆளில்லை...! முன்பு கருணாநிதி ஆட்சியில் ரேஸ் ஒழிக்கப்பட்டதும் அது அவருக்கு அரசியல் ரீதியில் பலம் சேர்த்ததும் ஞாபகமிருக்கும். திரும்பவும் எம். ஜி. ஆர். ஆட்சியின் போது ரேஸ்கள் துவங்கப்பட்டன. ஆனால் ரேஸ்கள் நியாயமாக நடத்தப்படுவதில்லை என்ற புகார் கிடைத்ததால் எம். ஜி. ஆர். அவற்றைத் தடை செய்ய ரகசியமாக முடிவெடுத்துத் திடீரென்று உத்தரவு பிறப்பித்து விட்டார். இதற்குப் பிறகு ரேஸ் கிளப் ஹைகோர்ட்டிலும், சுப்ரீம் கோர்ட்டிலும் வழக்குத் தொடர்ந்து, சுப்ரீம் கோர்ட்டிடம் சாதகமான தீர்ப்பைப் பெற்றது. மீண்டும் ரேஸ்கள் தொடங்கின. அப்போது தமிழக அரசின் சார்பில் அதிகாரி ஒருவர் பாதுகாவலராக (custodian) நியமிக்கப்பட்டு, அவர் மேற்பார்வையில் ரேஸ்கள் நியாயமாக நடந்தன. ஆனால், கவர்னர் ஆட்சியில் பாதுகாவலர் மாற்றப்பட்டார். இதற்குப் பிறகுதான் அக்கிரமங்கள் மீண்டும் ஆரம்பித்தன; நடந்து வருகின்றன.

"ரேஸ் கிளப் சார்பில் ஆறு பேரும், அரசாங்கப் பிரதிநிதிகள் ஆறு பேரும் மேற்பார்வையிட, ரேஸ்கள் நடத்தப்பட வேண்டும் என்பது சுப்ரீம் கோர்ட் ஆணை. ஆனால் அரசாங்கப் பிரதிநிதிகளுள் ஒரு போலீஸ் அதிகாரி தவிர வேறு யாருமே சமீப காலமாக ரேஸ் கிளப் பக்கம் தலை வைத்தும் படுப்பதில்லை. இந்நிலையில் ரேஸ் கிளப்பைச் சேர்ந்த ஆறு பேர்தாம் தம் இஷ்டத்துக்கு ரேஸ்களை நடத்துகி




"பையன் ராஜீவுக்கு ஒரு பேர் வைச்சிருக்கான்!"

"என்ன அது?"

"பீரங்கி மாமா!"

— மேல்பட்டி வெங்கடேஸ்வரன்.



"அதான் பில்லுக்குப் பணம் கொடுத்தாச்சே, அப்புறம் ஏன் முதலாளி தலையைச் சொறியுறார்...?"

"அவருக்கும் 'டிப்ஸ்' வேணுமாம்...!"

— சரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.

"தேர்தல்தான் முடிஞ்சு போச்சே, அடுத்து என்னண்ணே பண்ணப் போறீங்க...?"

"புதுசா ஒரு 'கோஷ்டி' ஆரம்பிக்கப் போறேன்...!"

— சரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.



றார்கள். இவர்கள் எல்லாருமே சென்னையின் மிக வலிமை படைத்த ஒரு குதிரை உரிமையாளரின் ஆதரவாளர்கள். எனவே அந்தக் குதிரை உரிமையாளரின் பெயரிலோ அவர் பினாமிகளின் பெயரிலோ ஓடும் குதிரைகளுள் எது ஜெயிக்க வேண்டும் என்பதை அவரே தீர்மானித்து, அதன்படி ஜாக்கிகளுக்கு உத்தரவு போட்டு விடுகிறார்! இவருக்கு, புக்கி வைத்துள்ள ஒரு முன்னாள் எம். பி. யின் ஆதரவும் இருக்கிறது. தட்டிக் கேட்க அரசாங்கப் பிரதிநிதிகள் வருவதில்லை; பாதுகாவலரும் (இவர் ஓர் இளம் ஐ. ஏ. எஸ். அதிகாரி) முன்வருவதில்லை. இந்நிலையில் நடத்தப்படும் ரேஸ்கள் எல்லாம் வெறும் கண் துடைப்புதான்!

"இந்த அநியாயங்களைத் தாங்க முடியாமல்தான் பாம்பே ரேஸ் கிளப் இப்போது சென்னையுடன் இன்டர்-வென்யு பெட்டிங் செய்வதை நிறுத்தி விட்டது.

"ரேஸ் மைதானத்தில் சில சமயம் ஜாக்கிகள் பேசி வைத்துக் கொண்டு ஒரு குதிரையை ஜெயிக்க விடுவது என்பது நடக்கும். ஆனால் சென்னை ரேஸ் கிளப்பில் அன்றாட ரேஸ்களின் தலைவிதி முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. இல்லாவிட்டால் நான்கு வருடங்களாக ஒரு ரேஸில் கூட ஜெயிக்காத 'சார்மர்' என்ற குதிரை திடீரென்று ஒரு நாள் எப்படி முதலில் வர முடியும்?! இங்கிலாந்தில் ஒரு வருடம் முழுவதும் குதிரை ஓட்டி முப்பத்தெட்டு முறைகளே ஜெயித்த ஒரு ஜாக்கி, இங்கு வந்ததும் ஒரே வாரத்தில் முப்பத்தெட்டு முறை ஜெயித்தது எப்படி?... இப்படியே பல கேள்விகள் கேட்டுக் கொண்டு போகலாம். அவ்வளவு ஏன்...? ஒரு நாள் ரேஸ் மைதானத்துக்குப் போய்ப் பார்த்தாலே தெரிந்து போகும். கடைசி நிமிஷத்தில் ஒரு குதிரையின் பேரில் ஏகமாகப் பணம் கட்டப்படும்— அதைப் 'போர்டி'ல் பார்த்துவிட்டு, சிறு தொகைக்கு 'பெட்' செய்பவர்கள், பத்து ரூபாய் அந்தக் குதிரை மீது கட்டி வென்று விடுவார்கள். ஆனால் முன்கூட்டியே திட்டமிட்டு வேறு குதிரைகள் மீது ஆயிரக்கணக்கில் கட்டியவர்கள் அழுது கொண்டே திரும்பிப் போவார்கள்!

"தினம் தினம் ஜெயிப்பது யாருடைய குதிரை என்று எல்லோருக்கும் தெரியும். இதே ஆசாமியின் குதிரைகள் பெங்களூர், பாம்பே ரேஸ்களில் ஜெயிப்பதில்லை!

"ஹிந்து நாளிதழ் சில காலம் முன் இந்த கோல் மாலைக் கண்டித்து எழுதியதும் ஒரு வாரத்துக்கு ரேஸ்கள் ஒழுங்காக நடந்தன, பிறகு மீண்டும் கண் துடைப்பு ஆரம்பமாகி விட்டது. இப்போது சென்னை ரேஸ் கிளப்பின் 'கிங் பின்,' 'ஹிந்து' இல்லாவிட்டால் வேறு பேப்பரா இல்லை!' என்று அலட்சியமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

"சென்னை ரேஸ் கிளப் மூலம் அரசுக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம், சுமார் ஐந்து அல்லது ஆறு கோடி ரூபாய்தான் இருக்கும். அதனால் பேசாமல் ரேஸ்களை மீண்டும் அடியோடு நிறுத்திவிடலாம். கருணாநிதி என்ன செய்வாரோ, காத்திருந்துதான் பார்க்க வேண்டும்!"

— நமது நிருபர்.



சென்ற ஆண்டு கல்கி தொழில் மலர் பற்றிய விமர்சனங்கள்:

கல்கி பத்திரிகையின் முதல் தொழில் மலரான இது, வரவேற்கத்
தக்க முயற்சி. நாளிதழ்கள் நீண்ட காலமாகத் தொழில் மலர்கள்
வெளியிட்டு வருகின்றன. ஆனால் வாரப் பத்திரிகைகள் இதுவரை
இத்தகைய முயற்சியை மேற்கொண்டதில்லை. கல்கியின் முதல் தொழில்
மலரே சிறப்பாக அமைந்துள்ளது.

— தினமணி 16.4.88

மற்ற பல மலர்களைப் போல் விளம்பரங்களே நிரம்பி இராமல்
இந்த மலரில் படிப்பதற்குப் பலதரப்பட்ட துறைகளைப் பற்றிய
ஏராளமான விஷயங்கள் உள்ளன. ஆங்கில நூல்களைப் படிக்க இயலாத
வர்களுக்கு இதில் அடங்கியுள்ள செய்திகள் அரிய பொக்கிஷம் போன்
றது. விஷயங்களைச் சுவைபடச் சொல்ல வேண்டும் என்பதிலும்
ஏராளமான புள்ளி விவரங்களைத் தந்து வாசகர்களைச் சிரமப்படுத்தக்
கூடாது என்பதிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

— இந்தியன் எக்ஸ்பிரஸ் 16.4.88.

பல்வேறு துறைகளிலும் தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றங்
கள் எளிதில் படித்து பயனடையக் கூடிய விதமாகத் தரப்பட்டுள்ளன.
சிரமப்பட்டு முன்னுக்கு வந்த தொழிலதிபர்களின் பேட்டிகள் இடம்
பெற்றுள்ளன. பக்கத்துக்குப் பக்கம் புகைப்படங்களுடனும் பல
வண்ணப் படங்களுடனும் வெளிவந்துள்ள இந்த மலரில் நன்கு எழுதப்
பட்ட சிறுகதைகளும் நகைச்சுவைத் துணுக்குகளும் கார்ட்டூன்களும்
கூட உண்டு.

— ஹிந்து 12.4.88.

கல்கி-தொழில் மலர் 1989

விவசாயத்துக்கு முக்கியத்துவம் தந்து அதன் பல்வேறு அம்சங்களையும் படம் பிடித்துக் காட்டும் விதமாக இப்போது உருவாகி வருகிறது.



மாணவிகள் கலந்துரையாடல்

பெண்களை இழிவுசெய்யும் கொடுமை!

சென்னை மாநகராட்சியில் பணி புரிந்த என் கணவர் காலமான பிறகு எனக்குச் சேர வேண்டிய விதவைகள் உதவித் தொகைக்காக விண்ணப்பித்தேன். கணவரின் இறப்புச் சான்றிதழும் எனது வாரிசுரிமைப் பத்திரமும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. ஆனால், என் விண்ணப்பத்தைப் பரிசீலித்த கணக்கு அதிகாரி, (accounts officer) விண்ணப்பத்தில் இணைத்திருந்த எனது புகைப் படங்களில் நான் பொட்டு வைத்துக் கொண்டிருந்ததை ஆட்சேபித்து, பொட்டு இல்லாமல் வேறு புகைப்படங்கள் எடுத்துக் கொண்டு வர வேண்டும் என்று கூறி விட்டார். இச் செயல் தனி மனித உரிமையில் குறுக்கிடுவதோடு என் உணர்வுகளை மதியாமல் என்னை அவமானப்படுத்திக் கொடுமைப்படுத்தும் செயல் அல்லவா?

சென்னை — 17. வி. ஜெயம்.

— மேற்படி கடிதம் ஜனவரி இரண்டாம் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதியில் வெளியாகியிருந்தது. இதனைச் **சென்னை மீனாட்சி மகளிர் கல்லூரி** மாணவிகள் முன் வைத்து, இக் கல்லூரி தமிழ்த் துறையைச் சேர்ந்த திருமதி பொன்மணி வைரமுத்துவின் தலைமையில் ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தோம். செல்வி மெய். சித்ராவும் (எம்.சி.ஏ. இரண்டாம் ஆண்டு) செல்வி கே. ஆர். சுந்தரியும் (பி.எஸ்.சி. பௌதிகம் — இரண்டாம் ஆண்டு) பங்கேற்றார்கள். மாணவிகள், ஆசிரியைகள் முன் நடந்த கலந்துரையாடலின் தொகுப்பு:

பொன்மணி வைரமுத்து: அவையின் முன் வைக்கப்பட்டுள்ள செய்தி, 'விதவை' என்ற வேஷத்திற்கு அடையாளங்கள் வேண்டும் என்று எதிர்பார்க்கும் அநியாயத்தை வெளிப்படுத்துகிறது. இச் செய்தி குறித்து, திருமணமாகி ஓராண்டிலேயே கணவனை இழந்த ஒரு பெண்ணிடம் கூறிய போது, பூவையும் பொட்டையும் விடாமல் அணிந்து வரும் அவர் கோபத்தோடு சொன்னார்: 'பூ, பொட்டு அணிந்த விதவைகளைத் தாழ்வாக எண்ணி விடாதீர்கள்; அதே போல் வெள்ளைச் சேலை அணிந்து, பூவும் பொட்டும் வைத்துக் கொள்ளாமல் வாழும் விதவைகளை உயர்வாக எண்ணி விடாதீர்கள்! வற்புறுத்த வற்புறுத்த வைதவ்யம்

மடமையைக் கொளுத்துவோம்!

என்பது தவறிப் போகும். அதனால் சுதந்திரம் அவசியம் வேண்டும். வலுக்கட்டாயப் படுத்தாமல், விரும்பினால் விதவைகள் மறுமணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப்பட வேண்டும்' என்றார். விதவைகள் அமங்கலச் சின்னங்களாகக் கருதப்படுவது குறித்து அவரிடம் கேட்ட போது, 'நான் பல மங்கல நிகழ்ச்சிகளுக்குப் பெண்களால் அழைக்கப்பட்டு, அவற்றுக்குப் போவதோடு, மஞ்சள் குங்குமம் பெற்றுக் கொள்கிறேன்; பெருந்தன்மையோடு மாற வேண்டியதெல்லாம் ஆண்கள் சமூகம்தான்' என்றார். (கை தட்டல்). ஒரு கோடி பெண்களின் பிரதிநிதியாக அவர் பேசியதாகக் கொள்ள வேண்டும். 'விதவைகளின் எண்ணிக்கை குறைய வேண்டுமானால் வயதான ஆண்கள் இளம் பெண்களை மணக்கக் கூடாது' என்று காந்தியடிகள் சொன்னார். 'கணவனை இழந்த பெண்கள் மறுவிவாகம் செய்து கொள்ளக் கூடாது என்று கட்டுப்படுத்துவதால் வயோதிக ஆண்கள் இளம் பெண்களை மணந்து கொள்கிறார்கள்; இது தவறு' என்று பாரதியாரும் கூறியுள்ளார். ஆனால் இன்று கிழவர்கள் நூறாவது முறையாகத் திருமணம் செய்து கொண்டால் அது ஒரு பெரிய சாதனைச் செய்தியாகப் பத்திரிகை, தொலைக்காட்சியில் இடம் பெறுகிறது! — இது வேதனைக்குரிய விஷயம். மாற வேண்டிய, மாறிக் கொண்டிருக்கிற சமுதாயத்திலே இன்னமும் பழமையில் ஊறி, மாற மறுப்பவர்களும், மாற பயப்படுபவர்களும் இருக்கிறார்கள். 'கணவனை இழந்த பெண்களின் கோலங்களை மாற்றி ஜாதிப் பிரிக்க வேண்டாம்' என்று பெரியார் சொல்லுவார். 'பூவும் பொட்டும் பெண்களுக்கு ஆதியில் வந்தது; மெட்டியும் கயிறும் பாதியில் வந்தது. எனவே பாதியில் வந்ததை வேண்டுமானால் அவர்கள் விட்டு விட்டுப் போகட்டும், ஆதியில் வந்ததை விடுவானேன்?' என்று அமரர் கல்கி சொல்லுவார்... (கை தட்டல்)... இளம் வயதில் முதிர்ந்த சிந்தனைகள் விதைக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கலந்துரையாடல் இனி துவங்கும்....

சித்ரா: பழமையான நாகரிகத்திலிருந்து மாறாமல் வாழும் தோடர்கள் கூட கணவனை இழந்த பெண்களுக்குப் பூவும் பொட்டும் மறுத்துக் 'கோலம்' செய்வதில்லை. அவர்களிடம் நாம் நல்லதைக் கற்றுக் கொள்வோம்.

சுந்தரி: ஏன்! சொத்து மனைவியிடம் போய்ச் சேர்ந்து விடுமோ என்று பயந்து சுப் கன்வரை உடன்கட்டை ஏறச் செய்த மிருகத்தனத்தை விடவா...? அவரைச் 'சதி மாதா' என்று தெய்வமாக்கிக் கோவில் கட்டுவித்து...

சித்ரா: விதவைப் பெண்களைச் சதி மாதாவாக்கிக் கோவில் கட்டி அவர்களை தெய்வமாக்கவும் வேண்டாம்; அவளை அபசகுனமாய்க் கருதி இழிவுபடுத்தி ஒதுக்கி வைக்கவும் வேண்டாம்; அவர்களை இயல்பாக வாழ விடுங்கள் என்றுதான் சொல்வேன். ஆனால் பெண்ணைத் தியாகியாக்குவதும், தெய்வமாக்குவதும் ஆண் சமூகத்தின் சுயநலத்துக்கு வசதியாக உள்ளது. பெண்களை அடக்கி ஆள ஆண்களுக்கு இது வசதி செய்கிறது. சம உரிமைப் பேச்சு பேசப்பட்டாலும் பல விஷயங்களில் நாம் மாறவில்லை — விதவை என்ற பெண்பால் சொல்லுக்கு இணையான ஆண்பால் தமிழ்ச் சொல் கூடக் கிடையாது. ஆங்கிலத்தில் இருக்கிறது — **Widow — Widower.** தமிழில் இந்தச் சொல்லாட்சி இல்லாதது கூட ஆண் ஆதிக்கத்தின் அடையாளம்தான்.

பொன்மணி: பாரதி 'விதவன்' என்ற

• பொன்மணி வைரமுத்து.



• கே. ஆர். சுந்தரி.



• மெய்சித்ரா.





"விதவை என்ற வார்த்தையையே பயன்படுத்தக் கூடாது என்று சட்டம் கொண்டு வந்தால் என்ன...?" — கேட்பவர் மாணவி விஜயா.

சொல்லாட்சியை ஒருமுறை கையாண்டிருக்கிறார்... ஆனால் அது வழக்கில் வரவில்லை என்பது உண்மைதான். சரி, 'கணவனை இழந்த பெண் அலங்காரங்களைக் குறைத்துக் கொண்டு, கட்டுப்பாடுடன் வாழ்ந்தால் பிற ஆண்கள் அவளை நாடி வராமல் ஒரு பாதுகாப்பு கிடைக்கும்' என்று சிலரிடம், கருத்து நிலவுகிறதே. இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சுந்தரி: இந்த வெளி அடையாளங்கள் தேவையேயில்லை; அவை ஆண்களின் காமப் பார்வையிலிருந்து அவளைக் காக்க மாட்டா. மாறாக, திலகம் இல்லாமலிருக்கும் ஒருத்தியைப் பார்க்கும் போது, ஒரு காமாதுரன் 'ஓகோ, இவள் பாதுகாப்பு இல்லாதவள், இவளை அடையத் துணியலாம்' என்ற தைரியம் பெறுவதுகூட சாத்தியம்தான். எனவே இந்தப் புறத் தோற்றத்தால் ஒரு பாதுகாப்பு கிடைப்பதாகக் கருதவே முடியாது. தன்னை அலங்கோலப்படுத்திக் கொண்டதாலேயே ஒரு பெண் காலஞ்சென்ற தன் கணவனுக்கு உண்மையாக இருப்பதாகக் கருதவும் முடியாது.

பொன்மணி: மெய்தான். கற்பு என்பது உடல்சார்ந்த நிலை மட்டுமல்ல; மனம் சார்ந்த நிலையும் கூட என்று மு. வ. கூறுகிறார். இனி, அடுத்த நிலையில் என்ன மாற்றங்களை எதிர்பார்க்கிறீர்கள்?

சுந்தரி: கணவனை இழந்தோர், மற்ற பெண்களைப் போல் தங்களை அலங்கரித்துக் கொள்வதை இயல்பாகச் சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே போல் விதவைகள் தாமாக விரும்பி மறுமணம் செய்து கொள்வதையும் நாம் இயல்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் அவர்களைத் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துவதிலும் அர்த்தமில்லை.

சித்ரா: சமூகத்தில் எந்தப் புதுமைக்கும் எதிர்ப்பு இருந்து கொண்டேதான் இருக்கும். முதன் முதலாக ரயில் ஓடிய போது, அதை எதிர்த்தவர்கள் ஏராளம். 'ரயில் ஓடுவதால் கோழிகள் முட்டையிடுவதில்லை. ஆடுகள் புல் மேய்வதில்லை' என்று அவர்கள் காரணம் கூறினார்கள். இந்தக் காரணங்கள் எவ்வளவு கேலிக்குரியன என்பது இன்று நமக்குத் தெரிகிறது. அதே போல்தான் இன்று பெண்கள் ஏற்றுக் கொள்ளும் மாற்றங்களைப் பலர் எதிர்த்து அவற்றுக்கு நொண்டிக் காரணங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்று நாம் இந்த எதிர்ப்புகளைத் தாங்கிக் கொண்டால், எதிர்கால சந்ததியினருக்குப் போராட அவசியமின்றிப் போகும். ஒரு சிறந்த முன்னேற்றப் பாதையை அவர்களுக்கு நாம் காட்டியவர்களாவோம்.

பொன்மணி: மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன — காலப்போக்கில் அவை நிறைவடையும். கணவனை இழந்தோர் முடியை மழிக்க வேண்டும் என்ற நிலை அடியோடு மாறியுள்ளது. அதே போல் பூவும் பொட்டும் வைத்துக் கொள்ளலாம் என்ற நிலையும் வரும்...

சுந்தரி: நடைமுறையில் பார்க்கும் போது மாற்றத்தைக் கண்டு நாம் பயப்படத்தான் செய்கிறோம். நமக்கு உடன்பாடு இருந்தாலும் அடுத்த வீட்டு அம்புஜத்துக்கும் பக்கத்து வீட்டுப் பங்கஜத்துக்கும் பயப்படுகிறோம். நல்ல காரியங்களை விதவைகள் ஆரம்பித்து வைப்பது கூடாது என்பது எவ்வளவு முட்டாள்தனமான வாதம்! இந்திரா காந்தி ஆரம்பித்த பல திட்டங்கள் இன்று வெற்றிகரமாக நடந்து வருகின்றன. சென்னை பார்த்தசாரதி கோயில் குளம் சுத்திகரிக்கப்பட்டு முதலில் அதில் தண்ணீர் விட்டது ஜானகி எம்.ஜி.ஆர்.....

சித்ரா: அதிகாரத்தில் இருப்பவர்கள் மாற்றங்கள் செய்தால் அவற்றை எதிர்க்க யாருக்கும் துணிவு இருக்காது! உண்மையான பிரச்னை நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான்.

பொன்மணி: சுந்தரி சில பெயர்களைக் குறிப்பிட்டது ஒரு நல்ல முன்னுதாரணம் கருதித்தான். நடுத்தர வர்க்கத்தின் சில நம்பிக்கைகள் மூட நம்பிக்கைகளாக உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டத்தான்.

சித்ரா: அறிவியல் யுகத்தில் நாம் இருந்தாலும் பல பெண்களே மாற்றங்கள் செய்து கொள்ள முன் வருவதில்லை. சுதந்திரமாக அவர்களால் இயங்க முடிவதில்லை.

பொன்மணி: சுதந்திரம் என்பது ஒருவர் கொடுத்து ஒருவர் எடுத்துக்கொள்வதில்லை. ஏதோ சுதந்திரத்தைப் பிறர் அலமாரியில் பூட்டி வைத்திருப்பது போலவும் அதை நாம் எடுத்துக் கொள்ளவே முடியாது என்றும்

நாமேதான் நினைத்துக் கொள்கிறோம். தன்னம்பிக்கை, விடா முயற்சி, துணிவு — இவற்றோடு நாமே முன் வந்து உரிமைகளை எடுத்துக் கொள்ள எடுத்துக் கொள்ளச் சமூகமும் நமக்கு அவற்றை அளித்து விடும். இதுதான் உண்மை.

சித்ரா: சரி, ஒரு பெண் முன்வந்து சுதந்திரம் எடுத்துக் கொள்கிறாள் — எதிர்ப்புகளை மீறி மறுமணம் செய்து கொள்கிறாள் என்றே வைத்துக் கொள்வோம் — கணவன் அவளது பழைய வாழ்க்கையை நினைவு படுத்திக் குத்திக் காட்டுகிறான் — 'சிரவந்தி



* கலந்துரையாடலை உடனிருந்து நடத்தித் தந்த கல்லூரி முதல்வர் செல்வி லக்ஷ்மி.

என்ற ஹிந்தி சினிமாவில் நாம் பார்த்திருக்கிறோம்.

பொன்மணி: இருவருடைய அனுசரணையையும் பொருத்துத்தான் வாழ்க்கை நன்றாக அமையும். எனவே நாம் நல்ல உதாரணங்களை எடுத்துக் கொள்வோம். விதவைகளை மணம் செய்து கொள்ள முன்வருவோர் லட்சத்தில் ஒருவர்தான் என்பது மாறி இப்போது பலர் முன்வருகிறார்கள்.

இவர்களுள் இருபாலருமே துணை 'தேடி மணம் செய்து கொள்வதைக் காட்டிலும் இணை தேடி அவ்வாறு செய்து கொள்ள வேண்டும். இல்லறத்தில் 'துணை' என்ற சொற்பிரயோகமே தவறு — 'இணை' என்பதையே உபயோகிக்க வேண்டும் என்பார் ஜீவா.

சித்ரா: இங்கு எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வருகிறது:

வாடாத பூ போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல்
தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறும் கண்டதுண்டோ.


என்கிறார் ஒரு கவிஞர். தேனீக்கள் பாடுவதும் தென்றல் உலவுவதும் எவ்வாறு இயற்கையான செயல்களோ அதைப் போல் பெண், துணையைத் தேடுவதும் மிக இயல்பானது. அதனைச் செயற்கைப்படுத்தாதீர்கள் என்கிறார்.

சுந்தரி: **Man is a social animal; solitude is torture** என்பது ஆங்கில வழக்கு. கணவனை இழந்த ஒரு பெண் தன்போக்கில் சகஜமாக இருப்பதையும் விரும்பினால் மறுமணம் செய்து கொள்வதையும் சமூகம் இயல்பாக ஏற்க வேண்டும்.

பொன்மணி: பெண்ணின் உலகம் விரிந்து வருகிறது. தந்தை, கணவன், மகன் என்று யாரேனும் ஓர் ஆணைச் சார்ந்திருந்த நிலை, கல்வி அறிவு பரவலானதால் மாறி வருகிறது. எதிர்ப்புகள் தோன்றினாலும் துணிவுடன் மாற்றங்களை வரவேற்போம்; ஏற்போம். நல்ல மாற்றங்களை எதிர்க்கும் ஒருசிலரைப் பொருட்படுத்தாமல் முன்னேறுவோம்... பார்வையாளர்களுள் யாரேனும் பேச விரும்பினால் முன்வரலாம்.

திருமதி பத்மாவதி தேவாநந்தன்: விதவை





''நீங்களும்தான் பல இடங்களில் ஆட்சியையும் ஆளும் கட்சியையும் விமர்சித்துப் பொதுமக்களிடையே பேசிக் கொண்டு வருகின்றீர்கள். ஆனால் என்ன பயன்? ஆட்சியில் உள்ளோர் லட்சியம் செய்வதாகத் தெரியவில்லையே! உங்கள் உரையால் ஆகப் போவதென்ன?'' என்று ராஜாஜியிடம் ஒருவர் கேட்டார்.

அதற்கு ராஜாஜி அளித்த பதில்:
''கடந்த காலத்தில் இவ்வளவு தவறுகள், அநியாயங்கள் நடந்திருக்கின்றன; ஆனால் அதைத் தட்டிக் கேட்க அந்தச் சமுதாயத்தில் ஒருவர் கூட எழுந்து நிற்கவில்லையே' என்று பிற்காலத்தில் சரித்திரம் எழுதுபவர்கள் பரிகசிப்பார்கள். அந்த இழி நிலையையாவது தவிர்க்கலாம் அல்லவா?''

— எஸ். முகம்மது யூசுப்.

அடுத்த இதழில்...

ஒரு கிராமமே முன்னேறிய கதை!



ஆவது என்பது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புதானேயொழிய ஒரு பருவ நிலை அல்ல. புண்ணுக்கு மருந்திடுவது போல், அந்த பாதிப்பிலிருந்து நம்மை ஆற்றிக் கொண்டு, தொடர்ந்து எப்போதும் போல் வாழ வேண்டும்... எப்படி பூ, பொட்டு வைத்துக் கொள்ளக் கூடாது என்று கட்டுப்பாடுகள் விதித்தார்களோ அதே போல் பொட்டும் பூவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஏன் நாம் கட்டுப்பாடு விதிக்கக் கூடாது என்று நான் கேட்கிறேன்! பெண்ணை விட ஆண் உயர்வானவன் என்பதை உணர்த்தத்தான் சமுதாயத்தில் இந்தச் சின்னச் சின்ன கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. அவை ஒன்றுமில்லாமல் போக வேண்டுமானால், திருமதி பொன்மணி சொன்னது போல் நாமே நம் சுதந்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

செல்வி விஜயா: விதவை என்ற வார்த்தையையே பயன்படுத்தக் கூடாது என்று ஏன் சட்டம் கொண்டு வரக் கூடாது?

பொன்மணி: சட்டத்தை வரவேற்கலாம்; ஆனால் மக்களின் மனங்கள் மாறா விட்டால் சட்டத்தால் பயனில்லை.

செல்வி உஷா: ஆண்கள் சமுதாயம் மாற வேண்டும் என்றீர்கள்; ஆனால், சுந்தரி பேசும் போது அடுத்த வீட்டு அம்புஜத்துக்கும் பக்கத்து வீட்டுப் பங்கஜத்துக்கும் பயப்பட வேண்டியிருக்கிறது என்று பெண்களைத்தான் குறிப்பிட்டார். சமுதாயத்தில் ஆண்கள் பாதி — பெண்கள் பாதி — அதனால் சமுதாயம் மாற வேண்டும் என்று சொல்ல வேண்டுமேயொழிய ஆண்களை மட்டும் குறை கூற முடியாது.

பொன்மணி: பெண்களும் மாற வேண்டும். மாறத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு அதிக எதிர்ப்பு நேர்முகமாகவும் சரி, மறைமுகமாகவும் சரி ஆண்களிடமிருந்துதான் வருகிறது.

இந்தக் கட்டத்தில் ஒரு மாணவி வேகத்துடன் எழுந்து "ஆண்கள் எல்லோருமே கொடுமையானவர்கள் என்றால் நாங்கள் யாரைத் திருமணம் செய்து கொள்வது?'' என்று கேட்க, சிரிப்பிலே அவை அதிர்ந்தது!

பத்மாவதி தேவாநந்தன் மீண்டும் பேசி, எப்படி ஆண் ஆதிக்கம் என்பது படிப்படியாக வலுப்பட்டது என்றும், நாம் அதிலிருந்து விடுபடும் தறுவாயில் இருந்தாலும் இன்னும் பெண்கள் முழு சமத்துவம் பெறவில்லை என்றும் விளக்கினார்.

கலந்துரையாடல் பொன்மணி வைரமுத்துவின் நன்றி நவிலலுடன் முடிந்தது.

மேலட்டை வண்ணப்படம்:
கே. வி. ஆனந்த்

வண்ண ஓவியம்: **மருது**

புகைப்படங்கள்: **ஸ்ரீஹரி**

உ.ரா.வரதராஜன்

மிக அதிக வோட்டு; மிக அதிசய வாழ்க்கை!

"மூந்நூறு ரூபாய் கொடுத்துப் பெரிதாக ஒரு மாலை வாங்கிக் கொண்டு வந்து எனக்குப் போடுகிறார்கள். இன்றைக்கு மட்டும் போடப்பட்ட மாலைகளின் மதிப்பு குறைந்தபட்சம் எண்ணூறு ரூபாய் இருக்கும். என்ன பயன்? அத்தனை பூக்களும் கீழே உதிர்ந்து கிடக்கின்றன. இதற்குப் பதிலாகப் புத்தகங்கள் வாங்கி அன்பளிப்பாகத் தந்திருந்தால் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பேன்" என்று சொல்கிறார் வரதராஜன்—எம்.எல்.ஏ. ஆம், தமிழ்நாட்டிலேயே மிக அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ள உ. ரா. வரதராஜன் தான்!

இந்த மார்க்சிய கம்யூனிஸ்டுக் கட்சி எம்.எல்.ஏ.க்குப் புத்தகங்கள் என்றால் அத்தனை ஆசை! ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்கள் அவரிடம் உள்ளன. அத்தனையுமே தமிழிலக்கியங்களும், மார்க்சிய இலக்கியங்களும்தாம். பள்ளிக்கூட நாட்களிலிருந்து ஆசையாய்ச் சேர்த்து வைத்தவை.

மிகவும் ஆசாரமான ஐயங்கார் குடும்பத்தில் பிறந்தவர் வரதராஜன். அப்பா சீனிவாசனுக்கு ரயில்வேயில் உத்தியோகம். தாயார் சுசீலா. சமுதாய நோக்கு சிறு வயதிலேயே அரும்பி விட்டது வரதராஜனுக்கு. பள்ளிக்கூடப் படிப்பின்போதே இரவுப் பள்ளிகளில் மற்ற மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். தினமும் சர்வோதய சங்கத்திலிருந்து பஞ்சு வாங்கி வந்து, ராட்டைச் சுற்றி நூல் நூற்பார். அப்போதிலிருந்து, இவர் கதர்தான் அணிகிறார். "அணிவது கதர் என்றாலும் நான் என்றைக்குமே காங்கிரஸுக்கு எதிரி. காங்கிரஸ் கட்சிக்கு ஒரு தடவை கூட வோட்டுப் போட்டது கிடையாது" என்கிறார் வரதராஜன்.

தமிழ் இலக்கணம் என்றால் வரதராஜனுக்கு லட்டு. வகுப்பில் இவருக்கு 'இலக்கணப் புலி' என்று செல்லப் பெயர். பள்ளி இறுதிப் பரீட்சையின் போது ஓர் இலக்கணப் புத்தகம் படித்தார். அதிலே ஏகப்பட்ட தவறுகள் — அச்சுப் பிழைகள் இல்லை; அத்தனையும் அடிப்படை இலக்கணப் பிழைகள்! புத்தகத்தை எழுதினவருக்குத் தப்புகளைச் சுட்டிக் காட்டி நீண்ட கடிதம் எழுதினார். "வேறு யாரோ சொல்லிக் கொடுத்து நீ எழுதியிருக்கிறாய். நீ ஒரு பள்ளி மாணவன் என நான் நம்பத் தயாராக இல்லை" என்று பதில் வந்ததாம்!

தமிழிலக்கியம் படிக்க மிக்க ஆர்வமாய் இருந்தாலும், விவேகானந்தா கல்லூரியில் பி.காம். படிக்க வேண்டியதாயிற்று. ஆனாலும் காமர்ஸ் வகுப்புகளை மறந்து தமிழ் இலக்கியப் பாடங்களை வகுப்புக்கு வெளியே ஓரமாய் நின்று கேட்டுக் கொண்டிருப்பார்! காமர்ஸ் ஆசிரியர்கள், "வரதராஜன்! நீ காமர்ஸ் டிபார்ட்மெண்டா, தமிழ் டிபார்ட்மெண்டா?" என்று பாதி பரிவுடனும் பாதி கண்டிப்புடனும் கேட்பார்கள்!

அப்போதெல்லாம் விவேகானந்தா கல்லூரி என்றாலே மடம், பண்டாரம் என்ற கேலிப் பேச்சு வழக்கில் இருந்தது. பொறியியல் கல்லூரியில், "விஞ்ஞானக் கல்வி ஒழுக்கத்தை வளர்க்கிறதா? இல்லையா?" என்று ஒரு பட்டிமன்றம். "வரதராஜன் ஃபிரம் விவேகானந்தா" என்று அறிவித்ததும் வழக்கப்படி "மடம்...! பண்டாரம்!" என்று கேலிக் கூச்சல்; விசில் சத்தம். வரதராஜன் பேச்சை இப்படி ஆரம்பித்தார்: "போட்டியின் தலைப்பைக் கவனியுங்கள்; நான் ஒழுக்கத்தை வளர்க்கிறது என்று வாதாடி, உங்களுக்குச் சாதகமாய்த் தீர்ப்பு வாங்கித் தர வந்திருக்கிறேன். ஆனால் உங்கள் செய்கையே என்னைத் தோற்கடித்து விடும் போல இருக்கிறதே!" உடனடியாய் அமைதி நிலவியது.





* வரதராஜன் — சரஸ்வதி — குழந்தைகள்: புரட்சித் திருமணம்.

பி.காம். முடித்தபின், அடுத்த மூன்று ஆண்டுகளுக்குச் சராசரியாய் ஆறு மாதத்துக்கு ஒரு வேலை என்று பார்த்திருக்கிறார் வரதராஜன். ஒரு தனியார் நிறுவனத்தில், வேலை கொடுத்தார்கள். ஆனால், ''நீங்கள் வேட்டி சட்டை அணிந்து கொண்டு வரக் கூடாது'' என்று கண்டிஷன் போட்டார்கள். ''வேலை கொடுத்ததற்காக உங்களுக்கு நன்றி. ஆனால் நான் என் கதராடைக் கொள்கையிலிருந்து மாற முடியாது. உங்கள் வேலை வேண்டாம்'' என்று சொல்லி விட்டார் வரது!

சர்வோதய சங்கம் சம்பந்தமான ஓர் அமைப்பின் தமிழ் நாட்டு நிர்வாகியாகச் சில காலம் பணியாற்றினார். மாதா மாதம், அமைப்பின் செயல்பாடுகள் பற்றி, தலைமையகத்துக்கு அறிக்கை அனுப்புவார். ஒருமுறை, அமைப்பின் செயலாளர், ''நீ நேரடியாகத் தலைமையகத்துக்கு அறிக்கை அனுப்பக் கூடாது. என் பார்வைக்கு வைத்து, நான் திருத்தங்கள் செய்த பின்தான் அனுப்ப வேண்டும்'' என்றார். உடனே வரதராஜன், ''இப்போது ஒரு கடிதம் தருகிறேன்; அதிலே நிச்சயம் உங்களால் எந்தத் திருத்தமும் செய்ய முடியாது'' என்று சொல்லி விட்டு, ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார். அது அவரது ராஜினாமாக் கடிதம்!

ரிசர்வ் வங்கியில் சேர்ந்த சிறிது காலத்திலேயே இளமைத் துடிப்பு, பேச்சுத் திறமை, சுறுசுறுப்பு இவை மூலம் பலரைக் கவர்ந்த வரதராஜன், தொழிற் சங்கத்தில் ஈடுபாடு கொண்டார். விரைவிலேயே ரிசர்வ் வங்கி ஊழியர் தொழிற் சங்கத்தின் அகில இந்திய செயலாளர்களில் ஒருவரானார். நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி, ஊழியர்களுக்குச் சாதகமான முடிவுகளைப் பெற்றுத் தருவதில் முக்கிய பங்கு வகித்திருக்கிறார்.

எமர்ஜென்ஸியின் போது, சி.ஐ.டி. போலீஸால் தீவிரமாய்க் கண்காணிக்கப்பட்டார். தலைமறைவான தலைவர்களிடையே தொடர்பாளர் இவர்தான் என்பதை அறிந்த போலீஸ், இவரைக் கைது செய்யாமல், வெளியில் விட்டு, தீவிரமாய்க் கண்காணிப்பதன் மூலம் மற்ற தலைவர்களைப் பிடித்து விடலாம் என்று திட்டமிட்டுச் செயல்பட்டது. ஆனாலும் தந்திரமாய் அவர்களுக்கு 'டோக்கா' கொடுத்தார் வரதராஜன்.

வி. பி. சிந்தன் 'நீ ரிசர்வ் பாங்க் வேலையை விட்டு விட்டு, முழு நேர கட்சி ஊழியர் ஆகி விடு' என்று கேட்டுக் கொண்டார். ஒரு வருடத்துக்குள் சில குடும்பப் பொறுப்புகளை முடித்து விட்டு, மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பளம் பெற்று வந்த ரிசர்வ் வங்கி வேலையை உதறித் தள்ளி விட்டு, ரூபாய் ஐந்நூறு மட்டுமே பெறும் மார்க்சிய கட்சியின் முழு நேர ஊழியரானார் வரது.

வரதராஜனின் திருமணம் உண்மையிலேயே ஒரு புரட்சித் திருமணம்தான். ரிசர்வ் வங்கியில் உடன் பணியாற்றிய சரஸ்வதியை மிக மிக எளிய முறையில் திருமணம் செய்து கொண்டார். கலப்புத் திருமணம். அது மட்டுமல்ல முந்தைய மண வாழ்க்கையில் தோல்வியடைந்து விவாகரத்துப் பெற்றவர் சரஸ்வதி. பெண்ணுரிமை இயக்கத்தில் தீவிர ஈடுபாடு உடையவர்.

சரஸ்வதிக்குப் பெண் குழந்தை பிறந்த போது, காலையில் வரதராஜன் ஆஸ்பத்திரிக்குப் போய்க் குழந்தையைப் பார்த்து விட்டு, கட்சி அலுவலகத்துக்குப் போய் விட்டார். சிறிது நேரத்தில் குழந்தை இறந்து போனதாய் டெலிபோனில் தகவல் கிடைத்தது. நண்பர் ஒருவரின் உதவியுடன் இறந்த குழந்தையை ஸ்கூட்டரிலேயே பெசன்ட் நகருக்கு எடுத்துக் கொண்டு போய் இறுதிச் சடங்குகளை முடித்து விட்டு நேரே கோதாரி நிறுவனத்துக்குப் போனார். அங்கே நிலவிய 'லாக்-அவுட்'டுக்கு முடிவு காண கடைசிச் சுற்றுப் பேச்சு வார்த்தை நடந்தது. லாக்-அவுட்டுக்கு முற்றுப் புள்ளி வைத்து, பல்லாயிரம் தொழிலாளர்கள் வயிற்றில் பால் வார்த்தார். அன்று மாலை அண்ணா நகர் இடைத் தேர்தலில் தி. மு. க. வேட்பாளரை ஆதரித்து நம்பூதிரிபாடு பேசினார். தமது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அவரது பேச்சைத் தமிழில் மொழி பெயர்த்துவிட்டு, நள்ளிரவுக்கு மேல்தான் வீடு திரும்பினார் வரதராஜன். அதன் பிறகுதான் அழுவதற்கு அவருக்கு நேரம் கிடைத்தது.

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **கே. வி. ஆனந்த்**



அவள் அழகின் ரகசியம்...
சிக்
கண்டிஷனர் ஷாம்பூ
இலவசம்!
5 சிக் கண்டிஷனர் ஷாம்பூ
காலி பாக்கெட்டுகளுக்கு
ஒரு சிக் கண்டிஷனர் ஷாம்பூ இலவசம்
Chik
Conditioner Shampoo
கண்டிஷனர் நிறைந்த சிக் ஷாம்பூ
உங்கள் கேசத்திற்கு மெருகூட்டி பட்டுப்போல்
பளபளக்கச் செய்கிறது. மேலும் அதன்
இனிய நறுமணம் நாளெல்லாம் உங்களுக்கு
களிப்பூட்டும்.
ரூ. 1 மட்டுமே!
120 ml ரூ. 14.20 (வரிகள் உள்பட)
சிக் இண்டியா
11-C, பீச் ரோடு, கடலூர் 607 001.
போன்: 380, 211.
இனிமை நிறைந்த பொழுதுகள் "சிக்" குடன் மட்டுமே!



ஷாக் அளித்த செய்தி!

சென்னை அண்ணா நகரிலுள்ள ஹவுசிங்போர்ட் குடியிருப்பு ஒன்றில், மின் கசிவு இருப்பதை உணர்ந்த அனைவருமே பயந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டதாகவும், ஒரு பெண்மணி மட்டும் குளியலறையில் தாழிட்டுக் கொண்டிருந்ததால் உயிர்ப் பலியாகி விட்டார் என்றும் சமீபத்திய நாளிதழ் செய்தி ஒன்று கூறியது. இத்தகைய விபத்தைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும் என்று தமிழ் நாடு மின்சார வாரியத்தின் ஓய்வு பெற்றத் தலைமைப் பொறியாளர் **எல். ஜி. நாராயணசாமி**யிடம் கேட்டோம்:

குளியலறையினுள் ஸ்விட்சுகளை வைத்துக் கொள்ளாமல் வெளியே வைத்திருப்பது நல்லது. ஈரக் கையோடு சுவிட்சைத் தொடுவதைத் தவிர்க்கலாம். மரப்பலகை மீது நின்றபடி மிக்ஸி, கிரைண்டர் போன்ற சாதனங்களைக் கையாளலாம். ஆனால் குறிப்பிட்ட சம்பவத்தில், குடியிருப்பில் இருந்த எல்லோருமே 'ஷாக்'கை உணர்ந்திருக்கிறார்கள். அதனால் பிரச்னை ஒரு ஸ்விட்சிலோ, ஈரக் கையை உபயோகித்ததாலோ நேர்ந்தது அல்ல.

பொதுவாக **earthing** சரியாகச் செய்யப்படாததால்தான் மின்சாரக் கசிவு ஏற்படுகிறது. வீட்டில் வொயரிங் செய்யும் போது மின் இணைப்பைப் பூமியில் இரண்டு மூன்று அடி கீழே கண்டிப்பாக **earth** செய்ய வேண்டும். தவிர வீட்டின் எந்தெந்தப் பகுதிகளிலெல்லாம் ஒயர் ஓடுகிறதோ அந்தப் பகுதிகளுக்கெல்லாம் **earth** ஒயர் கூடவே செல்ல வேண்டும். சில வீடுகளில் ஒயரைப் பூமியில் **earth** செய்யாமல் தண்ணீர் பைப்பில் கொண்டு சேர்த்து விடுகிறார்கள். இது விரும்பத்தக்க ஏற்பாடே அல்ல. தண்ணீர் தாங்கி வரும் ஜி.ஐ. பைப் சில நேரம் கான்க்ரீட் பைப்புடன் இணைக்கப்பட்டிருக்கும். அப்போது மின்சாரம் **earth** ஆகாது.

இந்தப் பிரச்னைகளையெல்லாம் தவிர்க்க, அரசாங்க லைசென்ஸ் பெற்ற எலக்ட்ரிகல் கான்ட்ராக்டரைக் கொண்டு வீட்டுக்கு ஒயரிங் செய்யச் சொல்வது நல்லது. பெரும்பாலானவர்கள் இந்த விதியைக் கடைபிடிப்பதில்லை. கான்ட்ராக்டர்களும் லைசென்ஸ் இல்லாத வேறு சிலருக்கு வேலைகளைப் பகிர்ந்து கொடுத்து, பெயரளவுக்குத் தங்கள் கையெழுத்தை மட்டும் போடுகின்றனர். இதனால் பாதிக்கப்படுபவர் வீட்டில் குடியிருப்பவர்தான்.

மேலும் ஃப்ளாட்டுகளில் இப்போதெல்லாம் ஒவ்வொரு ஃப்ளாட்டுக்கும் ஒயரிங்கைத் தனித் தனியாக **earth** செய்வதில்லை. இப்படிச் செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானது, அவசியமானது.


இப்போதுள்ள 'கன்சீல்டு' ஒயரிங் முறையில் ஒயர்கள் கண்ணுக்குத் தெரியாமல் சுவருக்குள் பதிக்கப்படுகின்றன. அதனால் ஒயரிங்கில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டால் சட்டென்று கண்ணுக்குப் புலப்படுவதில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக மிக முக்கியமான, பலருக்கும் தெரியாத விஷயம் ஒன்று இருக்கிறது. இந்தியன் எலெக்ட்ரிசிடி ஆக்ட் என்ற சட்டத்தின் 46—வது பிரிவின் கீழ் — குறைந்தபட்சம் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை, எல்லா வீடுகளிலும் மின்சார உபகரணங்கள் மற்றும் ஒயரிங் பரிசோதிக்கப்பட வேண்டும். (தொழிற் சாலைகளில் இன்னும் குறுகிய கால இடைவெளியில் இத்தகைய பரிசோதனைகள் செய்ய வேண்டும்.) ஆனால் நடைமுறையில் இந்த வழக்கம் இப்போது அறவே இல்லை. இந்தப் பரிசோதனை செய்யும் பொறுப்பு அரசாங்கத்தின் எலக்ட்ரிகல் இன்ஸ்பெக்டருடையது. இவர் மின்வாரிய ஆட்களுக்கு உத்தரவிட்டு இப் பணியை மேற்கொள்ளச் சொல்லலாம். வாரிய ஊழியர்களும் வாடிக்கையாளர்களிடம் பரிசோதனைக்கான கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு, பரிசோதனை நிகழ்த்தி, இன்ஸ்பெக்டருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படா விட்டால் பொது மக்கள் எலக்ட்ரிகல் இன்ஸ்பெக்டரிடம் மனு செய்து தங்கள் வீட்டில் பரிசோதனை மேற்கொள்ளச் சொல்லலாம். பரிசோதனையின் போது வெளிப்படும் கோளாறுகளையும் அபாயங்களையும் நிவர்த்தி செய்யலாம். இந்த முறை மட்டும் சற்று கண்டிப்பாக அமுலிலிருந்தால் பொது மக்களும் எச்சரிக்கையாக இருப்பதுடன் வாரிய ஊழியர்களும் விழிப்போடு இயங்குவார்கள்.

ஒரு மின் விளக்கை எரியச் செய்யத் தேவைப்படும் குறைந்தபட்ச மின்சாரத்தில் கால்வாசி இருந்தாலே போதும், அது இதயத்தின் சீரான இயக்கத்தைக் குலைத்து ஒரு குடும்பத்தின் விளக்கை அணைத்து விடும்! இதை எப்போதும் மறக்காமல் இருந்தால் விபத்துக்கள் குறையும்.

— எஸ். ஆர்.


புகைப்படம்: கே. வி. ஆனந்த்


தமிழ் நாட்டிலே இப்பத் தான் காலை ஊன்றி இருக்கோம்! அடுத்த தேர்தல்லே வெற்றி நமக்குத் தான்!
அரசியல் துறவறம்னு விட்டுடுவேனு?.. வாங்க என் பின்னாடி!
ராஜாராம்
பண்ருட்டி
ஜெயா ஜோடி!
சொத்து
தமிழை வளர்க்கத் தான் பாயிலே உக்காந்திருக்கேன்!
தமிழ் வளர்ச்சித் துறை



கல்கி

1989 பிப்ரவரி 12
மலர் 47 இதழ் 28
விபவ மாசி 1



ஜெ—ஜா இணைப்பு: ஜகஜ்ஜாலப் புரட்டு!

பிள்ளையார் கோயில் வாசலில் உடைக்கப்பட்ட சிதர் தேங்காயை மீண்டும் ஒட்டவைக்க முடியுமானால், எம். ஜி. ஆர். காலமான பிறகு நான்கைந்து துண்டுகளாக உடைந்து போன அ. தி. மு. க. வையும் ஒட்ட வைக்க முடியும்!

தேர்தலில் ஜாவும் ஜெவும் இணைந்து செயல்பட்டிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாமாம்! — சில அ. தி. மு. க. சில்லறைத் தலைவர்களின் கணிப்பு இது. என்ன பெரிய வெற்றி கிடைத்திருக்கப் போகிறது? இருபத்தேழுக்குப் பதில் இருபத்தெட்டு இடங்கள் கிடைத்திருக்கலாம். அவ்வளவுதான்! எம்.ஜி.ஆர். இருந்த போது காங்கிரஸும் அ.தி.மு.க.வும் கூட்டணி அமைத்து வெற்றி பெற்றது வேறு கதை. எம்.ஜி.ஆர். இல்லாத நேரத்தில் ஜெ — ஜா கூட்டணி அல்லது ஜெ — காங்கிரஸ் கூட்டணி போன்ற எதுவும் மக்களிடையே செல்லுபடியாகாது. அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த கதையாகத்தான் முடியும்.

''எம். ஜி. ஆரின் அரசியல் வாரிசு ஜெயலலிதாதான், ஜானகி அல்ல'' என்று நிரூபிக்கப்பட்டு விட்டதாம்! இப்படிச் சில அல்ப சந்தோஷிகள் கொக்கரிக்கிறார்கள். எம். ஜி. ஆர். பெற்ற அமோகமான வெற்றி எங்கே, இருபத்தேழு இடங்களுக்குத் தத்திங் கிணத்தோம் போட்ட ஜெ. அணி எங்கே? இதுவா அரசியல் வாரிசு என்பதற்கு அடையாளம்!

எம். ஜி. ஆர். ஆட்சியில் பல குற்றம் குறைகளைக் கண்டவர்கள்தாம் நாம். ஆனால் அவருக்கு மக்களிடம் இருந்த செல்வாக்கு அபரிமிதமானது. அதனை நாம் என்றுமே குறைத்து மதிப்பிட்டதில்லை. ஆனால் மயிலுடன் கூட இருந்த வான்கோழிகள் எல்லாம் தங்களையும் மயிலாக எண்ணி, தோகை விரித்து ஆட ஆரம்பித்தால் ஏற்கவா முடியும்?

ஜானகி அம்மாள் ஒரு நல்ல முடிவுக்கு வந்தார். உடலும் நலிந்த நிலையில் அரசியலை விட்டு விலகி நிம்மதியாக வாழத் தீர்மானித்தார். அவருக்கு அந்த நிம்மதியைக் கூட அளிக்க ஜெயலலிதாவின் சுயநலம் இடம் தரவில்லை! திடீரென்று ''அன்னையே!'' ''தர்ம தேவதையே!'' என்று துதி பாடவும், ''தயக்கத்தை உதறுங்கள்! தலைமை தாங்குங்கள்!'' என்று அழைப்பு விடுக்கவும் ஆரம்பித்து விட்டார்! நேற்று தாறுமாறாகத் தூற்றியது என்ன; இன்று பூசித்துப் போற்றுவது என்ன? உருகுவது எதற்காக? காரணத்தைப் பிட்டு வைக்கிறார் 'ஜா' அணியில் தப்பிப் பிழைத்த ஒரே நபரான பாண்டியன். ஒரு சத்யா ஸ்டுடியோதான் எத்தனை அசத்தியங்களைப் பேச வைக்கிறது என்று நாம் மலைத்துப் போகிறோம்!

சிவகங்கையில் கூடி அ. தி. மு. க. அணிகள் இணைய வேண்டும் என்று தீர்மானம் போட்ட தொண்டர்கள் இந்தச் சுயநல அரசியல் நாடகங்களை ஊடுருவிப் பார்க்க வேண்டும். தங்களை நன்கு வழிநடத்திச் செல்லக் கூடிய தலைவர்கள் அ. தி. மு. க. வின் எந்த அணியிலும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொண்டு, அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு, அவரவரும் உருப்படியாகத் தத்தமது தொழில், வியாபாரம் அல்லது உத்தியோகத்தைக் கவனிக்கப் போக வேண்டும். அரசியலைத் தவிர வேறு எதுவும் தெரியாதவர்கள், தி. மு. க. அல்லது காங்கிரஸில் ஓர் ஓரத்திலாவது ஒட்டிக் கொள்ள முடியுமா, பார்க்கலாம். மற்ற இணைப்பு வேலைகள் எல்லாம் பயனற்றவை. தாற்காலிகமாகப் பயன் தருவது போல் தோன்றினாலும் நீடித்து நிலைக்க முடியாதவை. சிதறிய அ. தி. மு. க. வை நிரந்தரமாகச் சேர்த்து வைத்து ஒட்டக் கூடிய ஃபெவிகால் மார்க்கெட்டில் இல்லை!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

கேள்வி

தன் தமக்கையை அநியாயமாய்க் கற்பழித்துக் கொலை செய்த ஒரு ரௌடிக் கும்பலைப் பழிவாங்க ஒரு பயந்தாங்கொள்ளி மருத்துவக் கல்லூரி மாணவர் முயன்று முரட்டுப் பிஸ்தாவாகி அத்தனை பேரையும் சாய்த்து, அவரும் சாய்ந்து போகிறார் என்ற அடிதடி மசாலாக் கதையில் புதுசாய் ஏதும் இல்லாவிட்டாலும் மானாவாரியான காரெக்டர்களை வைத்துச் செம்தியாய் நொறுக்கல்.

இடைவேளை வரை அப்பாவித்தனத்தை அப்பிக் கொண்டிருக்கும் ரகுவரன் பூரண அனுதாபத்தைப் பெறுகிறார். ரகுவரனின் அடுத்த முகம் – சிறையிலே பாபா சரண்ராஜிடம் சிட்சை பெற்ற பிறகு – தூள்! அவருடைய அபரிமிதமான தெருவடியைத் தரிசித்துவிட்டு வந்த அப்பா பூர்ணம், அவரைப் பற்றி வீட்டுக்குள் புகார் செய்ய, அம்மாவும் பக்கமேளமாய், 'அக்கிரமம் செய்றவங்களைத் தெய்வம் பார்த்துக்கும். உனக்கென்னப்பா...' என்று வாசிக்க, அடேயப்பா, கொதிக்கிறாரே ஒரு கொதி – உடல் பதறப் பேசும் அந்த ஆவேசம் – கொஞ்சம் சத்யராஜ் ஜாடைதான் என்றாலும் சிலிர்த்துப் போகிறது.

அதற்குச் சற்றும் குறையாமல் சிலிர்ப்பு ஏற்படுத்துகிறார் ரேகா. பதிலுக்கு அவர், உங்களுக்கென்ன, யாரை வேணும்னாலும் கொலை பண்ணிட்டுத் தூக்கிலே தொங்கிடுவிங்க. அப்புறம் இதோ உங்க மகன். கொலைகாரர் பிள்ளைதானே? இதோ கௌரவமாத் தலை நிமிர்ந்து வாழ்ந்த உங்கப்பா. இந்தக் குடும்பம் இதுக்கெல்லாம் என்ன பேர்? கொலைகாரக் குடும்பம் தானே?' என்று வாங்கு வாங்கென்று வாங்கித் தலைகுனிய வைக்கிறாரே! ஒன்று குறிப்பிட வேண்டும். இந்த மாதிரி கட்டங்களில் வசன பிரும்மாவுக்கு வணக்கம் செலுத்துகிறோம். நன்றி பாராட்டுகிறோம்.

ஜகா – விஜயகுமார் சம்சா. (அவர் பாஷையில் பாராட்டு.) பாதியில் அவர் செயலற்று, குண்டடி பட்டுச் சாவது என்னவோ போலிருக்கிறது.

ரொம்ப நாளைக்கப்புறம் சுலக்ஷணா. தம்பியிடம் காட்டும் பரிவிலாகட்டும், ரௌடிகள் பிடியில் அஞ்சி நடுங்குவதிலாகட்டும் குறை இல்லை.

ஜெயிலுக்குள்ளேயே சீமான் ரௌடி பாபா சரண்ராஜ் படு கண்ணியம்! என்னால முடியல பாபா. எனக்குப் பயம்மா இருக்கு' என்று ரகுவரன் கண் கலங்க, 'உனக்குத் தில் இல்லே' என்று தட்டிக் கொடுத்துப் பயிற்சியளிக்கும் விதம் படு பாந்தம்.

ஜெயிலிலிருந்து ரௌடியாய்த் திரும்பியிருக்கிறார் ரகுவரன் என்றதும் வினுச் சக்ரவர்த்திக்கு அவரிடம் என்னமாய்ப் பாசம் பொத்துக் கொண்டு வருகிறது!

கண்ணியத்துக்கு இன்னொரு பேர் பூர்ணம். அந்த அடாவடி எஸ்.ஐ. தன் மகனை ரிமாண்டில் வைத்திருப்பதை அவர் கண்டிக்கும் விதம், பிறகு மந்திரிக்கு போன் செய்து அவரையே வரவழைத்து விடுவித்துக் கொண்டதும், 'மன்னிச்சிடுங்க இன்ஸ்பெக்டர், என்னுடைய செல்வாக்கைக் காட்டணும்கிறதுக்காக நான் இப்படிச் செய்யலை. எனக்கு இதைத் தவிர வேற வழியில்லை என் பிள்ளையை வெளியே கொண்டு வர', என்று சொல்லி விட்டு வெளியேறும் அடக்கம் குணச்சித்திரம்.

நேர்மையான இளம் போலீஸ் அதிகாரி ரவி மனசுக்குள் சிநேகமாய் நிறைகிறார். அந்த அக்கிரமக்காரப் போலீஸ் அதிகாரி ஏதோ டிரான்ஸ்பர் என நினைத்து கவரை நீட்டி, 'இதுக்குத்தான் பெரிய மனுஷங்களை விரோதிச்சுக்கக் கூடாதுன்னு சொன்னேன். தூக்கிட்டாங்களா? எங்கே?' என்று கொக்கரிக்க, அவர் அனாயாசமாய் அவர் எதிரிலேயே சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு, 'தாம்பரம் கிரைம் பிராஞ்சுக்கு எஸ்.ஐ. நானும் நீங்களும் ஒரு ராங்க். அந்தப் பக்கம் வந்தா நம்ம ஸ்டேஷன் பக்கம் வாங்க', என்று சொல்லும் எகத்தாளம் படு பேஷ்.

போலீஸ் மனோரமா – பொறுக்கி சந்திரன் கேரக்டர்களில் ஏதோ தொட்டுக் கொள்ளச் சிரிப்பு ஐட்டம் வைத்திருக்கிறார்களாம். ஹூம்... ஊஹூம்.'

சர்ச்சை, சங்கீதம், சண்டை, சம்பவம் எல்லாமே சபாஷ்தான். ஆனால் அந்த முடிவு – அது அச்சமூட்டுகிறது. அழிவுப் பாதைக்கு வழி காட்டாமல் ஆக்கபூர்வமாய் ஏதாவது செய்திருக்கலாம்.

— பி. எஸ். எஸ்.





முன்னேற்றத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுங்கள்!

புதிய முதல்வருக்கு யோசனைகள்!

● ஆளுனரால் அறிவிக்கப்பட்டு, பல கோடி ரூபாய் அதற்காகச் செலவிடப்பட்டு, பின்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கூட்டுறவு சங்கத் தேர்தல்களை உடனே நடத்த உத்தர விடுங்கள்.

● போராட்டம் என்ற பெயரில் வன்முறையில் ஈடுபடுவோர் மீது, கட்சி பேதம் பார்க்காமல் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்காதீர்கள்.

● உங்கள் 'ஆட்சி இருண்ட ஆட்சி' என்று எதிர்கால பரம்பரையோ அல்லது எதிர்க் கட்சிகளோ கூறுவதற்கு இடம் கொடுத்து விடாமல், மாநில உரிமைகளைப் பெற மத்திய அரசுடன் துணிந்து போராடுங்கள். போராட்டம் பலனளிக்கா விட்டால் பதவி விலகி எதிர்ப்பைத் தெரிவியுங்கள். அதன் மூலம் மக்களிடம் உங்களுக்கு ஆதரவும் செல்வாக்கும் பெருகவே செய்யும்.

கே. கணேஷ், சென்னை — 6.

● காவிரி நீர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் கர்நாடக அரசுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி, சுமுக மான, நிரந்தர தீர்வைக் காண்பதுடன், கிடைக்கும் தண்ணீர் வீணாகாமல் தடுக்க, டெல்டா பிரதேசத்தில் உள்ள வாய்க்கால்களையும், குளங்களையும் செப்பனிட வேண்டும்.

● தொழில் வளர்ச்சி பற்றிய திட்டங்கள் பேச்சளவில் மட்டும் இல்லாமல் செயல் முறையில் இருக்க வேண்டும். மனித சக்தி (Human Resource) வீணாகாமல் தடுக்கும் வகையில், அந்தந்த பகுதிவாழ் மக்களின் கைத்திறன் முதலியவற்றை மனத்தில் கொண்டு, ஆக்க பூர்வமான தொழிலைத் தொடங்க முனைவோருக்கு உதவுவதுடன், அரசாங்கமே குறைந்த முதலீட்டில் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம். இத் தொழிற்சாலைகளைத் திறமையான ஒருவரின் மேற்பார்வையில், autonomous அந்தஸ்துடன் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி ஒருங்கிணைக்கலாம்.

● சமூகக் காடுகள் திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலங்களைப் பிரித்து, அந்தப் பகுதியில் வாழும் பொது மக்களின் மேற்பார்வையில் அவற்றை விட வேண்டும். மேலும் மரங்களைப் பராமரிப்போரே அதில் கிடைக்கும் வருமானத்தை (மரங்களை வெட்டாமல்) அடைய, ஆவன செய்தால் பொது மக்கள் இந்தத் திட்டத்தில் உற்சாகத்துடன் ஈடுபடுவர்.

வி. பாலசுப்ரமணியன், தேப்பெருமாநல்லூர்.

● கல்லூரிகளில் மூன்று ஷிப்டு முறை



கடைப்பிடித்து, எல்லோரும் கல்வி கற்க வசதி செய்யுங்கள். மூன்று வருட மருத்துவ 'டிப்ளமா' மூலம் கிராமங்களில் வேலை செய்ய மருத்துவர்களை உருவாக்குங்கள்.

● ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சிறு தொழிற்சாலை என்ற விகிதப்படி தொழிற் புரட்சி செய்யுங்கள்.

● கடல் அலை அழுத்தத்தால் மின்சாரம் உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துங்கள்.

கல்பாக்கம், பி. சுவாமிநாதன்.

● பள்ளிகளில் தொழிற் கல்விக்கு இன்னும் அதிக முக்கியத்துவம் கொடுத்து, மேநிலைக் கல்வி முடித்து வருகையில், ஏதாவது ஒரு தொழிலில் அமரவோ, அல்லது ஒரு தொழிலைத் தொடங்குவ தற்கோ தேவையான பூரண தகுதியை மாணவர் பெறச் செய்ய வேண்டும்.

● சிறு தொழிற் பேட்டைகளை அதிகமாக நிறுவி, தமிழ் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புக்களைத் தர வேண்டும்.

● நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கையாண்டு, எல்லா நிலைகளிலும் செல வினங்களைக் குறைத்து, முக்கியமாக அமைச்சர்கள் சுற்றுப் பயணங்கள், ஆடம்பர அரசு விழாக்கள் — இவற்றைத் தவிர்த்து, பற்றாக்குறை நிலையினை முறி யடித்து முதலீட்டு வளர்ச்சிக்கும் அரசு உதவலாம்.

எம். சகுந்தலா, மதுரை — 3.

● சமூக முன்னேற்றத் திட்டங்கள், சமூக சேவைத் திட்டங்கள் இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து செயல்பட வேண் டும். குறிப்பாக, சமூக முன்னேற்றத் திட்டங் களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனெனில் நிலத்தில் விதை விதைப்பதற்குச் சமமான அவைதான் எதிர் காலத்தில் நாட்டைச் செழிப்புள்ளதாக ஆக்கும். 'சத்துணவுத் திட்டத்திற்குச் செல விடப்படும் தொகையைப் பெருமளவில் குறைக்க, எத்தனை எதிர்ப்புக்கள் வந்தா லும் சரி, கடும் முயற்சி மேற்கொள்ள வேண் டும்.

● எட்டாம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி முறையை அமுல்படுத்த வேண்டும். பொரு ளாதாரம் இடம் கொடுக்குமேயானால், அது வரையில் ஏழை, எளிய மாணவ, மாணவி களை அரசாங்கமே தத்தெடுத்து, கல்வி புகட்டுவதைத் தனது தலையாய கடமையாகக் கொள்ளலாம்.

● எம்.எல்.ஏ.க்களை மட்டுமே அமைச்சர் களாக்குவது என்ற முறையை மாற்றி அரசி யலுக்கு அப்பாற்பட்டு விளங்கும் டாக்டர் கள், இன்ஜினியர்கள், வழக்கறிஞர்கள், விஞ்ஞானிகள் போன்றோரை அமைச்சர வையில் சேர்க்கும் முறையை ஏற்படுத்த வேண்டும். அல்லது இவர்களை நாட்டின் முன்னேற்றத்திற்கு எந்த வகையில் ஈடு படுத்தலாம் எனச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

டி. எம். இராஜசேகரன், திருச்சி — 8.

● எந்தத் திட்டமானாலும் தொலை நோக் குப் பார்வையுடன் தீட்டப்பட வேண்டும். உதாரணம்: ஒரு கிராமத்திற்குக் குடிநீர் வசதி செய்யும் போது அந்தக் கிராமத்தின் தற் போதைய மக்கள் தொகையை, வைத்துத் திட்டம் தீட்டாமல், சுமார் ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் மக்கள் தொகையைச் சராசரி கணக்கிட்டுத் திட்டத்தை வகுக்க வேண்டும்.

● எந்த ஒரு வாரியத்திலும் தம் கட்சியில் உள்ளவர்களைத் தலைவர் பதவியில் அமர்த் தாமல், சமூக சேவை நிறுவனத் தலைவர் கள், ஓய்வு பெற்ற நீதிபதிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் போன்றோரை அமர்த்தி, இவர் களுக்கு முழு சுதந்திரம் கொடுத்துச் செயல் படச் செய்ய வேண்டும்.

● ஆட்சியில் உள்ளவர்கள் மீது ஊழல் புகார் கூறப்பட்டால், பத்திரிகைகளைப் பழி வாங்கும் நடவடிக்கையை மேற்கொள்ளாமல் அந்த ஊழலுக்கும் தனக்கும் சக அமைச்சர் களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்று மக்கள் முன்னிலையில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

எஸ். சேகர், சென்னை — 83.



● எளிய வாழ்க்கையை மேற்கொண்டு, அரசியல் தூய்மை, நேர்மையுடன் பணி யைத் துவங்குங்கள். பதவி என்றும் பறி போகலாம். ஆனால் பழி வந்தால் நிலைத்து விடும் என்பதை மனத்தில் கொள்ளுங்கள்.

● வருடா வருடம் உங்கள் குடும்பப் பொருளாதார வளர்ச்சியை மக்கள் மத்தி யில், சந்தேகிக்க இடம் இன்றிச் சமர்ப்பியுங் கள்.

● குற்றம் புரிந்தவர் எக் கட்சியினராயி னும், சட்டம் தண்டிக்கத் தவறாது என்பதைத் தெளிவுபடுத்துங்கள். நிர்வாக எந்திரப் பணியில் முக்கியமாகக் காவல் துறை, நீதித் துறை அலுவல்களில் குறுக்கிடாதீர்கள். பிறந்த நாள் விழா, பேரணி, ஊர்வலம் போன்ற கேளிக்கைகளையும் அறவே தவிர்த்து விடுங்கள்:

— எஸ். ஜி. ராமன், சீனிவாச நல்லூர்.

சுக போகத் தீவுகள்

5

பிரபஞ்சன்


"மக்காச் சோளமாவது, மண்ணாங்கட்டியாவது! நாட்டு நலனுக்காக இந்த மக்காச் சோளத்தைப் பயிரிடச் சொல்லவில்லை, சார், யாரும். ஒவ்வொருத்தர் பாக்கெட்டும் நிரம்பி வழிகிறது. ஒரு மிகப் பெரிய ஊழல், மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை நடந்து கொண்டிருக்கிறது. இந்த அயோக்கியர்களின் கறுப்புக் காரியங்களைக் கிழிகிழியென்று கிழித்து, நாட்டு மக்களுக்கு முன் இவர்களின் அயோக்கியத்தனத்தைப் போட்டு உடைக்கவில்லையென்றால் நான் நந்தன் இல்லை'' என்றார் நந்தன்.

ராமநாதன் யோசனையோடு தலையை அசைத்தார்.

''எனக்கும் சந்தேகமாகத்தான் இருந்தது... திடீரென்று நம் அரசியல்வாதிகள் எல்லாம், மக்காச் சோளத்தைப் பற்றிப் பிரமாதமாகப் பேசுகிறார்களே, என்ன காரணமாக இருக்கும் என்று நினைத்தேன். வைட்டமின் ஏ.பி.சி.டி. என்று இருபத்தாறு சத்துக்களும் மக்காச் சோளத்தில் இருக்கிறதாக ஒவ்வொருத்தனும் பேசுகிறான். இதில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி இரண்டுமே கூட்டுச் சேர்ந்து விட்டது. லாபம் வருகிறது என்றால், தற்காலிகமாகத் தாலி கட்டிக் கொள்ள எல்லோருமே தயாராய் இருக்கிறார்கள். ஊம்... எழுதுங்கள். நம் பத்திரிகைதானே, மஸ்டர் ரோல் ஊழலை வெளிப்படுத்தி நகர சபையையே கலைக்க வைத்தது. திட்டவட்டமாக ஊழல், என்று தெரிந்த பிறகு, அதைப் பொது மக்களுக்குச் சொல்லாமல் இருப்பது, பெரிய ஊழல் அல்லவா? பத்திரிகை தர்மமே மக்கள் நலம் தானே! ஆல் தி பெஸ்ட்''

நந்தனும் ராமனாதனும் கை குலுக்கிக் கொண்டார்கள்!

பத்திரிகை உலகில் புகழும் மரியாதையும் கொண்ட பெயர் நந்தன். பூர்வாசிரமத்துப் பெயர் முத்துசாமி. தஞ்சாவூர் காவிரிப் படுகையில் பிறந்த முத்துசாமிக்கு எழுத்தின் மேல் மோகம் ஏற்பட்டது பதினைந்தாவது வயதில். கவிதைகள், கதைகள் என்று சில எழுதிச் சென்னைப் பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பி வைத்தான். சில பிரசுரமாயின. யுத்தத்துக்கு முந்தைய காலம். இருபத்து ஐந்து ரூபாய் கட்டினால், பதினான்கு நாட்கள் தென்ன கரயில் உருண்டோடும் எல்லா ஊர்களிலும் சஞ்சரிக்கலாம், என்கிற சலுகை இருந்தது. பதின்மூன்று நாட்கள் ரயிலிலேயே வாசம் செய்து, கடைசி நாள் சென்னைக்கு வந்து சேர்ந்தான் முத்துசாமி. பவழக்காரத் தெருவில் அந்தப் பத்திரிகைக் காரியாலயத்துக்குக் காலை பத்து மணி போல் வந்து, ரயில் அழுக்கால் கன்னங்கரேலென்று ஆகி இருந்த வெள்ளைச் சட்டை வேஷ்டி இரும்பு டிரங்க் பெட்டி



சகிதம் தன் முன் நிற்கும் பதினாறு, பதினேழு வயது இளைஞனைப் பார்த்த பத்திரிகை ஆசிரியர் சஞ்சீவி திடுக்கிட்டுப் போனார்.

''உட்கார்'' என்றார் சஞ்சீவி.

முத்துசாமி அமர்ந்தான்.

''என்ன விஷயம் சொல்.''

''நான்தான் சார் முத்துசாமி. உங்கள் பத்திரிகையில் கதைகளும் கவிதைகளும் எழுதியிருக்கிறேனே....''

அவர் நெற்றி சுருங்கியது.


''மன்னார்குடி முத்துசாமியா? சந்தோஷம்!''

கொண்டு வந்திருந்த மூன்று கதைகளை அவர் முன் நீட்டினான் அவன்.

''படிக்கிறேன்... பின் பக்கம் குளியல் அறை இருக்கு. போய்க் குளி. நல்ல சட்டை வேஷ்டி இருந்தால் உடுத்துக் கொள். முதலாளி வரும் நேரம். இந்தக் கோலத்தில் உன்னைப் பார்த்தால், உன் எழுத்தையும் குளிப்பாட்ட வேண்டும் என்பார்.''

அவன் குளித்து, துவைத்த ஆடைகளை அணிந்து ஆசிரியர் முன் வந்து அமர்ந்தான்.

''இது வேண்டாம். இரண்டு கதைகளை எடுத்துக் கொள்கிறேன்'' என்று ஒரு கதையை அவனிடமே திருப்பிக் கொடுத்



தார். ''ஐயர்'' என்று உள் பக்கம் திரும்பிக் குரல் கொடுத்தார். மேலே வெறும் பூணூல் மட்டும் அணிந்து, வேஷ்டியில், வெற்றிலை குதப்பிய வாயோடு வந்த 'ஐயர்' என்ற அந்த மனிதரிடம் ''மன்னார்குடி முத்து சாமிக்கு, இரண்டு கதைகளுக்கான சன் மானம் என்று எழுதிக் கொண்டு, இவருக் குப் பத்து ரூபாய் கொடுங்கள்'' என்றார்.

கதைக்கு ஐந்து ரூபாய் கிடைத்த சந்தோ ஷத்தில் இருந்த முத்துசாமியிடம்,

''எப்போ ஊருக்குப் பயணம்?'' என் றார்.

''இங்கேயே வேலை கிடைத்தால் தங்கி விடலாம் என்றிருக்கேன்'' என்றான் முத்து சாமி. மதியம் அவருடன், மணி ஐயர் கபே யில் சாப்பாடும், மாலை டிபனும் சாப் பிட்டான். இரவு ஏழு மணிக்கு மேல் வந்த முதலாளியுடன் அவர் அறைக்குப் பேசப் போய் விட்டார் சஞ்சீவி. ஆசிரியர் அறை யிலேயே அமர்ந்திருந்தான் அவன்.

சற்று நேரத்துக்கெல்லாம் முதலாளி அறையிலிருந்து பெரும் சப்தம் கேட்டது. கண்டிப்பாக சஞ்சீவியின் சுக்கு உடம்பி லிருந்து அந்தக் கத்தல் எழச் சாத்தியம் இல்லை. ஒரு சிங்கத்தின் கர்ஜனையும் அதன் முன் பூனையின் மியாவ் மியாவும் போல் அவர்கள் பேசுவதை உவமித்துக் கொண்டு அமர்ந்திருந்தான் முத்துசாமி.

''நீ எல்லாம் ஒரு பத்திரிகை ஆசிரியன்... உம்....''

ஆசிரியர் என்னமோ முனகியது கேட் டது.

''எகனை முகனை தெரியுமாய்யா உனக்கு?''

தொடர்ந்தாற் போல் அந்தச் சண்டை மேலும் ஒரு மணி நேரம் நீடித்தது.

கதவைப் படாரென்று திறந்து கொண்டு வெளியே வந்தார் சஞ்சீவி. கதவருகில் நின்று கொண்டிருந்த முதலாளியைப் பார்த்து ஒரு நாடக பாணியில் சொன்னார்:

''மன்னவனும் நீயோ? வளநாடும்
உனதோ?
உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்?—
என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்
துண்டோ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?''

முதலாளி கபடமாக சஞ்சீவியைப் பார்த்து அதே பாவனையுடன் சொன்னார்:

''பேனா எடுத்தவன் எல்லாம் பிரமனா?
நீ
போனால் இனியொருத்தன் வாரானா?
— வீணாய்



சர்வர்: வேற, என்ன சார் வேணும்?

சாப்பிட்டவர்: 'பில்லுக்குப் பணம்!'

— ஆர். வசந்தகுமார்.

மலையோரம் நின்று மனம்போன வாறு குலைக்காமல் கீழ் இறங்கு!''

சஞ்சீவி பேசாமல் படி இறங்கிக் கீழே போனார். முதலாளி முத்துசாமியிடம் வந்தார்.

''நீ கதை எழுதுவாய் என்பது எனக்குத் தெரியும். புரூஃப் பார்க்கத் தெரியுமா?''

''தெரியாது சார்.''

''அது ஒன்றும் கம்ப சூத்திரம் இல்லை. நான் கற்றுத் தருகிறேன். வருகிற கதையை எனக்குப் படித்துக் காட்டு. நான் சொல்வதைப் பிரகரி. இந்த நிமிஷம் முதல் நீதான் பத்திரிகை ஆசிரியர்.''

முதலாளி சொல்லி முடிக்கையில், ''முத்துசாமி, கீழே வா'' என்று ஒரு குரல் தெருவிலிருந்து கேட்டது. முத்துசாமி பால்கனிக்குப் போய்த் தெருவைப் பார்த்தான். நடுத் தெருவில் வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு நின்றிருந்தார் ஆசிரியர் சஞ்சீவி. இவன் தலையைக் கண்டதும், ''கீழே இறங்கி வாய்யா! நானே நடுத் தெருவில் நிற்கிறேன். அங்கே உனக்கென்ன வேலை'' என்று கத்தினார்.

முத்துசாமி அமைதியாகச் சஞ்சீவியின் நாற்காலியில் போய் அமர்ந்தான். அது வசதியாகவே இருந்தது.

''கருங்காலி! கீழே வாடா, அல்ப திலகமே !'' என்று ஒரு சப்தம் கீழிருந்து கேட்டது....

முத்துசாமி தன் திறமையை நாளடைவில் நிரூபித்தான். ஒரு படத்துக்கு முதலாளியே எழுதியிருந்த விமர்சனத்தையே முத்துசாமி விமர்சித்தான். 'ரங்காராவும், கண்ணாம்பாவும் அப்பா அம்மாவாக நடித்திருக்கிறார்கள்' என்று அவர் எழுதிய வரியை அடிக்கோடிட்டு, 'இது விமர்சனமா அல்லது செய்தியா?' என்று கேட்டான்.

''சார்! அவர்கள் நடித்திருப்பதுதான் மக்களுக்குத் தெரியுமே! தவிரவும், அவர்கள் அப்பா அம்மாவாக இல்லாமல் வேறு எந்தப் பாத்திரத்தில் வருவார்கள்? எனவே இது விமர்சனம் ஆகாது. 'அவர்கள் தத்ரூபமாக நடித்தார்கள்', அல்லது 'வாங்கின கூலிக்கு மாரடித்தார்கள்', அல்லது 'ஊம்... அவர்களும் வந்து போனார்கள்' என்பது தான் விமர்சனம்.''

ஒரு பதிலும் சொல்லாமல், முதலாளி எழுந்து வீட்டுக்குப் போய் விட்டார். முத்துசாமி சஞ்சீவிக்கு நேர்ந்த கதி தனக்கும் நேர இருக்கிற நம்பிக்கையில், கொடியில் காய்ந்து கொண்டிருந்த ஜட்டி, பனியன், குளிக்கையில் பயன்படுத்தும் கோவணம், காசித் துண்டு ஆகியவற்றை எடுத்து உதறி, டிரங்கில் அடுக்கிக் கொண்டிருக்கையில் முதலாளி வீட்டிலிருந்து ஆள் வந்தான். அவன் கையில் ஒரு கடிதம். முத்துசாமி கடிதத்தை வாங்கிப் பிரித்தான். ஒரு துண்டு சீட்டும், ரூபாய் நோட்டுக்களும் இருந்தன. முதலாளி எழுதியிருந்தார். 'நீ சொன்னது சரி, விமர்சனம் எதுவெனப் புரிந்து கொண்டேன். என் மகிழ்ச்சிக்கு அடையாளமாக இத்துடன் ரூபாய் இருபத்தைந்து பெற்றுக் கொள்....'

அதிலிருந்து சினிமா விமர்சனம் முத்துசாமி வசம் மாறிற்று. சிறிது காலம் சென்றதும் சினிமா விமர்சனம் சலித்துப் போய் சமூக விஷயங்களில் கவனம் செலுத்தத் தொடங்கினான் முத்துசாமி. அந்தக் காலக் கட்டத்தில்தான் அவன் நந்தன் ஆனான்...

கோகிலா வீட்டு வரவேற்பரை மிகுந்த வித்தியாசமாய் இருந்ததைக் கவனித்தான் கிருஷ்ணமூர்த்தி. தரைப் பகுதியிலிருந்து அவசரமாய் இறங்கிய, சதுரமான பள்ளமே, தரை விரிப்பும், கலைப் பொருள்களும் கொண்ட அழகிய வரவேற்பறையாகியிருந்தது.

கோகிலா வெளியில் இருந்து இன்னும் திரும்பியிருக்கவில்லை. மாமா இன்னும் அரை மணியில் வருவதாக ஃபோன் செய்திருந்தார். விநோதினி அவனை உட்கார வைத்து விட்டு உள்ளே போனாள். ஐந்து நிமிடங்களில் திரும்பிய போது குளித்து, உடை மாற்றியிருந்தாள்.

''மாலையில் ஒருமுறை குளித்தால்தான் எனக்குச் சரிப்படும்'' என்றவள், அவனுக்கு எதிர் இருக்கையில் அமர்ந்தபடி அவனைக் கேட்டாள்.

''என்ன வேர்த்து விருவிருத்துப் போய் வந்திருக்கிறீர்கள். அரசியல்வாதிகள் வியர்க்கும் அளவுக்கு உழைப்பதைப் பார்த்தால் ஆச்சர்யமாக இருக்கிறதே! தேர்தல் வருகிறதா என்ன?''

''காலையிலிருந்து மக்காச் சோளத்தைப் பற்றிய குறிப்பைத் தேடி அலைகிறேன். நீங்கள் கிண்டல் அடிக்கிறீர்கள். அதென்ன அரசியல்வாதிகள் உழைக்காதவர்களா? தவிரவும் நான் அரசியல்வாதி இல்லை.''

''லோட்டா அரசியல்வாதி. அதாவது சின்ன அரசியல்வாதி. அதாவது வட்டம்.''

''நீங்கள் இப்படி அரசியலை வெறுக்கிறீர்கள். உங்கள் அம்மா, தலைவருக்கு வலது கை. தலைவரின் தத்துவவாதி, சிநேகிதி, வழிகாட்டி.''

''என் அம்மாவுக்குப் பிடிப்பது எல்லாம்

எனக்குப் பிடிக்க வேண்டுமா, என்ன? இயற்கை நியதிப்படி, ஒவ்வொரு மனிதரும் இன்னொரு மனிதர் மூலம் இந்த உலகத்துக்கு வர வேண்டியிருக்கிறது. நான் இங்கு வர என் அம்மா உதவியாக இருந்தது ஒரு சந்தர்ப்பமே தவிர, எனக்கு என் அம்மாவின் செயல் எதுவும் பிடிக்காது.''

கிருஷ்ணமூர்த்தி சில கணங்கள் யோசித்தபடி இருந்தான். பிறகு சொன்னான்.

''விநோதினி! உங்களைப் போன்ற அறிவு ஜீவிகள் அரசியலை ஏன் புறக்கணிக்கிறீர்கள் என்று எனக்கு விளங்கவில்லை. அரசியல், அயோக்கியர்களின் புகலிடம் என்று சொல்லி விட்டு ஒதுங்கினால் ஆயிற்றா? உங்களைப் போன்றவர் அதில் ஈடுபடாத காரணத்தால்தானே, முட்டாள்களும் அயோக்கியர்களும் அந்தப் பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொண்டார்கள். தேவதைகள் பிரவேசிக்கத் தயங்குகிற இடத்தில் நாய்கள்தானே புகும். அப்படியிருக்க, சும்மா வெளியில் இருந்து கிண்டல் அடிப்பதோடு உங்கள் கடமைகள் முடிந்து விட்டன என்று நினைப்பது ஒரு வகையான நபும்சகத்தனம் இல்லையா?''

விநோதினி அவனை உறுத்துப் பார்த்தாள். அவள் கண்களில் குறும்பு வழிந்தது.

''ச்...ச்...ச்...ச்...'' என்றாள் விநோதினி, முகத்தை ஆச்சர்யமாய் வைத்துக் கொண்டு.

''என்ன?''

''அரசியல் புனருத்தாரணம் செய்யப் பத்தாவது அவதாரம் எடுத்திருக்கிறவரைப் பார்க்கப் புல்லரிக்கிறது.''

டீ—பாயின் மேல் வைத்திருந்த பேப்பரை எடுத்து அவள் மேல் வீசினான் மூர்த்தி. விநோதினி அதை லாவகமாகப் பிடித்து விட்டுச் சொன்னாள். அவள் முகம் சிந்தனையால் கனத்திருந்தது.

''சீனாவில் நடைபெற்ற அபினி யுத்தம் பற்றி அறிவீர்கள்தானே?''

''அபினி யுத்தம்? படித்திருக்கிறேன்.''

''உலக வரலாற்றில் பிரிட்டிஷ்காரர்களைப் போல், போர்க்களத்தில் ஈனத்தனமாக நடந்து கொண்டவர்கள் வேறு யாரும் கிடையாது. கத்திக்குக் கத்தி என்பது தானே போர் நெறி? சீன மக்களுக்கு முன்னால் பிரிட்டிஷ்காரர்கள் அபினியையே தங்கள் போர் ஆயுதமாக ஏந்தினார்கள். கப்பல் கப்பலாக அபினியைக் கொண்டு போய், நேராகவும், திருட்டுத்தனமாகவும் சீனாவில் விற்றார்கள். அதற்குச் சாதகமாகச் சீனர்கள் அபினிப் பழக்கம் உடையவர்கள் என்கிற கட்டுக் கதை புனைந்தார்கள். உண்மையில் சீனர்கள் டீ குடிப்பவர்களே தவிர, அபினியின் அடிமைகள் அல்லர். ஆனால், 'ஒரு நாயைக் கொல்ல வேண்டுமானாலும், அதைப் பைத்தியம் என்கிற பட்டம் கட்டிக் கொல்' என்கிற ராஜதந்திரப் பழமொழிக்கொப்ப, சீனர்கள் ஏதோ அபினிப் பைத்தியம் என்று சொல்லிக் கொண்டு இந்தியாவிலிருந்தும், துருக்கியிலிருந்தும் அபினியை எடுத்துச் சென்று அவர்கள் தலையில் கட்டி அவர்களின் வெள்ளிப் பணத்தைச் சுரண்டினார்கள். 1790—ம் வருஷம் மட்டும் 4054 பெட்டி அபினியை சீனர்களின் தலையில் கட்டினார்கள் பிரிட்டிஷ்காரர்கள். ஒரு பெட்டி என்பது நான்கு மணங்கு. யோசித்துப் பாருங்கள். மக்களை மயக்கத்தில் ஆழ்த்தி, அவர்களின் உழைக்கும் ஆர்வத்தை மட்டுப்படுத்தி, அவர்களின் குடும்ப இன்பத்தைச் சிதைத்து, அவர்கள் ஆத்மாவையே சீரழித்தார்கள் பிரிட்டிஷ்காரர்கள். ஒரு கட்டத்தில் சீன மக்கள் விழித்துக் கொண்டார்கள். விழித்துக் கொண்ட மக்கள், அந்நிய சக்திகளோடு நடத்திய போராட்டம்தான் அபினி யுத்தம்.''

''சரி! அதுக்கும் நம்மூர் அரசியலுக்கும் என்ன சம்பந்தம்?''

''இங்கேயும் ஒரு அபினி யுத்தத்தை நடத்த வேண்டியிருக்கிறது, மூர்த்தி. சீனர்களின் தலையில் பிரிட்டிஷ்காரர்கள் அபினியைக் கட்டியது மாதிரி, நம் மக்கள் தலையில் சினிமா, வெறும் பிராந்திய மொழி வெறி, ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன என்கிற விட்டேத்திப் போக்கு, சமூகம் என்பது நான்தான், நான் செய்யும் நன்மையும் தீமையும் சமூகத்தைப் பாதிக்கும் என்று அறியாத மடமை, ஆகிய அபினியை உங்களைப் போன்றவர்கள் இந்தியர்களின் தலைகளில் ஏற்றி வைத்திருக்கிறீர்கள். மனிதனுக்குப் பசிக்கும் போதுதான், உணவைப் பற்றிய ஞாபகம் வரும். அதைத் தேட முயல்வான். அவன் உழைப்புக்கு ஏற்ப ஊதியம் வேண்டும் என்று விரும்புவான். கிடைக்காவிட்டால் போராடுவான். மனிதனின் போராட்டத்தைத் திசை திருப்பத்தானே இங்கு சினிமா இருக்கிறது. சினிமா கூட இங்கு மக்களின் சார்பில் செயல்படவில்லை. அரசியல்வாதிகளின் கையில், அவர்களுக்காகவே செயல்படுகிறது. மனிதனைச் சினிமா மயக்கத்தில், மொழி வெறி மயக்கத்தில், ஆழ்த்தி விட்டு நீங்கள் சுரண்டுகிறீர்கள்.''

''விநோதினி! என்னையா சுரண்டல்காரன் என்கிறீர்கள்?''

''நேராக இல்லை. உங்கள் மாமா என்கிற சுரண்டல்காரருக்கு, நீங்கள் ஒரு தோள் துண்டு, கைத்தடி, ஒரு கூஜா. நீங்கள் நேராகச் சுரண்டுவதில்லை. சுரண்டுவதற்கு மூளை உதவி செய்கிறீர்கள்.''

''எனக்குப் புரியவில்லை.''

''யாரோ ஒரு முதலாளியிடம் காசு வாங்கிக் கொண்டு, உணவு தானியம் பயிர் செய்து கொண்டிருந்த விவசாயிகளிடம், மக்காச் சோளம் பயிரிடச் சொல்கிறீர்கள். மக்காச் சோளம் மகத்தான உணவு என்று சொல்லி, அதை அரைத்து அட்டைப் பெட்டியில் சர்க்கரை கலந்து ஊற்றி விற்கிற ஒரு ஆளுக்காக, அரசு, அதிகாரிகள், அரசியல்வாதிகள் எல்லோரும் கூட்டுச் சேர்ந்து விவசாயிகளின் வாழ்க்கையையே மாற்றி அமைக்கிறீர்கள்.''


மாமாவும் கோகிலாவும் வந்து கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

●● காலையில் உற்சாகத்துடன் அலுவலகம் கிளம்பிச் சென்ற ரமேஷ் மாலை 100 – 101 டிகிரி ஜுரத்துடன் திரும்பினார். இது அன்றாடப் பிரச்னையாகவே ஆகி விட்டதும் தமது குடும்ப டாக்டரை அணுகினார். எல்லாப் பரிசோதனைகளும் செய்தும் கோளாறு என்ன என்று கண்டு பிடிக்க முடியவில்லை...

●● ராமசாமிக்கு முதுகுப் புறத்தில் விவரிக்க முடியாத ஒருவித வலி தொடர்ந்து தொல்லையளித்துக் கொண்டேயிருந்தது. எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் ஒரு கோளாறும் தெரியவில்லை. ஆனால் வலி மட்டும் தொடர்ந்தது.

இந்த இருவரது பிரச்னையும் என்ன என்பதைக் கண்டறிய உதவியது 'நியூக்ளியர் மெடிசின்' என்று சமீப காலமாகப் பிரபலமாகி வரும் அணு மருத்துவம் தான். ரமேஷுக்கு மார்பு, முதுகு மற்றும் முழங்கால் எலும்புகளில் காச நோய் தாக்கியிருப்பது தெரிய வந்தது! ராமசாமிக்கு எலும்பு



• இதய நோயாளி கார்டியாக்ஸ்ட்ரெஸ் டேபிளில் படுத்திருக்கிறார். சைக்கிள் பெடல் போன்ற அமைப்பை அவர் இயக்க, அவரது இதயம் எந்த அளவுக்கு ஒத்துழைக்கிறது என்பதைக் கம்ப்யூட்டர்கள் கவனித்து, கணித்து, வரைபடமாக்கிவிடும்.

களில் கான்சர் பரவ ஆரம்பித்திருந்தது வெளியாயிற்று.

அணு சக்தியைக் கொண்டு மின்சாரமும் போர் ஆயுதங்களும் தயாரிக்கலாம் என்று அறிந்த நமக்கு அதன் மருத்துவ உபயோகங்களை விளக்கினார்கள் அப்போலோ மருத்துவமனையின் நியூக்ளியர் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் ஆர்க்காடு கஜராஜும் டாக்டர் திருமூர்த்தியும்.

'ரேடியோ ஆக்டிவ் ஐசோடோப்' எனப்படும் அணுசக்திக் கூறுகளை உடலுக்குள் செலுத்தினால் அவை ரத்தத்தில் கலந்து உடம்பு முழுவதும் பரவிவிடும். அந்த அணுசக்திக் கூறுகள் ஒவ்வொரு பாகத்தையும் சென்றடையும் போது ஏற்படும் மாற்றங்களை கம்ப்யூட்டரோடு இணைந்த ஒரு கருவியின் திரையில் வண்ணப் பிரதிபலிப்புகளாகக் காணலாம். 'ஸ்கானிங்' மற்றும் 'அல்ட்ராசவுண்ட்' முறைகளில் அறிவது போல், இந்தப் பிரதிபலிப்புகளின் தன்மையைக் கொண்டு, எந்த நோய், உடலின் எந்தப்

மருத்துவருக்கு உதவும் அணுக்கதிர்கள்!

பகுதியை, எந்த அளவிற்குத் தாக்கியிருக்கிறது என்று அறியலாம். உதாரணமாக, மயோகார்டியல் இஸ்கீமியா * என்ற ஒரு வகை இதய நோயைக் கண்டறிய, தாலியம் — 201 என்ற வகை அணுசக்திக் கூறுகளை உடலில் செலுத்த வேண்டும். இதயத்தின் ஆரோக்கியமான மயோகார்டியல் செல்களிலெல்லாம் இந்தக் கூறு ஊடுருவி நுழைந்து விடும்.

ஆனால், பழுதுபட்ட செல்கள் இவற்றை ஏற்க முடியாமல் நிராகரித்து விடும். உடலுக்குள் செலுத்தப்பட்ட அணுசக்திக் கூறுகளின் போக்கை கம்ப்யூட்டர் வண்ண வரைபடமாக்கிக் காட்டி விடும். இந்த வரைபடத்தைக் கொண்டு இதயத்துக்கு எந்த அளவு இரத்தம் செல்கிறது, இதயத்தின் எந்தப் பகுதி எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பனவற்றைக் கூறி விட முடியும். இதயத்துக்குள் ஒரு சிறு குழாயைப் புகுத்தி, அதன் மூலம் ஒரு 'டை'யைச் (வர்ணத்தை) செலுத்தி, செய்யும் பழைய பரிசோதனை முறையைக் காட்டிலும் ஐசோடோப் முறை சுலபமான, ஆபத்து குறைவான முறைதான். இதய நோய் தவிர, தைராயிடு சுரப்பிக் கோளாறுகள், சிறுநீரகக் கோளாறுகள், கான்சர் போன்றவற்றைக் கண்டுபிடிக்கவும் இம்முறை பயன்படுகிறது.

அணுசக்திக் கூறுகளின் ஆயுள் காலம் அவற்றின் தன்மையைப் பொறுத்துச் சில மணி நேரங்கள் முதல் சில நாட்கள் வரை என்று வரையறுக்கப்பட்டிருப்பதால் பரிசோதனைக்கு வருவோர் முன்கூட்டியே நேரம் குறித்துக் கொள்ள வேண்டும். தவிர, மருத்துவரின் அறிவுரைப்படி சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாகத் தைராயிட் சுரப்பிக் கோளாறு இருப்பதை உறுதி செய்யப் பரிசோதனை மேற்கொள்ளும் பட்சத்தில் பரிசோதனைக்கு வரும் நோயாளி குறைந்தபட்சம் கடந்த ஒரு மாத காலத்துக்காவது ஐயோடின் சத்துள்ள எந்த வகைப் பொருளையும் உட்கொண்டிருக்கக் கூடாது.


சில நேரங்களில் புற அறிகுறிகளும் வழக்கமான பரிசோதனைகளும் ஒருவருக்குக் குறிப்பிட்ட நோய் இருப்பதாக ஒரு தவறான முடிவுக்கு வரச் செய்யலாம். அப்போது அந் நோய்க்கான சிகிச்சையை அளித்தால் உடல் நிலையில் அபிவிருத்தி இராது. இத்தகைய குழப்பமான சந்தர்ப்பங்களில் அணு மருத்துவம் கைகொடுக்கக் கூடும்.

"அணுக் கதிர்களால் கதிரியக்கம் ஏற்பட்டு கான்சர் போன்ற நோய்கள் வருமென்றும் அணு சக்தி உற்பத்தியின் போது வெளியேறும் கழிவுகள் மிகவும் ஆபத்தானவையென்றும் தான் பொதுவாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அணுக் கதிர்களை உடலுக்குள்ளேயே செலுத்தி நோய்களைக் கண்டறியலாம் என்கிறீர்களே...?" என சந்தேகத்துடன் கேட்டோம்.


"இயற்கையில் உலகில் கதிர்வீச்சு எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவு வீரியம் கொண்ட கதிர்களைத்தான் உடலுக்குள் செலுத்துகிறோம். பார்க்கப் போனால், நமது உடலுறுப்புக்கள் கூட அணுக்களால் ஆனவைதான். அவற்றுக்கு இருக்கும் வீரியத்தை விட நாங்கள் உடலுக்குள் செலுத்தும் அணுக் கதிர்களுக்கு வீரியம் குறைவு தான். அதனால் பச்சிளம் குழந்தைகளைக் கூட இப் பரிசோதனைக்கு உட்படுத்தலாம்" என்றனர் அந்த மருத்துவர்கள்.

— சாருகேசி.

* இதயத்துக்கு இரத்தம் எடுத்துச் செல்லும் குழாய்கள் சில குறுகிப் போய், இதயத்துக்கு இரத்தம் குறைவாகச் செல்வதால் ஏற்படும் நோய்.



இந்த எல்லா நன்மைகளையும் உங்களுக்கு அளித்திட ஒரே ஒரு சேமிப்புத் திட்டத்தினால் மட்டுமே முடியும்.



யூனிட் இணைந்த இன்சூரன்ஸ் திட்டம்.

ரூ.300 முதல் ரூ.4000 வரை செலுத்தப்படும் வருடாந்திர தொகைகளுக்கு யூனிட் இணைந்த இன்சூரன்ஸ் திட்டம் (யூஎல்ஐபி.) பலவித நன்மைகளை அளிக்கிறது.

வருமானவரிச் சட்டம் 80சி பிரிவின் கீழ் வரிவிலக்கு; மேலும் உயர்ந்த பட்ச வருமானம்; ஏனெனில் நீங்கள் செலுத்தும் தொகையின் பெரும் பங்கு யூனிட்டுகளில் முதலீடு செய்யப்படுகிறது. இதனால் உங்களுக்கு அதிக லாப பங்கு (டிவிடெண்டு) கிடைக்கிறது. (இவ்வருட டிவிடெண்ட் 13.50%)

ஆயுள் காப்பு (அதிக பட்சமாக ரூ.40000 வரையில்) மற்றும் ரூ.15000 வரையிலான இலவச விபத்துக் காப்பு.

இவைதவிர திட்ட முதிர்வில் முதிர்வு போனஸ் வழங்கப்படுகிறது.

முதிர்வு போனஸ் உடன் கூடிய சேமிப்பின் தோராயமான வளர்ச்சி

திட்டத்தில் சேருகையில் வயது	இலக்குத் தொகை 10 வருட திட்டத்தில் ரூ.40000/-	இலக்குத் தொகை 15 வருட திட்டத்தில் ரூ.39000/-
25 வருடம்	ரூ.74850/46	ரூ.1,00,966.89
35 வருடம்	ரூ.74259/41	ரூ. 99,302.72
45 வருடம்	ரூ.72338/47	ரூ. 94,310.22
50 வருடம்	ரூ.70447/09	———

18 வயதுக்கு மேல் 50 வயதுக்கு உட்பட்ட எவரும் இத் திட்டத்தில் சேரலாம்.

எனவே, இன்றே சரியான முடிவு செய்யுங்கள். யூனிட் டிரஸ்டின் ஏஜெண்டுகள், முக்கிய பிரதிநிதிகள் அல்லது ஸ்பென்சர் அண்டு கம்பெனி அல்லது கனரா வங்கியின் கிளைகளை தொடர்பு கொள்ளுங்கள்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்)
தலைமை அலுவலகம் பம்பாய் 400 020.

மண்டல அலுவலகம்,
45, செகண்ட் லைன் பீச், சென்னை 600 001,
போன்: 580938 / 587433.

• ஹைதராபாத் கிளை: 203/204 மோகன் கோர்ட் காம்ப்ளக்ஸ், இரண்டாவது மாடி, பஷீர் பாக், ஹைதிராபாத் 500 001. போன் 240030 • விஜயவாடா கிளை: செல்லப்பள்ளி மாளிகை கவர்னர்பேட், விஜயவாடா 520 002. போன்: 63964 • பெங்களூர் கிளை: முதல் மாடி, சேம்பர் ஆப் காமர்ஸ் கட்டிடம், கே.ஜி.ரோடு பெங்களூர் 560 009. போன்: 28739 • திருச்சூர் கிளை: 12/817 தெக்கமாடம் சாலை, திருச்சூர் 680 001. போன்: 24650 • கொச்சி கிளை: ஐந்தாம் மாடி, எல்.ஐ.சி. கட்டிடம், எம்.ஜி.ரோடு, எர்ணாகுளம், கொச்சி 682 011.

தமிழ்நாட்டின் எங்கள் முக்கிய பிரதிநிதிகள்
• கோயமுத்தூர், ஏ.தனபால், போன்: 34776. • மதுரை, எம். இராமமூர்த்தி, போன்: 36661/42179. • தஞ்சாவூர், கே. முத்துசாமி, போன்: 20374. • சேலம், என்.கே. இளங்கோவன், போன்: 51520. • திருச்சி, எம். இராமலிங்கம், போன்: 41282. • வேலூர், பி. நாராயணன், போன்: 21575. • கடலூர், என். பாலகிருஷ்ணன், போன்: 346/46. • நாகர்கோவில், என். சுபாஷ் சந்திர போஸ், போன்: 4449. • குன்னூர், எம். மாதவன் நம்பியார், போன்: 6253/7037.

UNIT TRUST OF INDIA

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்!

Sista's-UTI.1032.88 TM B

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 19

சிரிப்பும் நெருப்பும்

பூங்குழலி தன்னைப் படகுடன்சேர்த்துக் கட்டியிருந்த கட்டுக்களை அவிழ்க்க அவசர அவசரமாக முயன்றாள். அது அவ்வளவு இலகுவான காரியமாக இல்லை. சண்டாளப் பாவிகள்! கயிற்றைத் தாறுமாறாக விட்டு முடிச்சுக்கு மேல் முடிச்சாகப் போட்டிருந்தார்கள். பூங்குழலியின் சிறிய கத்தி படகின் அடியில் கிடந்தது. ஒரு கரத்துக்காவது விடுதலை கிடைத்தால் கத்தியை எடுத்துக் கட்டுக்களை அறுத்து எறியலாம். ஆனால் பாவிகள் மணிக் கட்டுகளைச் சேர்த்துத்தான் பலமாகப் பின்புறத்தில் கட்டியிருந்தார்கள். பூங்குழலி மிகவும் கஷ்டப் பட்டுக் குனிந்து பற்களினால் கத்தியின் பிடியைக் கௌவி எடுத்துக் கொண்டாள். பற்களினால் கௌவிய வண்ணமே கத்தியைப் பிடித்துக் கொண்டு கயிற்றை ஓரிடத்தில் அறுத்தாள். கைகளின் கட்டுச் சிறிது தளர்ந்தது. ஒரு கையை மிகவும் பிரயாசையின் பேரில் கட்டிலிருந்து விடுதலை செய்து கொண்டாள். பிறகு கயிறுகளை அறுப்பது சிறிது எளிதாயிற்று.

கட்டுக்களிலிருந்து முழுவதும் விடுவித்துக் கொள்வதற்கு ஏறக்குறைய ஒரு நாழிகை நேரம் ஆகிவிட்டது.

இந்தச் சமயத்தில் ஓடைக்கரை மீது காலடிச் சத்தம் கேட்டது. பிறகு ஒரு நிழல் தெரிந்தது. தன்னைக் கட்டிப் போட்டவர்களில் ஒருவன்தான் திரும்பி வருகிறான் போலும்! அல்லது தான் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு தப்பி வந்து விடாமல் பார்த்துக் கொள்வதற்காக ஒருவனைப் பின்னால் விட்டு வைத்துச் சென்றிருக்கிறார்கள் போலும்! அவன் தன் கண் முன்னால் தெரிந்ததும் கையிலிருந்த கத்தியை அவன் மீது எறிந்து கொன்று விடுவது என்று பூங்குழலி தீர்மானித்துக்கொண்டு அதற்கு ஆயத்தமாகக் கத்தியைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் எத்தகைய ஏமாற்றம்!

''பூங்குழலி! பூங்குழலி!'' என்று சேந்தன் அமுதனுடைய குரல் கேட்டது.

அடுத்த வினாடி அமுதனுடைய பயப் பிராந்தியுற்ற முகம் ஓடைக் கரையின் மேலிருந்து எட்டிப் பார்த்தது.

அமரர் கல்கி

பூங்குழலி கத்தியை இடுப்பில் செருகிக் கொண்டாள்.

அமுதனும் அவளைப் பார்த்துவிட்டான். ''பூங்குழலி! நீ உயிரோடு இருக்கிறாயா?'' என்று சொல்லிக் கொண்டே பாய்ந்து ஓடி வந்தான்.

''நான் உயிரோடிருப்பது உனக்குக் கஷ்டமாயிருக்கிறதாக்கும்! வேண்டுமானால் உன் கையாலேயே கொன்று விட்டுப் போய் விடு! ஆனால் அவ்வளவு தைரியம் உனக்கு எங்கிருந்து வரப் போகிறது?'' என்றாள் பூங்குழலி.

''சிவ சிவா! எவ்வளவு கொடூரமான வார்த்தைகளைக் கூறுகிறாய்? நான் எதற்காக உன்னைக் கொல்லப் போகிறேன்? நீதான் உன் வார்த்தைகளினால் என்னைக் கொல்லுகிறாய்!'' என்றான் அமுதன்.

''பின்னே, சற்று முன்னாலேயே ஏன் வந்திருக்கக் கூடாது? கட்டுக்களை நானாக அறுத்து விடுவித்துக் கொள்ளுவதற்கு எவ்வளவு கஷ்டப் பட்டுப்போனேன்,தெரியுமா?'' என்று சொல்லிக் கொண்டே பூங்குழலி எழுந்து நிற்க முயன்றாள். கால்கள் கயிறுகளில் தாறு மாறாகச் சிக்கிக் கொண்டிருந்தபடியால் தடுமாறி விழப் பார்த்தாள்.

அமுதன் அலறிப் புடைத்துக் கொண்டு அவளைப் பிடித்து விழாமல் தடுத்தான்.

''ஐயையோ! இப்படியா பாவிகள் உன்னைக் கட்டிப் போட்டு விட்டுப் போனார்கள்? உடம்பெல்லாம் தடித்துப் போயிருக்கிறதே!'' என்றான்.

''இப்போது இவ்வளவு கரிசனப் படுகிறாயே? சற்று முன்னாலேயே வருவதற்கு என்ன?''

''மறுபடியும் அப்படியே கேட்கிறாயே? உனக்கு இப்பேர்ப்பட்ட ஆபத்து வந்திருக்கிறது என்று நான் என்ன கண்டேன்! நீ என்னைப் 'போ' 'போ' என்று விரட்டினாய். நான் போய்க் கொண்டிருந்தேன்.....''

''பின், எதற்காகத் திரும்பி வந்தாய்? ஒரு வேளை நான் செத்துப் போயிருந்தால் என் உடலைத் தகனம் செய்து விட்டுப் போகலாம் என்பதற்காகவா?''

''சிவபெருமான் தொண்டையில் விஷத்தை வைத்துக் கொண்டார்; நீ நாக்கிலேயே வைத்துக் கொண்டிருக்கிறாய். உனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்கலாம்என்று உன் அண்ணி சொன்னதைக் கேட்டு ஓடோடியும் வந்தேன். அதற்கு நல்ல பரிசு கிடைத்தது!''

அதற்குள் படகிலிருந்து ஓடைக் கரையில் இறங்கியிருந்தாள் பூங்குழலி.

''இந்தக் கத்தியை உன்மீது எறியலாம் என்றிருந்தேன். நீ தப்பித்தாய். இதே கத்தியினால் என் அண்ணியை முதலில் குத்திக் கொன்றுவிட்டுத்தான் மறுகாரியம் பார்க்கப் போகிறேன். அந்தச் சண்டாளி எங்கே இருக்கிறாள்?''

''என்னை விட்டுவிட்டு உன் அண்ணியின் பேரில் எதற்காகப் பாய்கிறாய்? அவள் பேரில் எதற்காக இத்தனை கோபம்? உன்னைப்பற்றி எனக்கு அவள் சொன்னது குற்றமா?.......''

''அவள்தான் என் அத்தையைக் காட்டிக் கொடுத்தவள். புதர் மறைவில் அவள் யாருடனோ இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்ததை நீ கூடத்தான் பார்த்தாயே?'' என்றாள் பூங்குழலி.

''நீ நினைப்பது தவறு! உன் அண்ணி, யாருடன் என்ன இரகசியம் பேசிக் கொண்டிருந்தாளோ, என்னமோ? உன் அத்தையை அவள் காட்டிக் கொடுக்க வில்லை என்பது நிச்சயம். உன் அத்தையைப் பலாத்காரமாகப் பிடித்துக் கொண்டு போனவர்கள் உன் அண்ணியையும் மரத்தோடு சேர்த்துக் கட்டி விட்டுப் போய் விட்டார்கள். அவளுடைய தலையில் அடித்துக் காயப்படுத்தி விட்டும் போய் விட்டார்கள்....''

''இது என்ன வேடிக்கை? நம்புவதற்கு முடியவில்லையே? உன்னை அவள் ஏமாற்றி விட்டிருக்கிறாள்! நல்லது; நீ ஏன் திரும்பி வந்தாய், அண்ணியை எவ்விடத்தில் பார்த்தாய், — எல்லாம் விவரமாகச் சொல்லு! என்று பரபரப்புடன் பூங்

குழலி கேட்டாள்.

சேந்தன் அமுதன் அவ்வாறே விவரமாகக் கூறினான். அவன் தஞ்சாவூர் செல்லும் சாலையில் போய்க் கொண்டிருந்தான். பூங்குழலியைப் பிரிந்து போக மனமின்றித் தயக்கத்துடனேதான் போய்க் கொண்டிருந்தான். அப்போது பக்கத்துக்காட்டிலிருந்துஏதோ கூச்சலும் அலறும் குரலும் கேட்டன. பலர் விரைந்து நடந்து வரும் சத்தமும் கேட்டது. சேந்தன் அமுதன் சாலை ஓரத்து மரம் ஒன்றின் பின்னால் மறைந்து கொண்டான். கையில் வேல் பிடித்த வீரர்கள் ஏழெட்டுப் பேர் காட்டு வழியாகத் திடுதிடுவென்று நடந்து வந்து இராஜ பாட்டையில் பிரவேசித்தார்கள். அவர்களுக்கு மத்தியில் ஒரு பெண் பிள்ளை இருப்பது போலத் தோன்றியது. மனிதர்களிடையில் சற்று இடைவெளி தெரிந்த போது மத்தியில் இருந்தவள் பூங்குழலியின் அத்தை மாதிரி தோன்றினாள். அவள் அத்தையாக இருக்க முடியாது அது தன்னுடைய மனப்பிரமை என்று சேந்தன் அமுதன் எண்ணிக் கொண்டான்.

அந்த வீரர் கூட்டம் சென்ற பிறகும் காட்டிற்குள்ளேயிருந்து ஒரு பெண் பிள்ளையின் கூக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது. சேந்தன் அமுதன் முதலில் 'நமக்கு என்னத்திற்கு வம்பு? நம் வழியே நாம் போய் விடலாமா?' என்று நினைத்தான். ஆனாலும் மனம் கேட்கவில்லை. யார் அலறுவது என்று பார்த்து, தன்னால் ஏதேனும் உதவி செய்யக் கூடுமானால் செய்யலாம் என்று எண்ணிக் கூக்குரல் வந்த திசையை நோக்கிப் போனான். அங்கே ராக்கம்மாள் மரத்தில் கட்டப்பட்டிருந்ததைக் கண்டான். அவள் தலையிலிருந்து இரத்தம் வழிந்து முகமெல்லாம் ஒரே கோரமாயிருந்தது. அமுதனுக்கு அருகில் நெருங்கவே பயமாயிருந்தது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சென்று கட்டுக்களை அவிழ்த்து விட்டான். அவிழ்க்கும்போதே 'இந்த அக்கிரமம் யார் செய்தது? எதற்காகச் செய்தார்கள்? சற்று முன் சாலையில் வந்து ஏறின மனிதர்கள் யார்? அவர்கள் மத்தியில் ஒரு பெண் பிள்ளையும் போனது போலிருந்ததே? அவள் யார்?' என்றெல்லாம் கேட்டான். 'ஆம், தம்பி! அவர்கள் உன் பெரியம்மாவைக் கட்டி இழுத்துக் கொண்டு போகிறார்கள். அதைத்தடுப்பதற்குநான் முயன்றேன். அதற்காகத்தான் என்னை இப்படி அடித்துக் கட்டிவிட்டுப் போனார்கள். உன் மாமன் மகளும் பெரியம்மாவும் படகிலேறிப் போய்க் கொண்டிருந்தார்கள். படகிலிருந்துதான் பெரியம்மாவைக் கட்டி இழுத்து வந்தார்கள். பூங்குழலியின் கதி என்ன ஆயிற்றோ தெரியவில்லை. ஓடிப் போய்ப் பார்!' என்றாள். சேந்தன் அமுதன் திடுக்கிட்டுப் பூங்குழலியைத் தேடிக் கொண்டு புறப்பட்டான். அச்சமயம் ராக்கம்மாள், 'கொஞ்சம் பொறு, தம்பி! பூங்குழலியும் அந்த ஊமைப் பிசாசும் படகில் ஏறி எங்கே புறப்பட்டார்கள்? உனக்குத் தெரியுமா? உன்னை ஏன் விட்டுவிட்டுப் போனார்கள்? நீ எங்கே தனியாகக் கிளம்பினாய்?' என்று கேட்டாள். இப்படி அவள் கேட்டது, முக்கியமாக 'ஊமைப் பிசாசு' என்று சொன்னது, சேந்தன் அமுதனுக்குப் பிடிக்கவில்லை. 'எல்லாம் அப்புறம் சொல்லுகிறேன்' என்று கூறிவிட்டு, கால்வாயை நோக்கி ஓடிவந்தான். பூங்குழலியையும் அந்த மனிதர்கள் அடித்துப் போட்டிருப்பார்களோ, ஒரு வேளை கொன்றே இருப்பார்களோ என்ற பதை பதைப்புடனே வந்தான். பூங்குழலி உயிரோடிருப்பதையும் இரத்தக் காயமில்லாமலிருப்பதையும் பார்த்ததும் அவனுக்கு ஆறுதல் உண்டாயிற்று......

இந்த விவரங்களைக் கூறி விட்டு, ''பூங்குழலி! இப்போது என்ன சொல்லுகிறாய்? உன் அண்ணியின் பேரில் நீ கோபித்துக் கொண்டது தவறுதான் அல்லவா?'' என்று சேந்தன் அமுதன் கேட்டான்.

''நீ சொல்லுவதைக் கேட்டால்



அப்படித்தான் தோன்றுகிறது. அவளை எந்த இடத்தில் விட்டு விட்டு வந்தாய்? அங்கே போய்ப் பார்க்கலாம், வா!'' என்றாள் பூங்குழலி.

''அவள் அங்கேயே இருப்பாள் என்பது என்ன நிச்சயம்?''

''அங்கே இல்லாவிட்டால் அக்கம் பக்கத்தில் இருப்பாள். இல்லாவிடில் நம்மைத் தேடிக் கொண்டு வருவாள். அமுதா! நானும் என் அத்தையும் படகில் ஏறி எங்கே புறப்பட்டோம் என்று அண்ணி கேட்டாள் அல்லவா?''

''ஆம், கேட்டாள்.''

''நீ அதற்கு மறுமொழி சொல்லவில்லையே? நிச்சயந்தானே?''

''நிச்சயந்தான். 'ஊமைப் பிசாசு' என்று அவள் சொன்னதும் எனக்கு உண்டான அருவருப்பினால் மறுமொழி சொல்லாமலே வந்து விட்டேன்.''

''இனிமேல் நல்ல வார்த்தையாகக் கேட்டாலும் சொல்லாதே! நாங்கள் எங்கே புறப்பட்டோம் என்பதை அவள் ஏன் தெரிந்து கொள்ள விரும்புகிறாள்? அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் அல்லவா? அமுதா! அத்தையைப் பிடித்துக் கொண்டு போனவர்களுக்கும் அண்ணிக்கும் தொடர்பு இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அண்ணியின் மூலமாக அவர்கள் உளவறிந்து கொண்டு, தங்கள் காரியம் முடிந்ததும் அவளை அடித்துக் கட்டிப் போட்டு விட்டுப் போயிருக்கலாம். அப்படியில்லாவிட்டாலும், அண்ணி வேறு ஏதோ துர்நோக்கத்துடனே தான் எங்களைத் தொடர்ந்து வந்திருக்க வேண்டும். ஆகையால் அவளுடன் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்! முழுதும் அவளை நம்பி மோசம் போய் விடாதே!.....''

''பூங்குழலி உன் அண்ணியின் சந்நிதானத்தில் உன் அண்ணன் ஊமையாக இருந்து விடுவான் என்று சொல்லியிருக்கிறாய் அல்லவா? அதுபோல் நானும் இருந்து விடுகிறேன். பேச வேண்டியதை நீயே பேசிக்கொள்!...''

இதைக் கேட்ட பூங்குழலி சிரித்தாள்.

''உன் சிரிப்பு என் செவிகளுக்கு இன்னமுதமாயிருக்கிறது. திருநாவுக்கரசரின் தேவாரப் பதிகத்தைப் போல்

இனிக்கிறது'' என்றான் அமுதன்.

''ஏதோ தவறிச் சிரித்து விட்டேன். அதைக் கேட்டு ஏமாந்து விடாதே! என் உள்ளத்தில் அனல் பொங்குகிறது. நெஞ்சில் நெருப்புப்பற்றி எரிகிறது!''

''நெஞ்சின் தாபத்தைத் தணிப்பதற்கு இறைவனுடைய கருணை வெள்ளத்தைக் காட்டிலும் சிறந்த உபாயம் வேறு இல்லை!'' என்றான் சேந்தன் அமுதன்.

அத்தியாயம் 20

மீண்டும் வைத்தியர் மகன்

சிறிது நேரம் பூங்குழலியும் அவளுடைய அத்தை மகனும் காட்டு வழியில் மௌனமாக நடந்து சென்றார்கள்.

பூங்குழலி ஒரு நெடு மூச்சு விட்டு, ''அமுதா! உனக்கும் எனக்கும் ஏதோ ஜன்மாந்தரத் தொடர்பு இருக்குமென்று தோன்றுகிறது'' என்றாள்.

''பூர்வ ஜன்மங்களைப் பற்றி இப்போது யாருக்கு என்ன கவலை? இந்த ஜன்மத்தைப் பற்றி ஏதாவது நல்ல செய்தி இருந்தால் சொல்லு!'' என்றான் சேந்தன் அமுதன்.

''முந்தைப் பிறவிகளின் தொந்தம் இந்தப் பிறவியிலும் தொடரும் என்று சொல்லுகிறார்கள் அல்லவா? அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். இன்று உச்சி வேளையில் உன்னைப் பிரிந்த போது, இனி உன்னைப் பார்க்கப் போவதே இல்லை என்று எண்ணினேன். இரண்டு நாழிகைக் குள்ளாக உன்னை மறுபடி பார்க்கும்படி நேர்ந்தது....''

''அதற்காக வருத்தப்பட வேண்டாம். இந்தக் காட்டு வழியைக் கடந்து தஞ்சாவூர் சாலையை அடைந்ததும் நான் என் வழியே செல்வேன். நீ உன் இஷ்டம் போல் போகலாம்.....''

''உன்னை நான் அப்படித் தனியே விட்டு விடப் போவதில்லை. அண்ணியைக் கண்டு பேசிய பிறகு உன்னுடன் நான் தஞ்சாவூருக்கு வரப் போகிறேன். என் அத்தைக்கு நேர்ந்த துன்பத்துக்குப் பரிகாரம் தேடப் போகிறேன். சோழ சக்கரவர்த்தியின் சந்நிதானத்தில் சென்று முறையிடப் போகிறேன்.....''

''பூங்குழலி! சக்கரவர்த்தியின் சந்நிதானத்தை அடைவது அவ்வளவு எளிது என்று கருதுகிறாயா? நம் போன்றவர்கள் தஞ்சாவூர்க் கோட்டைக்குள்ளேயே பிரவேசிக்க முடியாதே?''

''ஏன் முடியாது? கோட்டைக் கதவு திறக்கா விட்டால் கதவை உடைத்துத் திறப்பேன். அது முடியா விட்டால் மதில் சுவரில் ஏறிக் குதித்துப் போவேன்.....''

''அரண்மனை வாசலில் காவலிருக்கும் சேவகர்களை என்ன செய்வாய்?''

''நான் போடுகிற கூச்சலைக்கேட்டு அவர்கள் மிரண்டுபோய் என்னைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப்போவார்கள்.....''

''சின்னப் பழுவேட்டரையரை அப்படியெல்லாம் மிரட்டிவிட முடியாது. அவருடைய அநுமதியில்லாமல் யமன் கூடச் சக்கரவர்த்தியை அணுக முடியாது என்று தஞ்சாவூர்ப் பக்கங்களில் ஜனங்கள் பேசிக் கொள்வது வழக்கம். அதனாலேதான் சக்கரவர்த்தி இன்னும் உயிரோடிருக்கிறார் என்று சிலர் சொல்லுவதையும் கேட்டிருக்கிறேன்....''





குழந்தையின் அருமையை அறிந்தவர் தாயன்றி வேறு யார்...


ஆருயிரான உங்கள் பேரன்புக்கு–
நூறாண்டு வாழ்த்தும் பராமரிப்பு
ஒரு நூறாண்டு காலமாக உங்களைப் போன்ற தாய்மார்களுக்கு ஒப்பில்லாத குழந்தைப் பராமரிப்புத் துணையாய் உதவுவது ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் தயாரிப்புக்கள் தாம். பாபபாவின் பச்சிள மேனியை நன்கறிந்தவர்கள் ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் தான். எங்களுக்குத் தெரியும் பாப்பாவின் மேனி பூப்போன்றது, புண்படத்தக்கது. ஆகவே தான் ஒப்பற்ற தூய்மைப் பொருட்களால் மட்டுமே அவற்றை உருவாக்குகிறோம். ஒவ்வொரு தயாரிப்பும் பரிசோதனைக்குப் பன்முறை தேறி வருகிறது. எனவே அருமையிலும் அருமையானதே உங்கள் குழந்தைகளை அடைகிறது.
உங்கள் குழந்தையின் பராமரிப்புக்கு வேறு எவரையும் நம்புவீர்களா... நம்பத் தான் முடியுமா?
குழந்தைப் பராமரிப்பு பற்றி இலவசத் துண்டுப் புத்தகம் பெற்றிட எழுதுங்கள் இம் முகவரிக்கு:
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் லிமிடெட், பேபி கேர் அட்வைசர், பி.ஓ. பாக்ஸ் நம்பர் 9301, பம்பாய்-400 036.
Johnson's baby powder
Johnson's baby lotion
baby oil
Johnson's baby soap
baby cream
buds
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
LINTAS JJC 1 2533 TM

''சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாவிட்டால், பழுவேட்டரையர்களையே பார்த்து இந்த அக்கிரமத்துக்குப் பரிகாரம் உண்டா, இல்லையா என்று கேட்பேன்! அவர்கள் தக்க பரிகாரம் செய்யாவிட்டால், முதன் மந்திரி பிரம்மராயரிடம் போவேன். அதிலும் பயனில்லாவிட்டால், பழையாறையிலுள்ள ராணிகளிடம் போய் முறையிடுவேன். என் அத்தையின் கதி என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ளும் வரையில் ஓரிடத்தில் தங்கமாட்டேன். அவளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் கிடைக்கும் வரையில் இரவு பகல் தூங்கமாட்டேன். அண்ணி என் அத்தையை 'ஊமைப் பிசாசு' என்று சொன்னாள் அல்லவா? நானும் ஒரு பிசாசாக மாறி நாடு நகரமெல்லாம் சுற்றி அலைவேன். 'நீதி!' 'நீதி!' என்று அலறிக் கொண்டு அலைந்து திரிவேன். அமுதா! நீயும் என்னோடு வருவாயா.....?''

''நிச்சயமாய் வருவேன், பூங்குழலி! நீ விரும்பினால் வருவேன். ஆனால் ஏன் நீ உன் மனத்தை இப்படியெல்லாம் குழம்ப விடுகிறாய்? எங்கெல்லாமோ வெகு தூரத்துக்குப் போய் விட்டாயே? முதலில், உன் அத்தையைக் கண்டு பிடித்துக் காப்பாற்ற வேண்டியதல்லவா முக்கியமான காரியம்? அவளைப் பிடித்துக் கொண்டு போன துஷ்டர்களிடமிருந்து அவளை விடுதலை செய்ய வேண்டாமா? உன் தந்தை, அண்ணன் முதலியவர்களிடம் சொல்ல வேண்டாமா.....?''

''அமுதா! என் அத்தை தெய்விக சக்தி உள்ளவள். அவளுக்கு யாரும் எந்தவிதமான கெடுதலும் செய்ய முடியாது. தமயந்தி வேடனை எரித்தது போல் கண் பார்வையினாலேயே எரித்து விடுவாள். ஆகையால் அவளைப் பற்றிக் கூட எனக்கு அவ்வளவு கவலையில்லை. ஆனால் இந்தச் சோழ ராஜ்யத்தில் பட்டப் பகலில் இவ்வளவு பெரிய அக்கிரமம் நடக்கிறதே? — இதற்குப் பரிகாரம் தேடுவதே என் முக்கியமான வேலை! பராந்தக சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து இந்த நாட்டில் தர்மராஜ்யம் நடப்பதாகச் சொல்கிறார்கள். மகா சிவ பக்தராகிய கண்டராதித்த மன்னர் அரசு புரிந்த நாட்டில் பசுவும் புலியும் ஒரு துறையில் தண்ணீர் குடித்தது என்று பெருமை பேசிக் கொள்கிறார்கள். சுந்தர சோழரின் அரசாட்சியின் கீழ் சோழநாட்டில் எந்தச் சிறு பெண்ணும் இரவு பகல் எந்த நேரத்திலும் பயமின்றிப் பிரயாணம் செய்யலாம் என்று பறையறைந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் புகழ் பெற்ற இராஜ்யத்தில், ஒரு மூதாட்டியை, — காது கேளாத, பேசத் தெரியாத ஒரு பேதை ஸ்திரீயை, — பட்டப் பகலில் துஷ்டர்கள் பிடித்துக் கொண்டு போவதென்றால், அது எப்படிப்பட்ட அக்கிரமம்? என் அத்தையைப் பற்றிக் கூட எனக்கு அவ்வளவு கவலை இல்லை. இன்றைக்கு என் அத்தைக்கு நேர்ந்தது நாளைக்கு எனக்கு நேரலாம் அல்லவா? இன்னும் இந்த நாட்டிலுள்ள கன்னிப் பெண்கள் பலருக்கும் நேரலாம் அல்லவா?''


சேந்தன் அமுதன் இப்போது குறுக்கிட்டு, ''ஆமாம்; அத்தகைய அபாயம் இந்த நாட்டில் இப்போது இருக்கத்தான் இருக்கிறது. சுந்தர சோழர் நோயாளியாகிப் படுத்ததிலிருந்து சோழ நாட்டில் தர்மம் தலைகீழாகி விட்டது. கட்டுக்காவல் அற்றுப் போய்விட்டது. கன்னிப் பெண்களுக்கு அபாயம் எங்கே என்று காத்திருக்கிறது. ஆகையால் கன்னிப் பெண்களெல்லாம் கூடிய சீக்கிரம் கலியாணம் செய்து கொண்டு விடுவதுதான் நல்லது!'' என்றான்.

பூங்குழலி கல கல வென்று சிரித்தாள். ''அமுதா! ஒரு கன்னிப் பெண் உன்னைக் கலியாணம் செய்து கொண்

''இதென்ன... பாப்பாவுக்கு, ஒரு காதைக் குத்தாம விட்டுட்டீங்களே, ஏன்...?''

''பணமுடை வரும்போது, இன்னொரு காதணி விழா வெச்சு, அடுத்த தடவை மொய் வசூலிக்கலாமில்லே... அதுக்குத்தான்...!''

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.



டால், அவளை உன்னால் காப்பாற்ற முடியுமா? உனக்குக் கத்தி எடுத்துப் போர் செய்யத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''மலர் எடுத்து மாலை தொடுக்கவும் பதிகம் பாடிப் பரமனைத் துதிக்கவுந்தான் நான் கற்றிருக்கிறேன். கத்தி எடுத்து யுத்தம் செய்ய நான் கற்கவில்லை. அதனால் என்ன? துடுப்புப் பிடித்துப் படகு தள்ள நீ எனக்குக் கற்றுக் கொடுத்து விடவில்லையா? அதுபோல் வாள் எடுத்துப் போர் செய்யவும் கற்றுக் கொண்டு விடுகிறேன். மதுராந்தகத்தேவர் சிங்காதனம் ஏறி இராஜ்யம் ஆள ஆசைப்படும்போது, நான் கத்திச் சண்டை கற்றுக் கொள்வதுதானா முடியாத காரியம்?'' என்றான் சேந்தன் அமுதன்.

அதற்குள் பூங்குழலியின் அண்ணியைக் கட்டிப் போட்டிருந்த மரத்தடிக்கு அவர்கள் வந்துசேர்ந்தார்கள். அங்கே அந்த மாதரசியைக் காணவில்லை. அவளுடைய மண்டையில் பட்ட காயத்திலிருந்து தரையில் சிந்தியிருந்த இரத்தத் துளிகளைச் சேந்தன் அமுதன் பூங்குழலிக்குச் சுட்டிக் காட்டினான்.

''நன்றாக அடித்து விட்டிருக்கிறார்கள். அத்தையைப் பிடித்துக்கொண்டு போனவர்களுக்கு அண்ணி உளவு சொல்லவில்லையென்பது நிச்சயமாகிறது. ஆனால் அவள் வேறு யாருக்காக என்ன உளவு பார்த்துக் கொண்டிருந்தாள் என்பதை எப்படியாவது கண்டு பிடிக்க வேண்டும்!'' என்றாள் பூங்குழலி.

''மாமன் மகளே! இதைக் கேள்! இங்கே நடந்திருப்பதெல்லாம் காரணம்தெரியாத மர்மமான காரியங்களாயிருக்கின்றன. இரகசியத்துக்குள் இரகசியமாகவும் சுழலுக்குள் சுழலாகவும் இருக்கின்றன. எல்லாம் இராஜாங்கத் தோடும் இராஜ வம்சத்தாரோடும் சம்பந்தப்பட்ட சிக்கல்களாக இருக்கின்றன. இவற்றைக் குறித்து நீயும் நானும் ஏன் கவலைப் படவேண்டும்? நம்மை நாமே ஏன் சங்கடத்துக்கு உள்ளாக்கிக் கொள்ள



''மாப்பிள்ளைவீட்டார்கேட்ட ஐம்பது பவுன் நகைகளைப் போடறதாச் சொல்லிட்டு அப்புறம் கல்யாணத்திற்குச் சம்மதிக்காம பின்வாங்கறீங்களே, ஏன்?''

''நகைகளையெல்லாம் மாப்பிள்ளையோட கழுத்திலேயே போடணுமாம்!''

— ஞா. ஞானமுத்து.

வேண்டும்?''

''அமுதா! எவ்வளவு பெரிய இராஜாங்க விஷயமாயிருந்தால் என்ன? எத்தகைய மர்மமாக இருந்தால்தான் என்ன? என் அத்தை சம்பந்தப்பட்ட காரியத்தில் நான் கவலை எடுத்துப் பாடு படாமலிருக்க முடியுமா? உன் பெரியம்மாவின் கதியைப் பற்றி நீ சிந்திக்காமலிருக்க முடியுமா?''

''என் மனத்தில் பட்டதை நான் சொல்கிறேன், பூங்குழலி! நான் பார்த்த ஏழெட்டு மனிதர்களுக்கு நடுவில் ஒரு பெண் பிள்ளையும் சென்றாள் என்று சொன்னேன் அல்லவா? அவள் என் பெரியம்மாவாக இருக்கக் கூடும் என்றும் சொன்னேன் அல்லவா? அவள் நடந்துபோன விதத்தைப் பார்த்தால், கட்டாயப்படுத்தி அவளை அழைத்துப் போனதாகத் தோன்றவில்லை. தன் இஷ்டத்துடனே யதேச்சையாகச் சென்றவள் போலவே காணப்பட்டது.....''

''இருக்கலாம், அமுதா! அப்படியும் இருக்கலாம், என் அத்தையின் இயல்பே அப்படி! எங்கேதான் அழைத்துப் போகிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக அவளே இஷ்டப்பட்டுப் போயிருக்கலாம். அவளுக்கு விருப்பமில்லா விட்டால், ஆயிரம் பேருக்கு நடுவிலிருந்தும் அவள் தப்பிச் சென்று விடுவாள். கோட்டை கொத்தளங்களும் பாதாளச் சிறைகளும் கூட அவளைப் பத்திரப்படுத்தி வைக்க முடியாது. ஆகையினால்தான் அத்தைக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றி நான் அவ்வளவு கவலைப்படவில்லையென்று சொன்னேன். அத்தைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் தேடுவதே என் முக்கிய நோக்கம். அந்த அநீதி இன்றைக்கு இழைக்கப்

பட்டதன்று; இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்ட கொடும் அநீதி! அதற்குப் பரிகாரம் கிடைக்கும் வரையில் எனக்கு நிம்மதி இல்லை'' என்றாள் பூங்குழலி.

''கடவுளே! எவ்வளவு அசாத்தியமான காரியத்தில் உன் மனத்தைப் பிரவேசிக்க விட்டிருக்கிறாய்?'' என்று சேந்தன் அமுதன் கூறி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

சற்றுத் தூரத்தில் பேச்சுக் குரல் கேட்டது. ஒரு குரல் பெண் குரலாகத் தோன்றியது. பேசியவர்களைத் தஞ்சாவூர் இராஜபாட்டை சந்திப்பில் அமுதனும் பூங்குழலியும் கண்டார்கள்.

அண்ணி ராக்கம்மாளுடன் பேசிக் கொண்டிருந்தவன் பழையாறை வைத்தியர் மகன் என்று அறிந்ததும் பூங்குழலியின் முகத்தில் அருவருப்பின் அறிகுறி காணப்பட்டது.

ராக்கம்மாள் பூங்குழலியைப் பார்த்ததும் ''அடி பெண்ணே! பிழைத்து வந்தாயா! உன்னைக் கொன்று போட்டிருப்பார்களோ என்று பயந்து போனேன். இதோ பார்! உன் அத்தையைக் காப்பாற்ற முயன்றதில் என் மண்டையில் எவ்வளவு பெரிய காயம்? வைத்தியர் மகனிடம் காயத்துக்கு மருந்து ஏதேனும் இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டிருந்தேன்'' என்றாள்.

''கரையர் மகளுக்கு ஏதேனும் காயம் பட்டிருந்தாலும் மருந்து போட்டுக் குணப்படுத்துகிறேன்'' என்றான் வைத்தியர் மகன்.

பூங்குழலி அவனுக்கு மறுமொழி சொல்லாமல், ''அண்ணி! அத்தையைப் பிடித்துக் கொண்டு போனவர்கள் எந்தப் பக்கம் போனார்கள்? உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''நான் பார்க்கவில்லை. தஞ்சாவூர்ச் சாலையோடு போனதாக இந்த வைத்தியர் மகன் சொல்லுகிறான்...''

''அண்ணி! நானும் அமுதனும் அத்தையைத் தொடர்ந்து போகிறோம். அப்பாவிடம் சொல்லிவிடு! வா, அமுதா!'' என்று பூங்குழலி அங்கிருந்து உடனே போகத் தொடங்கினாள்.

அப்போது வைத்தியர் மகன் ''பூங்குழலி! சற்று நில்! உங்களால் அவர்களைத் தொடர்ந்து போக முடியாது. இங்கிருந்து சற்றுத் தூரத்தில் காத்திருந்த குதிரைகள் மீதேறி அவர்கள் போகிறார்கள். என்னிடம் குதிரை இருக்கிறது. நான் வாயுவேக மனோ வேகமாய்க் குதிரையை விட்டுக் கொண்டு சென்று அவர்கள் போய்ச் சேரும் இடத்தைக் கண்டு பிடித்து உங்களுக்குச் சொல்வேன். அதற்குப் பிரதியாக நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். நீயும் உன் அத்தையும் படகில் ஏறிக் கொண்டு எங்கே போவதற்குக் கிளம்பினீர்கள்? அதை மட்டும் சொல்லிவிடு!'' என்றான்.

பூங்குழலி, ''அண்ணி! இவருடைய உதவி எங்களுக்குத் தேவையில்லை! நாங்கள் போகிறோம். அப்பாவிடம் மட்டும் சொல்லிவிடு!'' என்றாள்.


வைத்தியர் மகன் அப்போதும் விடவில்லை. ''ஆகா! கரையர் மகளின் கர்வத்தைப் பார்! என் உதவி தேவை இல்லையாம்! பெண்ணே! உனக்கு ஏன் என் பேரில் இத்தனை கோபம்? நீ அரச குமாரனைக் கலியாணம் செய்து கொள்வதை நானா குறுக்கே நின்று தடுத்தேன்? என்னை வஞ்சித்து ஏமாற்றி விட்டுப் படகில் ஏற்றிக் கொண்டு போனாயே? அந்த வாணர் குலத்து வந்தியத் தேவனல்லவா உன் ஆசைக்குகந்த இராஜகுமாரனை நடுக் கடலில் தள்ளிக் கொன்று விட்டான்? என் பேரில் கோபித்து என்ன பயன்?'' என்று சொல்லிவிட்டு 'ஹா ஹா ஹா' என்று பேய்ச் சிரிப்புச் சிரித்தான்.

பூங்குழலி கண்களில் தீப்பொறி பறக்க அவனை ஒரு தடவை விழித்

''வழக்கமா சைக்கிளில் லைட் இல்லாமல் வந்தால் ஐந்து ரூபாய்தானே வாங்குவீங்க? இன்றைக்குப் பத்து ரூபாய் கேட்கிறீங்களே, ஏன்?''

''இன்றைக்கு அமாவாசை இருட்டாச்சே!''

— ஞா. ஞானமுத்து.




உங்கள் பால்காரரர் ரயிலில் பால் கொண்டு தருவாரா?



என் பால்காரர் தருவார்.

பிரயாணத்தின் போது சாப்பாடு மற்றும் பானங்கள் விஷயத்தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பால் திரிந்து விடும் அல்லது விரைவில் புளித்துப் போய் விடும். இது போன்ற சமயங்களில் அமுல் மில்க் பவுடர் டின் கையோடு கொண்டு செல்லுங்கள்.

அமுல் மில்க் பவுடர் கொண்டு நீங்கள் தூய்மையான, ஆடை நிறைந்த பாலை நொடியில் தயாரித்து விடலாம். அப்படியே அருந்தலாம். தேனீர், காப்பி, தயிர், மோர், பாயசம், கஸ்டர்ட், கேக், ரஸகுல்லா எது வேண்டுமோ தயாரிக்கலாம்.



RADEUS/AMP/2-88-TAM

அமுல்
மில்க் பவுடர்

வீட்டினுள் இயங்கும் ஒரு பால்பண்ணை.

விற்பனைக்கு விடுப்போர் : குஜராத் கோ-ஆப்பரேடிவ்
மில்க் மார்க்கெடிங் ஃபெடரேஷன் லிட், ஆனந்த் 388 001

OPERATION FLOOD

நேரத்தை பொன்னாகக் கருதும் புத்திசாலி பெண்மணிக்காக...

நேரத்தையும்,
எரிபொருளையும் மிச்சப்படுத்தி,
உங்கள் சமையல் திறனின்
தனிச்சிறப்பை மேன்மைப்படுத்தும்
இணையில்லா செம்பு (காப்பர்)
அடிப்பாகம் கொண்ட
சமையல் பாத்திரம்.



காப்பர் - பாட்டம்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
சமையல் பாத்திரம்.

விரைவாகவும், சமமாகவும் சூடு பரவுகிறது. உணவுப் பொருட்கள் தீய்ந்து போகாது.

தரமான பொருட்களுக்கான இந்திய அரசின் தேசிய விருதினை முதலில் பெற்றது.

ஸாஸ்பான், ஸ்ரூபான், வாணலிகள், தோசைக்கல், அடுக்குகள், ஸ்கில்லெட்ஸ், ஸ்டீம் குக்கர்கள், இட்லி குக்கர்கள் என பலவித ரகங்கள். இல்லத்தரசிகளின் நம்பிக்கையைப் பெற்ற சிறந்த சமையல் பாத்திரங்கள்.

காளி

காளி-சிறந்த சமையல் பாத்திரங்கள்,
அன்றும் இன்றும் என்றுமே உங்களுக்காக.

சில்லறை விற்பனை நிலையம்: ஸ்ரீ எம்.வி.எம். ஸ்டோர்ஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612001. போன்: 20136. விற்பனை ஏஜெண்ட்: ஸ்ரீ வித்யா ஏஜென்சீஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612001. போன்: 20136. வட்டார ஏஜெண்ட்: சம்மு & Co. த. பெ. எண் 3622, எம்.ஜி. ரோட், எர்ணாகுளம், கொச்சின் 682035. போன்: 361139. • விக்டரி மெட்டல்ஸ், 101, கேட்வாடி மெயின் ரோட், பம்பாய் 400 004. போன்: 354507/380075. • தினேஷ் எண்டர்பிரைசஸ், 41/1942, கைவாலா, கரோல்பாக், புது டெல்லி 110 005. போன்: 5716923.

துப் பார்த்துவிட்டு, அமுதனுடைய கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சாலையோடு மேலே சென்றாள்.

கொஞ்சதூரம் போனதும், ''அமுதா! நீ கத்தி எடுத்துப் போர் செய்யக் கற்றுக் கொண்டதும் முதலில் இந்தத் தூர்த்தனாகிய வைத்தியர் மகனின் உயிரை வாங்க வேண்டும். உன் கத்திக்கு முதல் பலி இவன்தான்!'' என்றாள்.

இரவும் பகலும் வழி நடந்து பூங்குழலியும் சேந்தன் அமுதனும் தஞ்சாவூரை நோக்கிச் சென்றார்கள். ஏழெட்டுக் குதிரை வீரர்கள் ஒரு பெண்மணியை அழைத்துச் சென்றதைக் குறித்து வழியில் விசாரித்துக் கொண்டு போனார்கள். பாதி வழி வரையில் கொஞ்சம் தகவல் கிடைத்தது. அப்புறம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் தஞ்சாவூர் வரையிலும் போய்த் தேடிப் பார்த்து விடுவது என்று போனார்கள்.

சேந்தன் அமுதனுக்கு இந்தப் பிரயாணம் வெகு உற்சாகமாயிருந்தது. பூங்குழலியுடன் பேசிக்கொண்டு சென்றது உற்சாகத்துக்கு ஒரு காரணம்; கத்திப்பயிற்சிகற்றுக்கொண்டே போனது மற்றொரு காரணம். கோடிக்கரைக்கு அருகிலேயே பூங்குழலிக்குத் தெரிந்த ஒரு கொல்லுப் பட்டரையில் அவன் கத்தி வாங்கிக் கொண்டிருந்தான். போகும்போதெல்லாம் அதைச் சுழற்றிக் கொண்டே போனான். சில சமயம் எதிரில் பகைவன் வருவதாகவும் அவனுடன் சண்டை போடுவதாகவும் எண்ணிக் கொண்டு கத்தியைத் தாறுமாறாக வீசினான். அவ்வப்போது பூங்குழலி அவனுக்குக் கத்தியை இப்படிப் பிடித்துக் கொள்ள வேண்டும், இப்படிச் சுழற்ற வேண்டும் என்று கற்பித்துக் கொடுத்துக் கொண்டு வந்தாள்.

இதனால் இரண்டு பேருக்குமே பிரயாணம் உற்சாகமாயிருந்தது.

தஞ்சாவூர்க் கோட்டை கண்ணெதிரே தென்பட்ட போது தான் வந்த காரியத்தை எப்படிச் சாதிப்பது என்ற கவலை பூங்குழலிக்கு ஏற்பட்டது. அவளுடைய கவலையைச் சேந்தன் அமுதனும் சேர்ந்து பகிர்ந்து கொண்டான்.

கோட்டைக்குள் பிரவேசிப்பதே பிரம்மப் பிரயத்தனமான காரியமாயிற்றே? பூங்குழலி எண்ணியுள்ள காரியங்களையெல்லாம் எப்படி நிறைவேற்றுவது?

வந்தியத்தேவனுடைய அகடவிகட சாமர்த்தியங்களெல்லாம் சேந்தன் அமுதனுக்கு நினைவு வந்தன. அவனுடைய சாமர்த்தியங்களில் பத்தில் ஒரு பங்கு தனக்கு இருக்கக் கூடாதா? அல்லது அந்த வந்தியத் தேவனே இந்தச் சமயம் இங்கே வரக் கூடாதா!.......

வந்தியத்தேவனாயிருந்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி நடந்து கொள்வான் என்று சேந்தன் அமுதன் சிந்திக்கத் தொடங்கினான்.

அச்சமயத்தில் சாலையில் மூடு பல்லக்கு ஒன்று வந்தது. சூரியன் மேற்குத் திசையில் மறைந்து இருள் சூழ்ந்து வந்த நேரம். மூடு பல்லக்கின் மேல் திரையில் பனை மரச் சித்திரங்கள் காணப்பட்டன.

''ஆகா! பழுவூர் இளைய ராணியின் பல்லக்குப் போலல்லவா காண்கிறது? கோட்டைக்கு வெளியிலேயே பழுவூர் இராணியைச் சந்தித்து முத்திரை மோதிர இல்ச்சினையைப் பெற முடியுமானால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்?'' என்று அமுதன் எண்ணினான். இதைப் பூங்குழலியிடமும் வெளியிட்டான். அவளும் அது நல்ல யோசனைதான் என்று சொன்னாள்.

ஆனால் மூடுபல்லக்கின் உள்ளே இருக்கும் ராணியை எப்படிப் பார்ப்பது?

சிவிகைக்கு முன்னும் பின்னும் காவலர்கள் போகிறார்களே? பல்லக்கின் அருகில் போக முயன்றாலே அவர்கள் தடுப்பார்கள் அல்லவா?

''அமுதா! கவலைப்படாதே! தஞ்சாவூர்க் கோட்டை இன்னும் அரைக் காதம் இருக்கிறது. அதற்குள் நமக்கு ஏதேனும் சந்தர்ப்பம் கிட்டாமற் போகாது!'' என்றாள் பூங்குழலி.

எதிர்பாராத விதத்தில் அச்சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிட்டியது.

(தொடரும்)



"பார்த்தியா வத்சு, புதுக் காலண்டர்..."

"காட்டுங்க... காட்டுங்க..."

அவன் விரித்துக் காண்பித்தான். அழகான மீன் நீந்திக் கொண்டிருந்தது. கோல்டன் கலர் செதில்கள். சுங்கடி டிசைனில் சிவப்புப் புள்ளிகள் ஆங்காங்கே தெரிந்தன. நீலக் கடலுக்குள் அழகு துள்ளியது.

"நிஜமாய் நீந்துவது மாதிரி இல்லை...?" என்று கண்ணகலப் பிரமிப்புடன் பார்த்தபடி கேட்டாள் வத்சலா.

"இந்தக் கண்ணை விடவா...?" என்று அவன் நெருங்கி வந்தான்.

"ஐ... டைலாக் அடிக்கறீங்க..."

"சரி... ஹால்லே மாட்டலாமா? பார்வையா இருக்கும்..."

"நோ... நோ..."

"பின்னே...?"

"பெட்ரூமிலே மாட்டணும். நான் வேலை முடிச்சிட்டு, ஜாலியா அங்கே தான் போய்ப் படுப்பேன். அப்ப இந்த அழகான மீன் என் கண் எதிரே தெரியணும்...?"

"ரைட்... உன் இஷ்டம். அப்ப வரட்டுமா?"

மோகன் ஆபீஸ் போய்விட்டான். வீடு நிசப்தமாய் இருந்தது. அடுக்களையில் போட்டது போட்டபடி கிடந்தது. வத்சலா கட்டிலில் வந்து படுத்துக் கொண்டாள். எதிரே மீன் காலண்டர் தெரிந்தது. எவ்வளவு பெரிய மீன்! என்ன தத்ரூபமாக வரையப்பட்டிருந்தது! அதைப் பார்க்கப் பார்க்க அவள் மனத்தில் இசை வாசிக்கிற மாதிரி இருந்தது. இதைப் போன்ற நிஜ மீன்களோடு அவள் விளையாடியிருக்கிறாள். தாவணிப் பருவத்தில், தாம்பிரவருணி ஆற்றுப் படுக்கையில் நிறைய மீன்களை வேடிக்கை பார்த்திருக்கிறாள். என்ன இனிமையான நேரமது...!

எட்டு வருஷங்கள் கீழிறங்கி நின்று பார்க்கிற போது தெரிகிற கவிதை! விக்கிரமசிங்கபுரத்திலிருந்து வண்டி கட்டிக் கொண்டு, பாபநாசம் போய்க் குளித்துவிட்டு வந்த புத்துயிர்



காட்சிகள்! நினைக்கும் போதே ஜில்லென்றது. மாடுகள் சலங்கை இனிமையுடன், நயமான தலையசைப்புடன் ஜடக், ஜடக் என்று இசையெழுப்பி ஓடும். கொஞ்சம் தூரத்திலேயே ஆறு பார்வைக்கு அகப்படும். ம்மா...! என்ன மாய் ஒரு சுழிப்புடன் தண்ணீர் விரைகிறது! அவசர வேலை இருக்கிற மாதிரி, காரியம் செய்கிற மாதிரி, கேலி பேசுகிற மாதிரி, சிரிக்கிற மாதிரி... என்ன அழகு! வங்கி வங்கியான சுழிப்பில் கதிரொளி பட்டு மினுக்கும். பாறைக் கருப்புகள், தலைநீட்டி, ஓடும் ஆற்றைச் சுவாரஸ்யத்துடன் பார்க்கிற மாதிரி இருக்கும். கும்மென்று ஒரு குளிர்ச்சி. ஆற்றுச் சத்தம், பிடிபடாத வாத்தியத்தில் வாசித்த இசை மாதிரி இடம் பூராவாய் நிறைந்திருக்கும்.

ஆனந்தவிலாஸ் படித்துறையில் அமர்ந்து கொண்டு மணிக் கணக்காய்க் கால்களை மட்டும் தண்ணீரில் அளைய விட்டிருக்கிறாள் வத்சலா. பிறகு முழு உடையுடன் அப்படியே ஆற்றில் முங்கிக் குளிப்பாள். கண்களை நீருக்குள் அமிழ்த்தி, திறந்து பார்ப்பாள். கொத்துக் கொத்தாய் மீன்கள் தெரியும்! இங்கு, மீன்கள் எல்லாம் சாதாரண நிறத்திலிருந்தன. குட்டியாய், பெரிசாய், கொழுத்ததாய், என்ற வித்தியாசங்களுடன் சடக், சடக் என்று திரும்பிக் கொண்டு, சுறுசுறுப்பாய் நீந்துவது எத்தனை அழகான காட்சி!

குளிக்கக் குளிக்கச் சந்தோஷமாக இருக்கும்! பனியில் நனைந்த இனிமையாய் உடலெங்கும் அற்புத சுகம் வரும். கால்கள் சோர்ந்து, கண்கள் சிவந்து, ஓய்வு கொடேன் என்று கெஞ்சுகிற வரை நீரில் கிடப்பாள். சோப்பு போட்டு, பிறகு மஞ்சள் போட்டு...

''போதுமடி வத்சலா... கரையேறு...!'' என்று கத்துவாள் அம்மா.

''இரும்மா... இன்னும் ஒரு முங்கு...''

''உனக்கென்னடி, குளிப்பே... எனக்கு வீட்டிலே வேலையிருக்கு...''

''ப்ளீஸ்மா...''

''சரி... கோவிலுக்குப் போயிட்டு வர்றேன்... அதுக்குள்ளே கரை சேரலை, கொன்னுடுவேன்...!''

'ப்பா... பதினைந்து நிமிடமாகும் அம்மா கோவில் போய் வர. அதுவரை ஜாலி!'

இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில்தான் அவன் வந்தான். அவன் பெயர் தினகரன் என்பதாய் அவளுக்கு ஞாபகம்.

இப்பொழுது கட்டிலில் படுத்துக் கொண்டு அந்த முகத்தை

இங்கே அடிப்பது சாரல்

ஞாபகப்படுத்திப் பார்த்தாள். கம்பீரமான முகம்தான். நேசிக்க வைக்கிற இளம் கறுப்பான முகம். பளபளவென்று ஓர் இளமை மினுமினுப்பு. கவலை தொடாத, ஸ்நேக மலர்ச்சியான முகம். குபுக்கென்று குறும்பு மலராய் விரிந்திருந்த ஆர்வக் கண்கள். என்னைப் பாரேன் என்று கட்டியிழுக்கிற ஆண்மை நிரம்பிய உயரம் – அவள் சடக்கென்று கட்டிலிலிருந்து எழுந்து அமர்ந்து கொண்டாள். அவள் வியர்த்திருந்தாள். இத்தனைத் துல்லியமாய் இவன் முகம் ஞாபகத்திற்கு வர முடிவது எப்படி? அடி மனத்தில் உறங்கிக் கொண்டிருந்தானோ? அந்த அரும்புப் பருவத்தில் இவனை ரசித்ததாய் ஞாபகமில்லையே! அவள் குழப்பத்துடன் விழித்தாள். மேலும் காட்சிகள் விரிந்தன!

''ஏய்... நம்ம மீன்டா...''

துள்ளியவன் நின்றான். கிண்டலா பண்றுறான்!

''மீன் நின்னுடுச்சிடா...''

அவள் முறைத்தாள். ஏதாவது சூடாய்ச் சொல்ல வேண்டும் போல் இருந்தது. என்ன சொல்வதென்று தெரியவில்லை. அம்மா வந்துவிட்டாள்.

''ஏண்டி... இன்னுமா குளிக்கிறே...? வா, வா...!''

கடகடவென்று கரையேறிப் போய் அம்மாவைக் கட்டிக் கொண்டாள்.

''சின்னச் சனியனே! ஈர உடையோட கட்டிக்கிறியே, என் புடைவை ஈரமாயிடுச்சு

சங்கரி அப்பன்



அருள்வாக்கு

ஜனசமுதாயத்தில் அடங்கிய எல்லோரும் நிறைந்த நிறைவாக ஆகிப் பூர்ணத்வம் அடையாவிட்டால் பரவாயில்லை; மரத்துக்குப் பழம் மாதிரி, ஜனத்தொகையில் எவரோ ஒருத்தர் ஆயிரத்தில் லக்ஷத்தில் ஒருத்தர் பூர்ணமாகி விட்டால் கூடப் போதும்: அப்படி ஓர் ஆத்மா நிறைகிறதற்குத்தான் இத்தனை பேர் ஸ்ருஷ்டியாகி இத்தனை காமக்ரோதாதிகளில் மாட்டிக் கொண்டு தவிக்கிறதெல்லாம். அத்தனாம் பெரிய ஸமுத்திரத்தைக் கடைந்து ஒரு சின்னக் கலசம் அம்ருதம் எடுர்ந்து போல் இவ்வளவு ஜீவ கோடிகளுள்ள ஸம்ஸாரத்தைக் கடைவதிலிருந்து அம்ருத தத்துவமாக ஆன உதாரண புருஷர்கள் ஸ்வல்பம் உண்டானாலும் போதும். பவக் கடலைக் கடைந்து அதன் ஸாரமாக ஸ்வல்ப அளவு அம்ருதத்தை எடுக்க உதவுகிற மத்தாகத்தான் ஆசார்யாள் .. பகவானை நினைத்து 'பவ ஜலதி மதனமந்த்ர' என்கிறார். அப்படிச் சொல்வதால் இந்த ஸம்ஸாரத்துக்குள்ளேயே விஷம் மட்டுமில்லாமல் அம்ருதமும் இருக்கிறது என்று நமக்கு ஆறுதல் உண்டாக்குகிறாற் போலிருக்கிறது. மத்தைப் போட்டுக் கடைந்த உடனே வெண்ணெய் வந்துவிடுமா? எத்தனையோ நாழி சிலுப்பினால்தான் வரும். அதுவரை அவசரப்படக் கூடாது. ஆத்திரப்படக் கூடாது. நம்பிக்கை இழக்கக் கூடாது.

நிதானமாக, படிப்படியாக அபிவிருத்தி எவருக்கும் உண்டு. ஆகவே நாம் செய்ய வேண்டியதெல்லாம் அந்த மத்து, கயிற்றிலிருந்து நழுவி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். என்ன கயிறு? பக்தி என்கிற கயிறுதான்! சிவானந்தலஹரியில் ஆசார்யாள் பரமேச்வரனிடம் 'பக்திக் கயிற்றால் என் மனக் குரங்கை நன்றாகக் கட்டிப் போடு' (த்ருடம் பக்த்யா பத்த்வா) என்று சொல்லியிருக்கிறார். நாம் பக்திக் கயிற்றால் பகவான் என்ற மத்தைச் சுற்றி, பிடிப்பை நழுவ விடாமலிருந்தால் அவர் இந்த ஸம்ஸார ஸாகரத்தைக் கடைந்து முதலில் விஷங்களைத் திரட்டி அப்புறப்படுத்தி விட்டுப் பிறகு நமக்கு அம்ருதம் எடுத்துக் கொடுத்து விடுவார். அதாவது அமர நிலையான மோக்ஷத்தைக் கொடுத்து விடுவார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்.

பார்...'' — அம்மா பூப் போல் திட்டினாள். வத்சலா ஆற்றுச் சுழிப்பாய் முறுவலித்தாள். அவன் சுவாரஸ்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''மீன் தரைக்குப் போயிடுச்சுடா... செத்திடும்டா...'' என்ற அவனது தோழர்களின் விமர்சனங்களைக் கேட்டுக் கொண்டே நடந்தாள்.

அப்புறம் தினம் வந்தான். அம்மா கோயில் போகிற நேரத்திற்காகக் காத்திருந்து வம்பு பண்ணத் தொடங்கி விட்டான். பூ, பழம் தட்டோடு ஒருநாள் கோயிலுக்கு அம்மாவோடு அவளும் போனாள். கரும் சரிகையாய் முதுகெல்லாம் பாய் விரித்திருந்த ஈரக் கூந்தலை ஆற்றுக் கட்டில் போட்டு விட்டிருந்தாள். முல்லைப் பூக்கள் மின்னல் நிறத்தில் நடுவில் ஊஞ்சலாடின. வளை சத்தம், கொலுசு சத்தம் என்று பெண்மையான, மென்மையாய் அவள் கப்பல் நளினத்தோடு செல்வதைப் பிரமிப்பாய்ப் பார்த்தான் தினகரன். குரங்கு ஒன்று எங்கிருந்தோ வந்து அவள் பழத் தட்டைப் பிடுங்கிற்று. அவள் பலமிழந்து, திடுக்கிட்டுப் பயந்து அலறினாள். ''ம்மா...''

''பயப்படாதீங்க...'' கூடையில் எல்லாவற்றையும் சேகரம் பண்ணிக் கொடுத்தான். அவள் மேனி இன்னும் நடுங்கியது.

''குரங்கு போயிடுச்சு...'' என்றான் ஆறுதலாக.

''இல்லே நிக்குது நிக்குது... உங்க முன்னாடி....'' என்ற பரிகாசக் குரல்கள் அவன் சகாக்களுடையவை.

''என்னடி பண்றே...?'' பிராகாரம் சுற்றி வந்து அம்மா கேட்க, அவள் முந்தானையில் போய் ஒட்டிக் கொண்டாள் வத்சலா.

மறுபடியும் வியர்த்தது. எழுந்து உட்கார்ந்தாள் வத்சலா. இந்தச் சம்பவம் நேர்ந்த போது ஏற்படாத படபடப்பும், நாணமும் அவளுக்கு இப்போது வந்தன. அவள் எழுந்து கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள். அது செம்மையிட்டிருந்தது. அவள் திடுக்கிட்டாள். அவனைப் பற்றிய நினைவுகள் இனிப்பாய் அவளுள் உறைந்து போயிருந்தனவோ! பனிப் புஷ்பங்களை அள்ளிச் சொரிந்தாற் போல் உள்ளம் குளிர்ச்சியாய் மேலும் மேலும் யோசித்தது. அவளால் தடுக்க முடியவில்லை.

அந்தக் கடைசிக் காட்சி வந்தது. அம்மா நவக்கிரகங்களைச் சுற்றிக் கொண்டிருந்தாள்.

''ஏங்க...!''

சடக்கென்று திரும்பினாள்... அவன்.... தினகரன்...!

''உங்களை மீனம்மா மீனம்மான்னு கேலி பண்ணினேன்... என்னை மன்னிச்சிடுங்க....''

'' ...... ''

''வத்சலா... நான் நாளையிலிருந்து வர மாட்டேன்...''

"......"

"ஏன்னு கேட்கலையே... எனக்கு மெடிகல் காலேஜ்லே இடம் கிடைச்சிடுத்து. நாளை மெட்ராஸ் போறேன்...."

"......"

"என் கூடப் பேசக் கூடாதா...? உங்க நினைவா இதை வச்சுக்கலாமா?"

அவன் படக்கென்று அவள் மோதிரத்தை உருவிக் கொண்டான். அம்மா வர... அவள் விரைந்து சென்று விட்டாள். அதுதான் அவனை அவள் கடைசியாய்ப் பார்த்தது.

அன்று அவன் பிரிந்து சென்ற போது ஏற்படாத வேதனை இன்று அதனை நினைக்கும் போது ஏற்படுவது போல் தோன்றியது வத்சலாவுக்கு.

பச்சைக் கிளியாய், குழந்தைத்தனமாய் அன்று நின்று வேடிக்கை பார்த்தாள். இன்று ஏனோ மனசில் வலி ஏற்பட்டது. 'என்கிட்ட என்ன சொல்ல வந்திருப்பான்... என் மோதிரம் அவனிடம் இன்னமும் இருக்குமோ! டாக்டராகியிருப்பான். குழந்தைத்தனம் மாறிய பண்பட்ட கம்பீரத்தில் இருப்பான்...' — திடீரென்று அவனைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. 'ஐய்யோ.... இதெல்லாம் என்ன நினைப்பு...' என்று மனசு பரிதவித்தாள். அவனை அந்தப் பருவத்தில் துளியும் நினைக்காதவள் இன்று எதற்கு இந்த அவஸ்தை பட வேண்டும்? அன்பான கணவனுடன் சந்தோஷமாக வாழ்கிற இந்த நேரத்தில் எவனோ ஒருவனின் காதல் பார்வை, இத்தனை வருஷங்களுக்குப் பின் தன்னை ஏன் இப்படி வதைக்க வேண்டும்?

"சே... எல்லாம் இந்த மீன் படத்தைப் பார்த்ததால் வந்தது..." என்று உரக்க முணுமுணுத்தாள். துடித்தாள். மன அமைதி இழந்து அழுதாள். தவித்தாள்.

மாலை நேரம் வந்தது. மோகனும் வந்தான்; "எனக்குக் காப்பி கிடையாதா வத்சு...? என்ன இது ஒரு மாதிரியா இருக்கே....?"


வத்சலா அவன் மடியில் விழுந்து அழுதாள். சத்தமில்லாத அழுகை. விக்கல்களே இல்லாமல், நீர் மட்டும் வடிந்து கொண்டேயிருந்தது.

"என்ன வத்சு.... இப்படி அழுகிற ஜாதியில்லையே நீ... என்னாச்சு..."

அவள் நிமிர்ந்தாள். நீர் தேங்கல்களைத் துடைத்தாள். தான் மாசுபட்டு விட்டது போல் வெட்கினாள். அவன் முகம் பார்க்கக் கூசினாள். பின் குரல் நடுங்கக் கூறினாள்.

"உங்ககிட்டே சொல்லிடறேன்... என்னுள் ஏற்பட்ட சூறாவளியைச் சொல்லிடறேன்..."

அவ்வளவையும் சொன்னாள். மனம் விட்டுச் சொன்னாள். இறுதியில் விக்கலுடன் முடித்தாள்.



— ஆர். வசந்தகுமார்.

"அவனை நான் ஏன் இப்ப நினைத்தேன்... எப்படி முடிந்தது என்னால்? என்னுள் அவனைப் பற்றின பரபரப்பு, துடிப்பு எதை உணர்த்துகிறது? புரியலை... சத்தியமா புரியலை... உங்களுக்குத் துரோகம் செஞ்சிட்ட மாதிரி படறது...."

"வத்சலா.... முதல்ல நிதானத்துக்கு வா. எனக்குத் துரோகம் எல்லாம் நீ செய்யலை. சில நினைவுகள் அனிச்சையாய் ஞாபகத்திற்கு வரும். இதில் உனக்கு ஏற்பட்ட பரபரப்பிற்கும் அவஸ்தைக்கும் காரணம் அவன் உன்னைக் காதலித்திருக்கிறான் என்ற விஷயம் உனக்கு இன்றுதான் புரிய வந்திருக்கிறது. நம்மை அவன் விரும்பியிருக்கிறான் என்ற எண்ணம் உனக்குச் சந்தோஷத்தைக் கொடுத்திருக்கு. இது காதலல்ல. நாம் விரும்பப்பட்டிருக்கிறோம் என்ற ஒரு பெருமையான நிறைவு. ஒரு சுர உணர்ச்சி. உன்னுடைய எண்ணங்கள், தடம் புரண்டு விட்டதாய் ஒரு தவறான நோக்கத்தை நீ ஏன் கற்பித்துக் கொள்கிறாய்? வத்சலா இட்ஸ் சிம்பிள் க்யூரியாசிடி... தட்ஸ் ஆல்... எங்கே, சிரி..."

வத்சலா திடீரென்று ஒரு தோட்டம் போல் கொத்தாய்ப் புஷ்பித்தாள். மனசெல்லாம் சாரலடித்தது மாதிரி உணர்ந்தாள். 'எவனோ ஒருத்தனையா நினைத்தாய்? என்ன திமிர்! எடு பெட்டியை, ஓடு பிறந்தகத்திற்கு...' என்று கத்தும் கணவனாக இல்லாமல் அவளையே அவளுக்குப் புரிய வைத்த உசத்தியான, மனமுதிர்ச்சியுடைய, கனிந்த கணவனாக அவனை அடையாளம் கண்டு கொண்டதும் அவளுள் ஒரு சிலிர்ப்பு ஓடிற்று.

ஒன்று இறப்ப விழா

15

விவேக் சொல்லிக் கொண்டிருந்தான். "ஸார்! என் மனத்தில் அரும்பியிருக்கிற இந்தத் திட்டம் சிறிது ஆபத்தான திட்டம். ஆனாலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளப் போகும் வீரர்களையும் வீராங்கனைகளையும் வரப் போகும் பத்து நாட்களுக்குள் லண்டன் கொண்டு போய்ச் சேர்ப்பித்து விட வேண்டும். ஒரே விமானத்தில் எல்லா வீரர்களும் பயணப்படுவது ஆபத்தான ஒன்று. எனவே வீரர்களைப் பிரித்துப் பிரித்துச் சின்னச் சின்ன குழுக்களாக அனுப்ப வேண்டும். ஒரு குழுவில் மூன்று பேர் மட்டும்தான் இருக்க வேண்டும்."

ஹில் ஏதோ சொல்வதற்காக ஆயத்தப்பட, விவேக் கையமர்த்தினான். "எக்ஸ்க்யூஸ்மீ ஸார்! நான் என்னுடைய திட்டத்தைச் சொல்லி முடித்த பிறகு நீங்கள் உங்கள் சந்தேகங்களைக் கேட்கலாம்."

"ப்ளீஸ்... கோ... எஹெட்..." அமைச்சர் காமோத் தலையாட்ட, விவேக் தொடர்ந்தான். "ராணுவத்திற்கு உபயோகப்படும் மிகச் சிறிய விமானத்தைத்தான் நம்முடைய திட்டத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளப் போகிறோம். இண்டர் நேஷனல் ஏர்போர்ட்டில் விமானத்தை நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். ராத்திரி பத்து மணிக்கு மேல் ஹோட்டல் காபிடலில் இருந்து, மூன்று வீரர்கள் அடங்கிய முதல் குழுவை வெகு சாமார்த்தியமாய் இந்தியக் கழுகுகள் மோப்பம் பிடித்து விடாதபடிக்கு ஏதாவது ஒரு வாகனத்தில் ஏர்போர்ட்டுக்குக் கொண்டு போய் விட வேண்டும். ஏர்போர்ட்டில் தயாராய்க் காத்திருக்கும் ராணுவ விமானத்தில் அவர்கள் ஏறி, துபாய் ஏர்போர்ட்டில் இறங்கிக் கொள்ள வேண்டும். துபாயிலிருந்து வேறொரு பிரயாணிகள் விமானம் மூலமாக அவர்கள் லண்டன் போய்ச் சேர்ந்து விட முடியும்..." விவேக் சொல்லச் சொல்ல, அமைச்சர் காமோத் தம் திரட்சியான மோவாயை ஆட்காட்டி விரலால் நெருடிக் கொண்டே கண்களை மூடி யோசித்து விட்டு வாயைத் திறந்தார்.

"ராணுவ விமானம் என்றால் நான் கைந்து பேர் மட்டுமே அமரக்கூடிய ஜகுவார் டைப் விமானத்தைத்தானே... குறிப்பிடுகிறீர்கள் மிஸ்டர் விவேக்?"

"ஆமாம்."

"நம் நாட்டு ராணுவ விமானம் துபாய்க்குப் போவதென்றால் அந்த நாட்டின் அனுமதியை வாங்க வேண்டும்..." காமோத் தொப்பியைக் கழற்றி வழுக்கையைத் தேய்த்துக் கொண்டார்.

"இண்டர்போல் மூலமாய் அந்த அனுமதியை வாங்கி விடலாம் ஸார். துபாய் அரசும், ஏர்போர்ட் அதிகாரிகளும் இதற்கு உதவுவார்கள்."

கமிஷனர் ஹில் குறுக்கிட்டார்.

"மிஸ்டர் விவேக்! உங்கள் திட்டத்தில் எனக்குச் சில சந்தேகங்கள்..."

"ப்ளீஸ்..."

"ஒலிம்பிக் வீரர்கள் துபாய் ஏர்போர்ட் போய்ச் சேர்ந்து விட்டால், அங்கிருந்து பாஸஞ்சர் ஃப்ளைட்டில் லண்டன் போய் விடுகிற திட்டம் பாதுகாப்பானதுதான். ஆனால் ஹோட்டல் காபிடலில் இருந்து வீரர்களை பாம்பே சாகர் ஏர்போர்ட்டுக்குக் கொண்டு போவது சிரமம். இந்தியக் கழுகுகளுக்கு மூக்கில் எப்படியும் வியர்த்து விடும்."

"வியர்க்காதபடி நாம் செய்ய வேண்டும்."

"என்ன செய்யப் போகிறோம்?"

விவேக் மேஜையின் மேல் முழங்கைகளை ஊன்றிக் கொண்டு மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தான். "ஹோட்டல் காபிடலில் கடந்த இரண்டு நாட்களாய் நான் ஒரு விஷயத்தைக் கவனித்து வருகி

ராஜேஷ் குமார்

றேன். தினசரி ராத்திரி எட்டு மணிக்கு மில்க் சொஸைட்டி வேன் ஒன்று காலியான பால் கேன்களை எடுத்துப் போவதற்காக ஹோட்டலுக்குள் வருகிறது. பேரர்கள் பால் கேன்களை உருட்டிக் கொண்டு வந்து வேனில் ஏற்றுவதையும் பார்க்கிறேன்.''

அமைச்சர் காமோத் இடைமறித்தார்.

''ஒலிம்பிக் வீரர்களை அந்த வேன் மூலமாக ஏர்போர்ட் கொண்டு போய் விடலாம் என்று சொல்ல வருகிறீர்கள், இல்லையா மிஸ்டர் விவேக்...?''

''ஆமாம்....! ராணுவ விமானத்தில் பயணப்படப் போகும் ஒலிம்பிக் வீரர்கள் பேரர் யூனிபார்மில் வேனுக்குள் ஏறிக் கொள்ள வேண்டும். இந்த ஏற்பாடு ரகசியங்களை வெளியே கசிய விடாமல் பார்த்துக் கொள்வதுதான் முக்கியம். ஹோட்டல் மானேஜர், மில்க் சொஸைட்டி வேன் டிரைவர், ஏர்போர்ட்டுக்கு புறப்படும் வீரர்கள், நீங்கள், நான், கமிஷனர் என்கிற வட்டத்துக்குள் மட்டுமே இந்த உண்மை அடைபட்டுக் கிடக்க வேண்டும்... உண்மை வெளியே சிறிது கசிந்தாலும் உயிர்ச்சேதங்கள் தவிர்க்க முடியாததாகி விடும்.''

காமோத் உற்சாகமாய் நிமிர்ந்தார்.


''விவேக்! நீங்கள் துணிந்து செயல்படுங்கள். துபாய் ஏர்போர்ட்டில் நம் ராணுவ விமானம் இறங்குவதற்கும், அங்கிருந்து ஒலிம்பிக் வீரர்கள் வேறொரு பயண விமானத்தின் மூலம் லண்டன் போய்ச் சேர்வதற்கும் நான் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து விடுகிறேன். நீங்கள் வீரர்களை காபிடல் ஹோட்டலில் இருந்து சாகர் ஏர்போர்ட்டுக்குப் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

''ஷ்யூர்.... ஸார்'' — விவேக் தலையாட்டினான்.

ஹோட்டல் காபிடல்.

நேரம் நடுநிசி 1.05.

ஹோட்டலின் அண்டர்க்ரௌண்ட் தளத்தில் அமைந்திருந்த அந்தச் சிறிய கம்யூனிடி ஹாலின் ஜன்னல்களும், கதவும் இறுக்கமாய்ச் சாத்தப்பட்டிருக்க, அறைக்குள்ளே மண்டியிருந்த மெலிதான ஜீரோ வாட்ஸ் வெளிச்சத்தில், ஒலிம்பிக் குழுவைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள் அரை வட்டமாய்ப் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் மூச்சு காட்டாமல் உட்கார்ந்திருக்க, விவேக் எதிரே நின்று பேசிக் கொண்டிருந்



தான். பக்கத்தில் போலீஸ் கமிஷனர் ஹில்.

''இது பத்திரமான திட்டம். இந்தத் திட்டத்தையும் முயற்சி செய்து பார்க்காமல், ஹோட்டலுக்குள் முடங்கிக் கிடப்பது சரியில்லை. இன்னும் பத்து நாட்களுக்குள் நீங்கள் அனைவரும் லண்டன் போய்ச் சேர்ந்தாக வேண்டும். மொத்தம் இருபத்தொன்பது பேர் இருக்கிறீர்கள். மூன்று பேர்களைக் கொண்ட குழுக்களாக ஒன்பதும் இரண்டு பேரைக் கொண்ட குழு ஒன்றுமாக மொத்தம் பத்து குழுக்கள். தினசரி ஒவ்வொரு குழுவாகப் பயணப்பட்டால் கூட, பத்து நாட்களுக்குள் அனைவரும் லண்டன் போய் விடலாம். ஒலிம்பிக் போட்டிகள் முடிந்து நீங்கள் இந்தியா திரும்பும் போது, இந்தியக் கழுகுகளின் சிறகுகள் வெட்டப்பட்டிருக்கும்.''

விவேக் பேசிக் கொண்டிருக்கும்போதே, அத்லெடிக் ரோஸி பால்ராஜ் எழுந்து நின்றாள். ''பேரர் யூனிபார்மில் பால் வேனுக்குள் நுழைந்து, மறைந்து உட்கார்ந்து சாகர் ஏர்போர்ட்டுக்குப் போவது சாத்தியம் என்று என் மனத்திற்குப் படவில்லை ஸார்! இந்தியக் கழுகுகள் எப்படியும் இந்தத் திட்டத்தை மோப்பம் பிடித்து விடுவார்கள்..''

''எப்படிச் சொல்கிறீர்கள் மிஸ் ரோஸி பால்ராஜ்?''

''இந்தியக் கழுகுகள் இந்த ஹோட்டலுக்குள்ளேயே ஊடுருவியிருக்கலாமே?''

புன்னகை செய்தான் விவேக். ''இந்த ஹோட்டலுக்குள் அவர்கள் இல்லை...''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இந்த ஹோட்டலுக்குள் அவர்கள் இருந்திருந்தால்... இந் நேரம் நம்மில் இரண்டு பேராவது அவர்களுக்குப் பலியாகியிருப்போம். ஹோட்டலைச் சுற்றிலும் எஃகுக் கோட்டை மாதிரி காவல் போடப்பட்டிருக்கிறது. புதிதாய் வரும் நபர்கள் யாருக்குமே ஹோட்டலில் ரூம் கொடுப்பதில்லை. இன்னும் ஒரு மாத காலத்திற்கு இந்த ஹோட்டலில் நீங்கள் தங்கியிருந்தாலும் உங்களில் யாருக்குமே எந்த ஆபத்துமே வராது. இந்தியக் கழுகுகள் ஹோட்டலுக்குள்ளே நுழைய முடியாத காரணத்தினால்தான், நூறு மீட்டர் தூரத்திற்கு அப்பால் கட்டப்பட்டு வருகின்ற உயரமான இன்சூரன்ஸ் கம்பெனி கட்டடத்தின் உச்சியில், சோளக் கொல்லைப் பொம்மையை 'இன்ஸ்டால்' செய்து, அதன் மறைவிலிருந்து டெலஸ்கோப்பிக் ரைஃபிளை உபயோகப்படுத்தி, நம்மில் யாருக்கோ குறி வைக்க முயன்றார்கள்; தோற்றார்கள்!''

கமிஷனர் ஹில் குரலை நுழைத்தார்.

''ஒலிம்பிக் பார்டிஸிபெண்ட்ஸ்! மிஸ்டர் விவேக் குறிப்பிட்ட திட்டம் என்னைப் பொறுத்தவரைக்கும் சாத்தியமான திட்டம். துணிச்சலோடும் மன உறுதியோடும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் வெற்றி நமக்கு உறுதி....''

ஒலிம்பிக் வீரர்களிடையே ஒரு வேண்டாத நிசப்தம் சில விநாடிகளுக்கு நிலவ, அதைக் கலைத்தான் விவேக்.

''இந்தத் திட்டத்தின் முதல் பயணம் நாளைக்கு... இரவு எட்டு மணிக்கு ஆரம்பமாகிறது. அந்த முதல் பயணத்தை மேற்கொள்ளப் போகும் மூன்று பேர் உங்களில் யார் யார் என்பதைத் தீர்மானிக்கவே இப்போது நாம் இங்கே கூடியிருக்கிறோம்.''

விவேக் பேச்சை நிறுத்தி — எல்லோரையும் பார்வையால் ஊடுருவ,

மறுபடியும் வீரர்களுக்கு மத்தியில் நிசப்தம்.

ஹில் இப்போது தொடர்ந்தார். ''ஏதாவது நேர்ந்து விடுமோ என்று யாரும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. நீங்கள் துபாய் ஏர்போர்ட் போய்ச் சேர்கிற வரைக்கும் பாதுகாப்பு தொடர்ந்து கொண்டேயிருக்கும். அது கண்ணுக்குத் தெரியாத பாதுகாப்பு. உங்களில் முதல் மூன்று பேர் துணிந்து வந்தால்தான் திட்டத்தைச் செயல்படுத்த முடியும். யார் முன் வருகிறீர்கள் என்று தெரிந்தால் திட்டத்தை இறுதிப்படுத்தி விடலாம்.''

மீண்டும் நிசப்தம்.

விவேக் புன்னகை செய்தான்.

''உங்கள் தயக்கத்திற்கும், மௌனத்திற்கும் காரணம் புரிகிறது. ஆனால் நாம் ஏதாவது ஒரு முடிவுக்கு வர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இந்தத் திட்டத்தில் ரிஸ்க் எடுத்துத்தான் ஆக வேண்டும்'' விவேக் சொல்லச் சொல்ல —

டெக்காத்தலேன் அர்ஜுன் கிருஷ்ணா, மெதுவாய் எழுந்து நின்றான்.

''நான் முதல் குழுவில் இடம் பெறத் தயார் ஸார்...!''

''குட்...'' விவேக் அவனை நெருங்கிக் கை குலுக்கினான். கமிஷனர் ஹில் மற்றவர்களைப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

''இனி யாராவது.... இரண்டு பேர்...?''

ஸ்லோமோஷனில் அத்லெடிக் சுஷ்மா பட்டேல் எழுந்தாள்.

எல்லோரும் கைதட்டினார்கள்.

''எதுக்காக உங்க ஆபீஸ் கோபுவைக் 'கோப்பு, கோப்பு'ன்னு கூப்பிடறீங்க?''

''இருக்கிற இடத்திலிருந்து ஒரு இஞ்ச் நகர மாட்டானே!''

— கீழை. அ. கதிர்வேல்.



''ஒன் மோர் பர்சன்...?''

— கமிஷனர் உற்சாகமாய்க் கத்த எல்லோரும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். மௌனத்தில் விநாடிகள் கரையவே, விவேக் தோள்களைக் குலுக்கினான்.

''ஓ..கே... முதல் குழுவில் அர்ஜுன் கிருஷ்ணாவும், சுஷ்மா பட்டேலும் இடம் பெற்றுப் பயணப்படுகிறார்கள். இவர்கள் வெற்றிகரமாய்த் துபாய் ஏர்போர்ட் போய்ச் சேர்ந்ததும், மற்றவர்களை ஒன்பது குழுக்களாய்ப் பிரித்துப் பயணம் மேற்கொள்ளச் செய்வோம்... நாளை இரவு எட்டு மணிக்கு முதல் பயணம் ஆரம்பமாகிறது. எல்லோரும் படுக்கைக்குப் போகலாம். குட் நைட்...!''

விவேக் விடைபெற்றுக் கொண்டு கமிஷனர் ஹில்லோடு கம்யூனிடி ஹாலை விட்டு வெளியே வந்தான். இருவரும் இணையாய் நடந்தார்கள்.

ஹோட்டல், நிசப்தத்தில் உறைந்து போயிருக்க, செண்ட்ரி கார்ட்ஸ் மட்டும் சர்ச் லைட்டோடு அலைந்து கொண்டிருந்தார்கள்.

''இரண்டு பேர் துணிச்சலாய்ப் புறப்பட்டுப் போக முன்வந்தது மிகப் பெரிய விஷயம் விவேக். நான் இதை எதிர்பார்க்கவில்லை.'' — ஹில் சந்தோஷப்பட்டார்.

''இந்தத் திட்டத்தை அவர்கள் ஒப்புக் கொள்ளாத பட்சத்தில் இதே ஹோட்டலில் அடைந்து கிடக்க வேண்டியதுதான். இந்தியக் கழுகுகளை நாம் அமுக்குகிற வரையில் இவர்கள் காத்திருந்தால், ஒலிம்பிக் போட்டிகள் அங்கே நடந்து முடிந்து விடுமே!''

''அர்ஜுன் கிருஷ்ணாவும், சுஷ்மா பட்டேலும் பத்திரமாய்த் துபாய் ஏர்போர்ட் போய்ச் சேர்ந்து விட்டால், மற்றவர்களுக்குத் துணிச்சல் வந்து விடும்.''

படிகளில் உயர்ந்து தளத்துக்கு வந்த விவேக் ஹோட்டல் போர்டிகோ வரை சென்று, கமிஷனரை ஜீப்பில் ஏற்றி அனுப்பி விட்டுத் தன் அறைக்கு வந்தான்.

தூங்காமல் காத்திருந்தாள் ரூபலா. கையில் ஓர் ஆங்கில நாவல்.

''என்ன மாநாடு முடிஞ்சுதா?''

''முடிஞ்சுது..''

''யார்... யார்... புறப்பட ஒத்துக்கிட்டாங்க...?''

''அர்ஜுன் கிருஷ்ணா, சுஷ்மா பட்டேல்.''

''பரவாயில்லையே! தாய்க் குலத்துக்கும் வீரம் வந்திருக்கு.''

''அவங்க.. துணிச்சலா புறப்பட முன் வந்ததும்.. எனக்குள்ளே இப்போ லேசா கலக்கம்.''

''கலக்கமா...?''

''ம்.. இது பாதுகாப்பான திட்டம்தான். ஆனாலும் விஷயம் வெளியே கசிஞ்சிட்டா ரிஸ்க்தான்..! மினிஸ்டர்கிட்டேயும், கமிஷனர்கிட்டேயும் எந்த ஆபத்தும் வராதுன்னு அடிச்சுப் பேசிட்டேனே தவிர, அந்தக் கழுகுகளை நினைக்கும் போது நரம்பு மண்டலத்துல ஒரு சின்ன நில நடுக்கம்...'' விவேக் சொல்ல, ரூபலா சிரித்தாள்.

''என்ன துப்பறியும் புலி ஜகா வாங்குது..?''

''நான் ஜகா வாங்கலை ரூபலா. எதிரியோட பலத்தையும் புத்திசாலித்தனத்தையும் நினைச்சு ஒரு அஞ்சு பர்செண்ட் பயப்படறேன். இது நியாயமான பயம். அவங்க செஞ்ச கொலைகள் எல்லாம் திட்டம் போட்டு, துல்லியமாய், புத்திசாலித்தனமாய்ச் செஞ்சவை. இத்தனை கொலைகள் நடந்த பின்னாடியும் ஒருத்தனைக் கூடக் கைது பண்ண முடியவில்லையே...? இது அவங்களோட சாமர்த்தியம்தானே...?''

''சர்ட்டிபிகேட் தர்றீங்களா...?''

''சர்ட்டிபிகேட் தரலை.... போட்டிருக்கிற திட்டம் காதும் காதும் வெச்ச மாதிரி நடக்கணுமேன்னு கவலைப்படறேன். ஏதாவது அசம்பாவிதம் நடந்துட்டா.. மினிஸ்டர் காமோத்தும், கமிஷனர் ஹில்லும் என்னைப் பார்க்கிற பார்வையில் லட்சக்கணக்கான கலோரி உஷ்ணம் இருக்குமே..?''

ரூபலா ஏதோ பேச வாயெடுப்பதற்குள் அருகேயிருந்த டெலிபோன் தன் வாயைத் திறந்தது. கட்டிலில் சாய்ந்திருந்த விவேக் கைநீட்டி ரிஸீவரை எடுத்தான். 'இது எதுக்காகக் கத்துதோ...?' — சொன்னவன் —

''ஹலோ...'' — என்றான்.

''மிஸ்டர் விவேக்!''


''எஸ்...''

''ஸார்... நான் இன்ஸ்பெக்டர் கிஷோர்...''

''சொல்லுங்க... எனிதிங்.. இம்பார்ட்டெண்ட்...?''

''எஸ்.. ஸார்'' என்ற கிஷோர் முப்பது விநாடிகள் செலவழித்து விஷயத்தைச் சொல்ல — விவேக்கின் மனத்தில் விடியற்காலை தீபாவளியின் சந்தோஷம். ''ஈஸிட்?'' என்று கத்தி, ஏராளமாய் மகிழ்ந்தான்.

(தொடரும்)



''என்ன உங்க படத்தில சண்டைப் பயிற்சி லக்ஷ்மியம்மாள் — சாவித்ரின்னு போட்டிருக்கீங்க... யார் அது...?''

''என் அம்மாவும் மனைவியும்தான்... வீட்டுல போடற சண்டையைப் பார்த்துட்டு நான்தான் ஒரு சான்ஸ் கொடுத்தேன்...!''

— ஏ. ஆர். வீரராகவன்.



''பேங்குல கணக்கெல்லாம் கூட வச்சிருக்கியாமே. அப்புறம் ஏம்பா பிச்சையெடுக்கிறே...?''

''அந்தக் கணக்குல பணம் போட வேண்டாமா சாமீ...!''


— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.

''என் காதலர் கத்த அல்பம்!''

''ஏன்?''

''ரிப்ளை கார்டில் லவ் லெட்டர் எழுதினால்தான் பதிலே போடறார்!''

— ஞா. ஞானமுத்து



''எங்க அப்பா கதை எழுதுகிற மாதிரியே உயிலையும் எழுதி வச்சிட்டுப் போயிட்டார்!''

''எப்படி...?''

''இதில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் என் சொந்தக் கற்பனையே'ன்னு எழுதி வைச்சிட்டுப் போயிட்டார்.''

— புதூர் முருகன்.





''இவ்வளவு பெரிய வீட்டை ஐம்பதாயிரம் ரூபாய்க்கு விற்க உங்களுக்கு எப்படி மனசு வந்தது?''

''வாடகை விடுதானே?''

— ஞா. ஞானமுத்து

எழுத்தாளர் மனைவி: என்னங்க உங்க பெயரையும் கதையோட தலைப்பையும் போட்டிருக்கிறாங்க. கதையைக் காணோமே...?

எழுத்தாளர்: ஒருவேளை கதையை எடிட் பண்ணிட்டாங்களோ, என்னவோ?

— கடுவை கோபால்சாமி.



'என்னுள்ளும் பரவியது காயம்!'

வட்ட மேஜை

* 'நடிப்புச் சுதேசிகள்' கதா நாயகன் சுந்தருக்கு, ஊர்மிளா மூலம் ஏற்பட்ட காயம், என்னுள் பரவுகின்ற அளவுக்கு, அருமையான கதையைத் தந்த ஆசிரியர் பீஷ்மனுக்கு என் பாராட்டுக்கள்!

மயிலாடுதுறை. திருட்டிணை. எழில்.

* 'ஓர் ஆண் கணவனாகிறான்' 'பனாரில்' ஆரம்பித்து, 'பனாரில்' முடிந்த 'பளீர்' கதை! மனைவியைக் காணாமல் பதைபதைக்கும் சராசரி ஆண், அவளை மீண்டும் வீட்டில் காணும் போது தனது இயல்பான முரட்டுக் குணத்துக்கு மாறுவது வெகு யதார்த்தம்!

கருமத்தம்பட்டி. அ. இராஜப்பன்.

* ஆர். சூடாமணியின் 'மூட நம்பிக்கை' சிறுகதை, அற்புதம்! மற்றவர்கள், எதில் (மூட) நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, அதையே நமக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொண்டு, அவர்களைத் திண்டாட விட்டு, குளிர் காய்வதை வெகு இயல்பாய், வெளிக் கொணர்ந்திருந்தார், கதாசிரியர்!

கொரட்டூர். கே. என். "ஸ்ரீ" மருடப்பிரியன்.

* இவ்வாரத் தலையங்கத்தில் தாங்கள் வென்றவருக்கும், தோற்றவருக்கும் வழங்கியுள்ள அறிவுரை, சிறப்பானதாகவும், நடுநிலையோடும் உள்ளது. தாங்கள் கூறியுள்ளது போல் இனியாவது காங்கிரஸ் கட்சி ஜனநாயக முறையில் கிராம மட்டத்திலிருந்து கட்சியை வளர்க்க முயற்சி செய்தால் நன்றாக இருக்கும்.

வடுவூர். பீ. வாசுதேவன்.

* பல பத்திரிகைகள் குறைகளையே சுட்டிக்காட்டும் போது, 'இந்தியக் கடலோரக் காவல் படையின்' சேவையைக் 'கல்கி' விவரித்தது பாராட்டுக்குரியது.

பூனாம்பாளையம். என். ஆர். சுப்பிரமணியன்.

* பலரால் ஒரு பொருட்டாகவே மதிக்கப்படாத சமுத்திரத்தைச் சுத்தப்படுத்துவதிலிருந்து, கடற் பயணிகள், மீனவர்களின் அபயக்குரலுக்குக் கை கொடுப்பது வரை, மகத்தான சேவை புரிந்து வரும் கடலோரக் காவற் படையினரை இதுநாள் வரை அறிந்து கொள்ளாமல் இருந்தது பெருந்தவறு என்றே கருதுகிறேன். இவ் விஷயத்தில் என் அறியாமை இருள் விலகக் காரணமான 'கல்கி'க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்!

படிக்கும் வயதில் குப்பை பொறுக்கும் சிறுவர்களைக் காண நேரும்போதெல்லாம் மனசு துடிக்கும். 'மாணவர்களே நடத்தும் கல்விக் கூடம்' கட்டுரை வாசித்த போது சற்றே ஆறுதலும், நிம்மதியும் அடைந்தேன்!

திருத்துறைப்பூண்டி — 16. ஜெ... பிஸ்மி.

* 'ஆட்சி மாற்றத்தின் போது அண்ணா' என்ற கட்டுரையைத் தலையங்கத்திற்கு முந்தைய பக்கத்தில் போட்டு, சம்பந்தப் பட்டவர்களுக்குச் சில விஷயங்களை நாசூக்காகப் புரிய வைத்து விட்டீரே, சபாஷ்!

சென்னை — 15. கு. கணேசன்.

* உங்களது விமர்சனக் குழு 'நாளைய மனிதன்' படத்தின் டைட்டில்களைப் பார்க்கவில்லை போலும்! பின்னே என்னங்க, 'நாளைய மனிதனாக' நடித்திருப்பவர் புதுமுகம் அஜய். அவரைப் போல் டாக்டர் என்றும், டாக்டர்களில் ஒருவரான தயாரிப்பாளர் தக்காளி சீனிவாசனைப் போல், நாளை மனிதனாக நடித்திருக்கார் என்றும் விமர்சித்துள்ளார்களே!?

கும்பகோணம். கவிட் ரவி.

* நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. தலைவரைத் தலையங்கத்தில் வரவேற்றிருக்கிறீர்கள். அது நியாயமே. ஆனால் தி.மு.க.வுக்கு அடுத்த படியாக அதிக ஓட்டுகள் வாங்கி எதிர்க் கட்சி அந்தஸ்தைப் பெற்ற ஜெயலலிதா அணி அ. தி. மு. க.வை ஒரு வார்த்தையிலாவது வரவேற்க வேண்டாமா?

சென்னை — 33. சுப்ரமணியன்.

* கல்கி 22.1.1989 இதழில் திலகவதி எழுதியுள்ள கட்டுரையில் சில சீன தத்துவங்களைப் பற்றிக் கூறியுள்ளார். அதில் சில தவறுகள் உள்ளன. 'யின்' என்றால் பெண், 'யாங்' என்றால் ஆண் என்பது தமிழகத்து சிவ—சக்தி போன்ற ஒரு தத்துவம். சக்தியில்லாமல் சிவனில்லை சிவனில்லாமல் சக்தியில்லை என்று நாம் கூறுவது போல.

உண்மையில் கன்பூஷியஸ், தமது முன்னவரான லாவோட்ஸ—வின் தாவோயிசத்தை அடியொற்றியே தமது தத்துவங்களை விளக்கியுள்ளார். சீன மொழியில் தாவோ என்பதற்குத் தர்மம் என்று பொருள். லாவோட்ஸ் கூறுகிறார்: "ஆணிடம் விழிப்பாயிரு. பெண்ணிடத்தில் நிலை பெற்று இரு." கன்பூஷியஸ் கூறும் போது, "எல்லா ஆண்களும் பெண்களும் சமமே. இவர்களுக்குள் ஏற்றத் தாழ்வு இல்லை" என்கிறார். மேலும், "வாழ்க்கை என்பது இருவரும் ஒருவரோடு ஒருவர் இசைந்து போகிற போது நல்ல இசைக் கலைஞனால் மீட்டப்படும் இசைக் கருவியைப் போன்று பயன்தரும் என்கிறார். இன்னும் பல இடங்களில் பெண்மையின் உயர்வையும் தாய்மையின் சிறப்பையும் விரிவாக விளக்குகின்றார் கன்பூஷியஸ்.

நமது வேதங்களில் கூடப் பெண்மையைப் பெரிதாகத்தான் பேசியிருக்கிறார்கள். ஆனால், நடைமுறை என்ன? பெண்களை எவ்வளவு தூரம் மதிக்கிறோம்? சீனாவிலும் அப்படித்தான். கன்பூஷியஸும், லாவோட்ஸும் உயர்ந்த தத்துவங்களையே கூறினாலும் மக்கள் அதன்படி எவ்வளவு தூரம் நடந்தார்கள் என்பதே கேள்வியாகும்.

சென்னை — 2. எம். செல்வராமன்.

"பாலைவனத்தில் தொடங்கும் பயணம்!"


பதவி ஏற்றதுமே, ''பாலைவனத்தில் பயணம் தொடங்குகிறேன்'' என்றார் முதல்வர். தமிழகத்தின் பொருளாதார வறட்சி நிலையைத்தான் அவ்விதம் குறிப்பிட்டார். மத்திய அரசிடம் இருநூறு கோடி ரூபாய் நிதியுதவி கேட்டிருக்கிறார். மத்திய அரசின் ஒத்துழைப்பு ஒருபுறமிருக்க, தமிழகத்தின் பின்தங்கிய நிலைமையைச் சீராக்கத் தாமே முயற்சி எடுக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து அதற்கு முதல் படியாக மால்கம் ஆதிசேஷய்யா, குகன் ஆகிய இருவரையும் தமது ஆலோசகர்களாக நியமித்துள்ளார். முன்னாள் ஐ. ஏ. எஸ். அதிகாரி குகன், தமிழகப் பொருளாதாரம் பற்றிய ஒரு நூலில் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சுருக்கம்:

தமிழ் நாட்டின் பொதுத் துறை நிறுவனங்கள் மூலம் தமிழக அரசுக்குக் கிடைக்கும் வருவாய் மிகச் சொற்பமே. 83—84ல் தமிழகத்தில் 62 பொதுத் துறை நிறுவனங்கள் இருந்தன. இவற்றின் மூலம் ஏற்பட்ட மொத்த நஷ்டம் (ஆரம்பித்தது முதல்) 112.67 கோடி ரூபாய்!

நாற்பது நிறுவனங்களில் நஷ்டம் ஏற்பட்டு மற்றவற்றின் லாபத்தையும் விழுங்கி ஏப்பம் விட்டு விட்டது! தேவைக்கதிகமான ஊழியர்கள், மோசமான நிர்வாகம் போன்ற காரணங்களால் இவை சீர்குலைந்ததோடு. இத் தொழில்கள் எதற்காக ஆரம்பிக்கப்பட்டன என்ற நோக்கத்தில் குழப்பம் நிலவியது. ஒரு குறிப்பிட்ட துறையை வளப்படுத்த வேண்டும், வியாபார நோக்கம் இருக்க வேண்டும், சமுதாய நோக்கும் இருக்க வேண்டும் போன்ற முரண்பாடான பல நோக்கங்களை ஒரே சமயத்தில் அடிக்கோடிட்டதால் எந்த நோக்கமும் சரியாக நிறைவேறவில்லை. தவிர, ஏற்கெனவே தனியார் நிறுவனங்கள் சிறப்பாக இயங்கி வந்த செங்கல், பீங்கான், எலக்ட்ரானிக் சாதனங்கள், மோபெடுகள் தயாரிப்பு போன்ற துறைகளில் அரசும் ஈடுபட்டதால் அரசின் தயாரிப்புகள் விலை போகவில்லை.

○ தமிழ் நாட்டின் மிகப் பெரிய பொதுத் துறை நிறுவனம் மின்சார வாரியம். அரசாங்கத்திடம் மிக அதிகமான கடனுதவியும் மான்யங்களும் பெறும் நிறுவனமும் இதுவே! 1980—85 ஆண்டுகளில் மட்டும் மின் வாரியம் தமிழக அரசிடம் பெற்றிருந்த மான்யத் தொகை 867 கோடி. இது போதாதென்று அது பெற்றுள்ள கடனுக்கு அரசாங்கத்துக்கு அது செலுத்த வேண்டிய வட்டித் தொகை பாக்கி மட்டும் 84—85-ம் ஆண்டில் 278 கோடி ரூபாயாக உயர்ந்திருந்தது. ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க 64.3 பைசா செலவாகிறது. 48 பைசாவுக்கு விற்கப்படுகிறது. விவசாயிகளுக்கு இதைவிட மிகக் குறைந்த விலைக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. மொத்த மின்சார விநியோகத்தில் 27 சதவிகிதம் விவசாயத்துக்கே செலவிடப்படுகிறது என்பதால், இதனால் இழப்பு மிக அதிகம். (84—85 ஓராண்டில் மட்டும் இருநூறு கோடி ரூபாய் நஷ்டம்.) ஆனால் பம்பு செட் விவசாயம் செய்யும் ஏழை விவசாயி பயனடைய வேண்டும் என்ற நோக்கம் என்னவோ நிறைவேறவில்லை. ஏனென்றால் பம்ப் செட் உரிமையாளர்கள் பெரும்பாலும் சிறு விவசாயிகள் அல்லர். இந்த வசதி படைத்த விவசாயிகள் பம்பு செட் நீரை ஏழை விவசாயிக்கு விற்று விடுகிறார்கள். இவ்வாறு நடக்கும் வியாபாரத்தை அலசிக் கணக்குப் பார்த்தால் ஒரு யூனிட் மின்சாரத்துக்கு 67.5 பைசா கொடுக்கிறார் ஏழை விவசாயி என்று தெரிய வருகிறது. அதாவது மின்சார வாரியம் அதிகபட்சமாக நிர்ணயித்துள்ள 48 பைசாவைவிட மிக அதிகமான தொகை! ஆக அரசாங்கம் நஷ்டப்படுவதோடு அதன் நோக்கமும் நிறைவேறுவதில்லை.

○ அரசாங்கம் சமுதாய நலத்துக்கென்று ஒதுக்கும் தொகைகளிலிருந்து எந்தவித வருமானத்தையும் எதிர்பார்க்க முடியாது. இத் தொகைகள் உண்மையில் உதவி தேவைப்படும் ஏழை எளியவர்களுக்கு மட்டுமே உதவுகின்றன என்று சொல்ல முடியாது. உதாரணமாக ஒரு மருத்துவக் கல்லூரி மாணவனுக்கு ரூ 50,000 வரை அரசு



செலவு செய்கிறது. ஆனால் அதன் மூலம் அரசு பிற்காலத்தில் அடையும் பயனைக் கணக்கிட்டால் அத் தொகையில் சுமார் ஆறு சதவிகிதம்தான் திரும்பக் கிடைக்கிறது. அதே போல் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கென பதினைந்து கோடி ரூபாய் வரை ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு மான்யம் வழங்குகிறது அரசாங்கம். இதன் பயன் ஓரளவு வசதி படைத்த விவசாயிகளையே சென்றடைகிறது.

○ 1960 களில் தமிழக அரசின் மொத்தச் செலவுகளில் 33 சதவிகிதம் அரசு ஊழியர் சம்பளம், பென்ஷன் போன்றவற்றுக்கு ஒதுக்கப்பட்டது. 75—85-க்குள் இது நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அறுபது சதவிகிதமாக உயர்ந்தது. காரணம், எல்லோருக்கும் சம்பளம் உயர்த்தப்பட்டது அல்ல; ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டதுதான். வேறு பெரிய மாநிலங்களுடன் ஒப்பு நோக்கினால் தமிழ் நாட்டில் அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை அதிகமே, சம்பளம் குறைவு!

○ 1975—80 இல் அரசு வழங்கிய மொத்த மான்யங்களின் கூட்டுத் தொகை 54 கோடி ரூபாய். '80—85 இல் இத் தொகை 388 கோடியாக உயர்ந்துள்ளது.

○ இவ்வாறு தமிழக அரசின் பொருளாதார நிலை இருந்தாலும் அது, வேறு பல பெரிய மாநிலங்களுடன் ஒப்பு நோக்குகையில் பெரிய கடனாளியாகி விடவில்லை. பெரிய கடன் தொகைகள் தேவைப்படக் கூடிய பெரிய அளவிலான தொழில் திட்டங்கள் ஏதும் இங்கு துவங்கப்படவில்லை என்பது ஒரு காரணம். மத்திய அரசும் தமிழகத்தைப் பொதுச் சந்தையில் கடன் வாங்க விடாமல் தடை செய்து வருகிறது. வேறு விதங்களில் பெறப்பட்ட கடன்களும் சரியான முறையில் பயன்படுத்தப்படாததால் வருமானத்தைப் பெற்றுத் தருவதற்குப் பதிலாகத் தமிழகத்தை மேலும் கடனாளியாக்கியிருக்கிறது.

○ கிராமப்புற ஏழைகளுக்கு என்று சத்துணவுத் திட்டம் போன்ற பல இலவச திட்டங்கள் அறிவித்ததன் காரணமாக பட்ஜெட்டிலும் திட்டத்திலும் முதலீட்டுக்கென்று ஒதுக்கி வந்த தொகை மெள்ள மெள்ளக் குறைந்து, செலவுகளுக்கென்று ஒதுக்கும் தொகை அதிகரிக்க ஆரம்பித்தது. தொலை நோக்கும் திட்டமிடுதலும் இல்லாததால், மின்சார உற்பத்தி மற்றும் பாசன அபிவிருத்தி போன்ற நல்ல திட்டங்களே வகுக்கப்படாமல் போயின. வருவாய் பெற்றுத் தரக் கூடிய, தொலை நோக்குடன் கூடிய முதலீட்டுத் திட்டங்கள் குறைந்து, வருவாயே தராத சமூக நலத் திட்டங்கள் அதிகரித்ததற்குக் காரணம், அரசாங்கத்தின் கண்ணோட்டம் 'அடுத்த தேர்தல்' என்ற சிறிய எல்லைக்குள் குறுகி விட்டதுதான்.

நிவாரணம் என்ன?

○ அதிக வரி விதிப்பதன் மூலம் நிலைமையைச் சீர் செய்ய முடியாது. கள்ளு கடைகளைத் திறப்பதும் அறிவுடைமை அல்ல.

○ மான்யங்களைக் குறைக்க வேண்டும் (மான்யம் வழங்கப்படும் நோக்கம் சரியானதாக இருக்கலாம். ஆனால் நடைமுறை சரியல்ல).

○ பொதுத் துறை நிறுவனங்களின் செயல் திறனை முடுக்கிவிட்டு அவற்றிலிருந்து கணிசமான லாபம் வரும்படி செய்ய வேண்டும்.

○ மருத்துவம், கல்வி, சுகாதாரம் போன்ற சில அத்தியாவசிய சேவைகளை அரசு வழங்கியே ஆக வேண்டும். ஆனால் பெருவாரியான சமூக நலத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டால் அவற்றை என்றுமே நிறுத்த முடியாது. எனவே புதிய சமூக நலத் திட்டங்கள் எதையும் ஆரம்பிக்காமல் முதலீட்டுத் திட்டங்களுக்கு முன்னுரிமை தரவேண்டும்.

○ வரி ஏய்ப்பைக் கட்டுப்படுத்தி, வீண் செலவைத் தடுத்து, முதலீட்டிலும், நிர்வாகத்திலும், செயல்பாட்டிலும் அரசியல் தலையீட்டைத் தவிர்த்து, திறமைகள் மலரச் செய்ய வேண்டும்.

○ மத்திய அரசிடம் போராடி நியாயமான கடன் வசதிகளைப் பெற்று அவற்றை லாபகரமான முறையில் முதலீடு செய்ய வேண்டும்.

புகைப்படம்: **கே. வி. ஆனந்த்**

Tamil Nadu Economy - Performance and Issues.
Madras Institute of Development Studies,
Oxford and IBH Publishing Co. Pvt. Ltd.,
66, Janpath, New Delhi 110 001. Price Rs. 60/

அறிவுஜீவிகள்

சங்கரிக்குச் சற்றுப் பதற்றமாகவே இருந்தது.

அப்பாவின் முகத்தில் கடுமை வெளிப்படையாகத் தெரிந்தது. அப்பாவின் கோபத்திலும் நியாயமிருந்தது. அப்பாவுக்கு ஆறு மணிக்கு அவசரமாக ஒரு நண்பரைப் பார்க்க வேண்டும். இவள்தான் விஸ்வநாதனுக்காக அப்பாவைத் தடுத்து வைத்திருந்தாள்.

விஸ்வநாதனுக்கு இதுவே வழக்கமாகி விட்டது. சொன்ன நேரத்திற்கு எப்போதுமே அவனால் வர முடியவில்லை. வழக்கமாய் இவள்தான் அவனுக்காகக் காத்திருப்பாள். இந்த முறை அப்பாவும் சேர்ந்து கொண்டார்.

அப்பா கொஞ்ச நாட்களாகவே விசுவைச் சந்திக்க வேண்டுமெனச் சொல்லிக் கொண்டிருந்தார். ஒவ்வொரு முறையும் விசு தட்டிக் கழித்துக் கொண்டிருந்தான்.

நேற்றுத்தான் இங்கு வர ஒப்புக் கொண்டான். ஆனால் அது அவனது ஞாபகத்தில் இருக்குமா என்ற சந்தேகம் திடீரென்று எழுந்தது சங்கரிக்கு.

வாசலில் ஆளரவம் கேட்க, சங்கரி ஆர்வமாய் வாசலுக்கு ஓடினாள்.

விஸ்வநாதன் மெல்லிய புன்னகையுடன் நின்று கொண்டிருந்தான்.

''உள்ளே வாங்க!''

அப்பா எழுந்து வரவேற்றார். பரஸ்பரம் அறிமுகம் செய்து கொண்டனர். அப்பா சற்றுக் கூர்மையாய் அவனைப் பார்த்தார்.

விசு ஜோல்னாப் பையைத் துழாவி ஒரு புத்தகத்தை எடுத்து அவளிடம் நீட்டினான். அவள் வாங்கி, பக்கத்தில் வைத்தாள். அப்பா அதை எடுத்துப் புரட்டினார். பின் திடீரென அவனைப் பார்த்துச் சொன்னார்.

''எனக்கென்னமோ இந்த மாதிரி புத்தகங்களில் ஒண்ணுமே புரியறதில்லே.''

விசு சடாரென நிமிர்ந்தான்.

''புரியலைன்னு சொல்லாதீங்க... புரிஞ்சுக்க முயற்சி பண்றதில்லைன்னு சொல்லுங்க.''

அப்பா சற்று அதிர்ந்தார்.

— இதுதான் விசு. அவனுடன் பேசும் யாருமே சற்று அதிரத்தான் செய்வார்கள். அவன் பேச்சே வாள் வீச்சு மாதிரிதான் வந்து விழும்.

''எப்படியோ... பொழுது போக்கத்தானே புத்தகங்கள்? இதெல்லாம் படிச்சுட்டுக் குழப்பிக்கிறதை விட லைட்டா படிக்கிறதே போதும்னு நான் நினைக்கிறேன்.''

விசுவுக்கு இந்த முறை கோபமே வந்தது.

''என்னது வெறும் பொழுது போக்குக்கா? நீங்க இலக்கியத்துக்குரிய மரியாதையைக் கொடுக்கத் தவறிட்டீங்க... லைட் ரீடிங்னு நீங்க எதைச் சொல்றீங்க?''

''எவ்வித சூட்சமமும் நிறைந்திருக்காத ஜனரஞ்சகமான சாதாரண துணுக்குகள், சிறுகதைகள், தொடர் கதைகள் இவ்வளவே.''

''ஹா... வெறும் கிசுகிசுக்களையும், அபத்தங்களையும் மையமாய் வைத்திருக்கும் அவை வெறும் செத்த எலிக்குச் சமானம். நோய்க் கிருமிகளைச் சுலபமாய்ப் பரப்பும் அவற்றைப் புறங்கையால் ஒதுக்கி எறியாமல், அவற்றைப் படிப்பதில் நேரம் செலவழிப்பது காலத்துக்கு நாம் செய்யும் துரோகம்.''

அப்பா லேசாகக் கை தட்டினார்.

''கேட்க நன்றாக இருக்கிறது. ஆனால் யோசித்துப் பாருங்கள். இது மிகவும் அவசரமான உலகம்... எல்லாரும் அவரவர்க்கேயுரிய பிரச்னைகளுடன் ஒருவித டென்ஷனுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் இவ்வித சிக்கல்கள் நிறைந்த எழுத்துக்களைப் படித்து மனசைக் குழப்பிக் கொள்வதில் எனக்கு உடன்பாடில்லை.''

அப்பா ஆணித்திரமாய்ப் பேசினார்.

விஸ்வநாதன் அலட்சியமாய்த் தோள் குலுக்கினான். சங்கரிக்குச் சற்று பயம் வந்தது. பேச்சு போகும் திசை அவ்வளவு சரியாய்ப் படவில்லை. விசுவுக்கு மிகச் சுலபமாய்க் கோபம் வரும். அப்பா ஒரு படி மேல். இங்கு பர்சனாலிட்டி மோதல் நிகழ ஆரம்பித்தால் அது இவளுக்குத்தான் பாதகமாய்ப் போய் விடும்.

அப்பாவே பேச்சை மாற்றினார்.

''இன்னைக்குக் கொஞ்சம் வெயில் ஜாஸ்தி.....''

விஸ்வநாதன் வாய்விட்டுச் சிரித்தான்.

''ஏன் சிரிக்கறீங்க?''

''இன்னைக்கு வெயில் ஜாஸ்தி, மழை வரும் போலிருக்கு – குட்மார்னிங், இவையெல்லாம் எவ்வளவு மொண்ணையான வார்த்தைகள்! அதனதன் அர்த்தமிழந்த, மரித்துப் போன வார்த்தைகள்!''

''விசு சார், நீங்க எல்லாத்தையும் அறிவு பூர்வமாப் பாக்குறீங்க.. இதெல்லாம் பேச்சை ஆரம்பிப்பதற்கான சுலபமான தொடக்கம். என்னைப் பொறுத்தவரை, புத்திசாலித்தனமான மௌனத்தை விட, சுலபமான சம்பாஷணையையே விரும்புகிறேன். எல்லா நேரத்திலும் புத்திசாலியாய் இருப்பது மிகவும் அயர்ச்சியான ஒன்று.''

''அர்த்தமில்லாத சம்பாஷணைக்காகப் பேசுவதை விடப் பேசாமலிருப்பதே உத்தமம்.''

அப்பாவின் முகம் சுருங்கியது.

மதுமிதா

சங்கரி டீ, பிஸ்கட்டுகளைக் கொண்டு வந்தாள்.

அப்பா ஒரு பிஸ்கட்டைக் கடித்துக் கொண்டே மீண்டும் அவனிடம் கேட்டார்.

''எனக்கு ஒரு சின்ன சந்தேகம். அழுக்கேறிய ஜீன்ஸ், முரட்டு ஜிப்பா, கொஞ்சம் தாடி, ஜோல்னாப் பை — இவைதான் இண்டலெக்சுவலின் அடையாளமென நிர்ணயம் செய்தது யார்?''

இது அப்பாவுக்கும், விசுவுக்கும் இடையே நடக்கும் நிழல் யுத்தம். இந்த முறை அப்பாவும் திருப்பித் தாக்கத் தொடங்கியிருந்தார்.

''எங்களது ஒழுங்கற்ற நடை, உடை, பாவனைகள் இந்த ஒழுங்கற்ற வாழ்க்கையின் மீது எங்களுக்கு இருக்கும் நம்பிக்கையின்மையின் குறியீடுதான். இவை கிண்டல் பண்ணுவதற்குரிய சமாசாரமில்லை என்பது எனது அபிப்பிராயம்.''

''சரி விடுங்க.... எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு பண்ணியிருக்கிறீர்களா?''

அப்பா அவனைக் கீழே இழுத்தார்.

''எனக்கு அதில் நம்பிக்கையில்லை!''

''பின் எப்படி....?''

அவன் மௌனமாயிருந்தான்.

''உங்க கவிதைகளை நான் நிறைய படித்திருக்கிறேன். நல்லாவே எழுதறீங்க.''

''ஏதாச்சும் ஒண்ணு சொல்லுங்க.''

அப்பா தடுமாறினார்.


''நீங்கள் சங்கரியின் அப்பாவாக இருப்பதற்காக என் கவிதையைப் படித்திருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை. நான் அதை எதிர்பார்க்கவுமில்லை. வெறும் சம்பிரதாயத்திற்காக இதை என்னிடம் சொல்ல வேண்டிய அவசியமுமில்லை.''

சங்கரிக்கு வலித்தது.

''இல்லே விசு... அப்பா நிஜமாவே படிச்சிருக்கார்....''

அதற்கு மேல் அப்பா பேச முயற்சி செய்யவில்லை.

இவளது புக் கலெக்‌ஷனைப் பார்த்துவிட்டு விசு விடைபெற்றுக் கொண்டான். இவளுக்கு அப்பாவைப் பார்க்கவே பயமாயிருந்தது.



''ஸாரிப்பா... விசுவோட இயல்பே அப்படித்தான். ரொம்ப முரட்டுத்தனமா பேசிட்டாரில்லே.....''

''அதனாலென்ன சங்கரி? முரட்டுத்தனம் மட்டுமில்லே. புத்திசாலித்தனமும் கூட... ஆனா....!''

அப்பா தயக்கமாய் இழுத்தார்.

''வாழ்க்கையோடு ஒத்துப் போகாத இந்த வறட்டுப் புத்திசாலித்தனத்தால் என்ன பிரயோஜனம் என்பதுதான் என் சந்தேகம்.''

அப்பா சொல்வதும் நியாயம்தான்.

இவளும் இந்த வகையில் நிறைய தடவை யோசித்துப் பார்த்துக் குழம்பியிருக்கிறாள்.

''சங்கரி நான் பிராக்டிகல் மேன். விஸ்வநாதன் கனவு காண்ற ஆசாமி. கனவு சோறு போடாது என்னும் உண்மையை ஒதுக்கி விட்டு வாழ முடியாது. அவனை ஒரு வேலை தேடிக் கொள்ளச் சொல். உங்கள் சந்தோஷத்தைத் தடுக்கும் எண்ணம் துளியும் எனக்கில்லை...''

அப்பா நாசூக்காய்ச் சொல்லி விட்டார்.

பார்க்கில் மெல்ல மெல்ல இருள் கவிய ஆரம்பித்திருந்தது.

குல்மொஹர் மரத்தினடியில் இவள் கவலையுடன் உட்கார்ந்திருந்தாள்.

காத்திருத்தல் மிகவும் அவஸ்தையான விஷயம். இந்த அவஸ்தை இவளுக்குப் பழகி விட்டது.

கடைசியில் விசு வந்தான்.

வந்தவுடனே கோபமாய் அவளிடம் சொன்னான்.

''நேத்தைக்கு உங்க அப்பா என்னை ரொம்பத்தான் வெறுப்பேத்திட்டாரு....!''

''நீங்க ரொம்ப ஒழுங்கோ! அவரை எங்கே பேச விட்டீங்க?''

''ஆனா ஒண்ணு சொல்றேன். உன் அப்பா உன்னை மாதிரியில்லே....!''

''என்னை மாதிரின்னா?''

''இவ்ளோ புத்திசாலியான ஒரு பெண்ணுக்கு இவ்வளவு அசட்டு அப்பாவான்னு எனக்கு ஆச்சரியமாயிருக்கு....''

இவளுக்கு அவன் மேல் வெறுப்பாக வந்தது.

இவன் ஏன் இப்படி ஆகிப் போனான்? இலக்கியம் மனிதனை மேம்படுத்தும் விஷயமில்லையா? சக மனிதனை நேசிக்காத புத்திசாலித்தனத்தை இவன் கற்றுக் கொண்டது இவனுக்குத்தான் நஷ்டம்.

''சரி அதை விடு. அப்பா என்ன சொன்னார்?''

''அப்பா கொஞ்சம் யோசிக்கிறார்.''

''எதற்கு? நான் அயோக்கியன்னு முடிவு பண்ணீட்டாரா?''

''ச்சே.... அதெல்லாமில்லே....!''

''அப்புறம் ஏன் மழுப்பறே!''

அவன் முகம் சிவந்தது.

சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள்.

அந்த மௌனம் இவளைச் சங்கடப்படுத்தியது.

''அதை விடுங்க விசு. நேத்து நான் ஒரு கவிதை எழுதினேன். சொல்றேன் கேக்குறீங்களா?''

அவன் தலையாட்டினான்.

காரல் மார்க்ஸ்
ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி
டாஸ்டாவஸ்கி
சுந்தர ராமசாமி
ரோமன் போலன்ஸ்கி
சத்யஜித்ராய்
ஜென் — மற்றும்
சர்ரியலிஸம் பேசும்
தாடிக்கார சிநேகங்கள்
இருக்கட்டும்...
உபரியாய்
ஒரு வேலை தேடிக் கொள்.
அப்பாவிடம் சொல்லி
அமர்க்களமாய்
மாலை மாற்றிக் கொள்ளலாம்.

—அவள் சொல்லி முடித்த போது அவன் முகம் இறுகியிருந்தது.

''அப்பா இதான் சொன்னாரு விசு. அவரோட மருமகன் ஒரு இலக்கியவாதியா, ஒரு இலட்சியவாதியாயிருப்பதுடன் ஒரு வேலை பார்ப்பவராகவும் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். அதில் தவறு ஏதும் இருப்பது போல் எனக்குப் படவில்லை.''

அதற்கப்புறம் விசு ஒன்றும் பேசவில்லை.

மெல்ல எழுந்து இருவரும் நடந்தார்கள்.

அதுதான் விஸ்வநாதனை அவள் கடைசியாகப் பார்த்தது.




''இந்த ஆபீஸ்ல யாருக்கும் திட்டக் கூடத் தெரியாதா?''

''ஏன் அப்படிக் கேட்கிறே?''

''திட்ட அலுவலர் தேவைன்னு விளம்பரம் கொடுத்திருக்காங்களே!''

— சீர்காழி ஸ்ரீராம்.

சீரான வடிவமைப்பு, நீடித்த உழைப்பு,
பராமரிப்புச் செலவு குறைவு.



எனது வீட்டு போரிலிருந்து நீரிரைக்க நான் நம்புவது

தொழில் நுட்ப வல்லுநர்களால், தரமிக்க உபகரணங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் எல்ஜி போர் வெல் பம்ப், குறைந்த செலவில் அதிக நீரை வெளியேற்றுகிறது.

நீர் ஓட்டத்தைப் பொறுத்து இப்பம்புகள் சில இடங்களில் நிமிடத்திற்கு 30 முதல் 50 லிட்டர் தண்ணீரை வெளியேற்றும்.

உங்கள் வீட்டு போரில் நீங்களும் எல்ஜி போர்வெல் பம்ப் பொருத்திடுவீர்!

எல்ஜி

போர்வெல்பம்ப்

எல்ஜி எக்யுப்மெண்ட்ஸ் லிமிடெட்
''இந்தியா ஹவுஸ்'' திருச்சி ரோடு, கோயமுத்தூர்-641 018.

Susakads



* அம்பலம்!



* திகர்ச் சோதனை!

நீங்கள் கேட்டவை — தராசு

* வெங்கட், நாட்டரசன் கோட்டை.

? அர்ஜுன் சிங் பதவி விலகக் காங்கிரஸ் மேலிடம் பணித்தது பற்றி...?

! ஒரு கோடி ரூபாயில் வீடு, மகனின் லாட்டரி ஊழல் எல்லாம் அம்பலமான பிறகு — நீதிமன்றத் தீர்ப்பும் வெளியான பிறகு — காங்கிரஸ் மேலிடத்துக்கு வேறென்ன வழி?

* அர. மணிவண்ணன், ஆலந்தூர்.

? ஜானகி அம்மாளுக்கு இனி அரசியல் தேவைதானா?

! 'சட்டி சுட்டதடா, கைவிட்டதடா' என்று அவர் விட்டுவிடத்தான் பார்க்கிறார். ஆனால் ஜெயலலிதாவோ சுடுகிற சட்டியை அவர் தலையிலேயே கவிழ்த்து விடுவதென்று முனைந்து செயல்படுகிறார்!

* எம். வேணாப்ரியன், திருமருகல்.

? சமீபத்தில் வியந்த அரசியல் தலைவரின் பண்பு?

! 'இது தமிழ் வளர்ச்சிக்கான பதவி; இதை நான் துறக்க வேண்டிய அவசியமில்லை' என்று ஒட்டிக் கொண்ட ம.பொ.சி., 'இந்த அளவு கூட விவரம் தெரியாதவராய் இருக்கிறாரே' என்று நிஜமாகவே வியக்க வைத்தார். கடைசியில் நடந்தது என்ன? எல்லோருக்கும் தெரிந்ததே!

* சாகுல் அமீது ஆசாத், இடைய கோட்டை.

? இனி திரைப்படங்களுக்குக் கதை வசனம் எழுதப் போவதில்லை எனக் கலைஞர் அறிவித்திருப்பது பற்றி...?

! நியாயமான முடிவு என்பதோடு நேரமும் இருக்காது. ஆனால் திரைப்படங்கள் மூலமாக அவர் இமேஜை வளர்ப்பது ஏதேனும் ஒரு விதமாகத் தொடரும்!

* டி. அனு, போடிநாயக்கனூர்.

? எம். ஜி. ஆர். மக்கள் முன்னேற்றக் கழகம் என பாக்யராஜ் புதுக்கட்சி தொடங்கியிருக்கிறாரே?

! எம். ஜி. ஆர். புகழில் எத்தனை நாள்தான், எத்தனை பேர்தான் குளிர் காய்வது? எம். ஜி. ஆர். பெயரைச் சொல்லிக் கொண்டு அரசியல் பண்ணும் யாருமே அவரது அரசியல் வாரிசு அல்ல என்பதை மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். குட்டித் தலைவர்கள்தான் புரிந்து கொள்ளவில்லை. போகப் போகப் புரியும்.

* சாமா, சீர்காழி.

? காங்கிரஸும் ஜெ அணியும் கூட்டுச் சேர்ந்திருந்தால் தி. மு. க. தோல்வி அடைந்திருக்கும் போலிருக்கிறதே?

! வெறும் வோட்டுக் கணக்கை வைத்துக் கூட்டிக் கழித்து அப்படிச் சொல்லிவிட

ஜானகி அம்மாளுக்கு அரசியல் தேவைதானா?

* ஒட்டுதல்.



* சட்டி சுட்டதடா!



முடியாது! ஜெ. அணியுடன் காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்திருந்தால் தேர்தலில் பிரச்னைகளே வேறு மாதிரி இருந்திருக்கும்; அணுகு முறைகளும் சாணக்கியங்களும் மாறுபட்டிருக்கும். யார் கண்டது, இவர்கள் கூட்டுச் சேர்ந்ததால் மக்கள் அருவருப்பு அடைய, அதனாலேயே வோட்டுக்களை இவர்கள் இழந்தும் இருக்கலாம்!

*** இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.**

? சுப்பிரமணிய சுவாமி நடத்தி வரும் குட்டி கலாட்டாக்கள் பற்றி...?

! பேயாட்டம் போடுகிறவரைப் பூசாரியிடம் அழைத்துப் போனால் வேப்பிலை அடித்து அடக்கி விடுவார். ஆனால் சினிமாவில் அடிக்கடி நாம் பார்த்திருப்பது போல, பேயாட்டம் போடுவது போல் நடிப்பவர் பூசாரியையே விரட்டி விடுவார்! அதனால் சுப்பிரமணிய சுவாமியைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவதுதான் நல்லது. தன்னால் அடங்கி விடுவார்.



* குளிர் காய்கிறார்.



* குட்டி கலாட்டா

*** எஸ். செல்வன், மதுரை.**

? புதிய முதல்வருக்கு உங்கள் யோசனை?

! பரீட்சையில் தேறி மேல் வகுப்புக்குப் போகும் ஒரு மாணவனைக் கவனியுங்கள். தொடக்கத்தில் புத்தகங்களுக்கு அட்டை போடுவான்; ஹோம் ஒர்க்கைச் சரியாகச் செய்வான்; நிறுத்தி நிதானமாக எழுதுவான்; அன்றன்று நடக்கும் பாடங்களை அன்றன்று படித்து முடிப்பான். போகப் போகச் சிரத்தை குறையும்; அலட்சியம் குடிபுகும். ஊர் சுற்றுவதிலும், சினிமாவுக்குப் போவதிலும், விளையாட்டு அரட்டையிலும் கவனம் திரும்பும். மறுபடி இறுதித் தேர்வு நெருங்கும் போது விழித்துக் கொண்டு பரபரப்படைந்து இரவெல்லாம் கண் விழித்துப் படிப்பான். பலன் குறைவாகத்தான் இருக்கும். இன்னொரு மாணவன், எப்போதுமே கவனத்தைச் சிதற விடாமல் ஒரே சீராக வருஷம் முழுவதும் நன்றாகப் படிப்பான். நிறைய மதிப்பெண்கள் பெற்று முதல் மாணவனாகத் தேறுவான். கலைஞர் அமைச்சரவை இரண்டாவது ரகமாகச் செயல்பட வேண்டும்.

* பிரதான எதிர்க்கட்சி.



* சினிமா இமேஜ்...



*** ஆர். தேவேந்திரன், வேலூர். ***

? ஜெயலலிதா எதிர்க்கட்சியாகப் பணியாற்றுவாரா? அவரால் முடியுமா?

! நல்லவேளை, ஆளும் கட்சியாக வந்து விடவில்லை; தமிழகம் பிழைத்தது! பிரதான எதிர்க்கட்சியாகவாவது விளங்கி, பணியாற்றி விட்டுப் போகட்டுமே என்பது தமிழக மக்களின் அனுதாபத் தீர்ப்பு. இந்தத் தீர்ப்பும் தவறானது என்பதை மக்கள் போகப் போகப் புரிந்து கொள்வார்கள்.

*** ஜி. ஜெயராமன், கூந்தலூர்.**

? நரக வேதனை என்கிறோமே, உதாரணம் கூற முடியுமா?

! அமைச்சர் வீராசாமி அண்மையில் நடத்தியது போன்ற அமைச்சர்களின் திடீர் 'நகர சோதனை' பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு நரக வேதனை. ஆனால் மகிழ்ச்சி அடைவது தர்ம தேவதை!

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

ஆர். தேவேந்திரன்,
2/29, பிள்ளையார் கோயில் தெரு,
கோணவட்டம், வேலூர் — 13.

நாவல் எழுத ஒன்றரைக் கோடி ரூபாய் அட்வான்ஸ்!

●● ட்ருமன் கோபோட் என்ற அமெரிக்க நாவலாசிரியர் உலகப் பிரசித்தி. இவர் **Answered Prayers** என்று ஒரு நாவல் எழுத ஒப்புக் கொண்டார். அதற்குக் கிடைத்த அட்வான்ஸ் 25,000 டாலர். 1968 ஜனவரி முதல் தேதி, நாவலை அவர் எழுதி முடித்துத் தந்திருக்க வேண்டும். ஆனால் ஆகஸ்டு 84—ல் அவர் காலமான போது மூன்று அத்தியாயங்களே எழுதியிருந்தார். இதற்கிடையில் அவரது வேறு பல நாவல்கள் அபார வெற்றி பெறவே **Answered Prayers** என்ற இந்த நாவலை எழுதி முடிக்க அவகாசமும் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு தடவையும் அவகாசம் நீட்டிக்கப்படும் போதும் அட்வான்ஸ் தொகையும் அதிகரித்து வந்தது! கடைசி அட்வான்ஸ் பத்து லட்சம் டாலர்! ஒரு டாலர் என்பது பதினைந்து ரூபாய்! எங்கே, தமிழ் எழுத்தாளர்கள் பலமாகப் பெருமூச்சு விடுங்கள் பார்க்கலாம்!

●● ராஞ்சியில் மாணவர்கள் தேர்வு எழுதும் போது நியாயமற்ற, தகாத முறைகளைக் கையாள்கிறார்கள் என்று "ஆஜ்" என்ற ஹிந்தி நாளிதழ் எழுதியது. உடனே டோராண்டா கல்லூரி, ராஞ்சி கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களும் அந்தப் பத்திரிகைக் காரியாலயத்துக்குப் போய், சகலத்தையும் உடைத்து, நொறுக்கி, பலத்த சேதத்தை விளைவித்து விட்டு வந்தார்கள்!

●● 'இந்திய தேசிய விஞ்ஞானக் கண்காட்சிக் குழுமம்' என்பதாக ஒன்று இருக்கிறது. இது ஒரு 'விஞ்ஞான ரயிலை' சிருஷ்டிக்கத் திட்டமிட்டிருக்கிறது. விஞ்ஞான, மற்றும் பொறிஇயல் துறைகளில் மக்களுக்கு ஆர்வத்தை வளர்க்க, இந்த ரயில் கண்காட்சி






ஊர் ஊராகப் போகுமாம். இதற்கு மத்திய அரசு செலவழிக்கப் போவது இரண்டு கோடி!

●● பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சருடைய பெண் கரோல். வயது 35. பத்திரிகையாளரான இவர், பாகிஸ்தானில் பேநசிரைப் பேட்டி கண்டு விட்டுத் தாய் நாடு திரும்பினார். லண்டன் கஸ்டம்ஸில் நிற்காமல் நேராகச் சென்று கொண்டிருந்த இவரை, அதிகாரிகள் தடுத்து நிறுத்தி விட்டார்கள். இவர் அணிந்திருந்த ஒரு கடிகாரம் 1500 பவுண்டு மதிப்புள்ளது என்று மதிப்பிட்டார்கள். (1 பவுண்டு: 27 ரூபாய்) இதனைப் பரிசாகப் பெற்றதாகக் கரோல் நிரூபிக்க முடியவில்லை. எனவே சட்ட விரோதமாக சுங்க வரி செலுத்தாமல் இதனை பிரிட்டனுக்குள் கொண்டு செல்ல கரோல் முயன்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. சில காலம் சென்று நூறு பவுண்டு 'டியூடி' கட்டி விட்டுக் கடிகாரத்தை மீட்டுச் சென்றார் கரோல். நமது சுங்க அதிகாரிகளுக்கு இந்த அளவுக்குத் துணிச்சல் வருமா?

●● போபால் அருகே பக்பஹாரா என்னும் கிராமத்தின் சுற்று வட்டார மக்கள் கரடித் தொல்லைக்கு ஆளாகினர். ஆட்கொல்லிக் கரடிக்குப் பயந்தபடி வாழ்ந்தனர். ஒருநாள் டோலாராம் சர்மா சைக்கிளில் போய்க் கொண்டிருந்த போது திடுமென கரடி தோன்றி, பயங்கரமாக வாயைப் பிளந்து உறுமியது. டோலாராம் அச்சத்தை உதறி, சைக்கிளை விட்டு இறங்கினார். கரடி தம்மைத் தாக்கு முன் தாம் அதன் மீது பாய்ந்து அதன் கழுத்தைச் சுற்றி வளைத்தார். பிடியை இறுக்கினார். சில நிமிஷத் தீவிரப் போராட்டத்துக்குப் பிறகு கரடியைக் கொன்றே விட்டார்!

முகமூடிகள்





சாய்ராம்

"சங்கர் நான் என் முடிவைச் சொன்னால் தப்பா எடுத்துக்குவீங்களா?"

— மெல்லிதான விளக்கில் மெல்ல மிதந்து வந்த இசையை ரசித்தபடி சங்கர் சிரித்தான்.

"நான் ஒன்றும் நினைக்க மாட்டேன். தைரியமா சொல்ல நினைக்கிறதைச் சொல்லலாம்."

"சங்கர் உங்களைச் சிநேகிதராக ஏற்றுக் கொள்ள முடிகிறதே தவிர, கணவராக நினைக்க முடியவில்லை. காரணம் சொல்லத் தெரியலே. சாரி."

"ஓக் மாலதி. இதிலே தவறேயில்லை. ஓர் ஆம்பளை எப்படித் தன் கருத்தைத் தைரியமாகச் சொல்ல உரிமை இருக்கிறதோ அதே போல் பெண் சொல்றதிலே என்ன தப்பிருக்கு...? உன் கருத்தையும் தெரிஞ்சுக்கணுங்கிறதுக்காகத்தான் இங்கே உன்னைக் கூப்பிட்டேன். வந்ததற்கு நன்றி."

— தன் கருத்தையே நியாயப்படுத்துகிறவர்கள் மத்தியில் சங்கர் விநோதமாகத் தெரிந்தான். மாலதியின் புருவ மேடுகள் அதைப் பிரதிபலித்தன.

"இந்த பார்மாலிட்டி அவசியமில்லை.



அவர்: எனக்குக் கல்யாண வயதில் ஐந்து ஆண் பிள்ளைங்க இருக்காங்க!
இவர்: அப்ப கூடிய சீக்கிரத்தில் ஒரு நகைக்கடை வைச்சிடுவீங்கன்னு சொல்லுங்க!

— ஜே. பி.



பெண் பார்க்கிறேன் பேர்வழின்னு கூட்டமாய்ப் போய் நல்லாத் தின்னுட்டு, பெண் குட்டை — கறுப்பு — நல்ல வேலையில்லை என்று நொண்டிச் சாக்கு சொல்லுதல் அநாகரிகம்; அயோக்கியத்தனம்! அதற்கு நான் இடம் கொடுக்க விரும்பலை. அதனால்தான் ஆபீஸ் விட்டவுடன் இங்கே வந்து உன்னைச் சந்திக்க ஏற்பாடு பண்ணினேன்.

''....உன்னுடைய முடிவு என்னைப் பாதிக்கும் — கண்டிப்பா....! நேருக்கு நேர் நீ சொன்னது சரியென்றாலும் என் மனசு கவலைப்படும். ஆனால் கொஞ்ச நாள்ல பழகி விடும். சமாளிச்சுக்கலாம். எனிஹெள என்னுடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.''

— சொல்லி விட்டு விடைபெற்றுப் போன சங்கரையே பார்த்தாள் மாலதி. 'கண்டிப்பா இதை இன்னிக்கு டைரில எழுதணும்.... முதன் முதலில் ஒரு கண்ணியமான ஆம்பளையைப் பார்த்ததைக் கிரிஜாகிட்டச் சொல்லணும்.'

அதன் பிறகு நாலு நாட்களுக்கு, அந்த ஹோட்டலைக் கடந்தபோதெல்லாம் சங்கருடன் சேர்ந்து சாப்பிட்டதும், பேசியதும் நினைவுக்கு வந்தன மாலதிக்கு. மூர்த்தியுடன் கல்யாணம் நிச்சயமானவுடன் மறக்காமல் சங்கருக்கும் அழைப்பிதழ் அனுப்பினாள். 'கல்கத்தாவுக்கு ஆபீஸ் விஷயமாகப் போய் விட்டேன். வர முடியவில்லை என்றாலும் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்' என்ற தந்தி வந்தது அவனிடமிருந்து.

''முதல்ல ரூமுக்குப் போறதுக்கு முன்னாடி எல்லாரையும் ஒரு பார்வை பார்த்துடறேனே! ஆல் எ ஸீனியர் ஸ்டாப் — நீங்க எல்லாரையும் அறிமுகப்படுத்துங்க'' — பெங்களூரின் குளிரை அலட்சியம் செய்தபடி ஸ்வெட்டரில்லாமல் காரிலிருந்து இறங்கியதும் சங்கர் சொன்னதைக் கேட்டவுடன் பத்மனாபன் அதிர்ந்து போனார். கம்பெனிக்கு இதுவரை மாறி மாறி வந்த ஆறு ரீஜனல் மானேஜர்களும் வந்த முதல் நாளே ஏசி ரூமில் உட்கார்ந்து கொண்டு அதிகாரம் பண்ணியதும் — கூட யார் யார் எல்லாம் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளக் கூட முயற்சி செய்யாததும் ஞாபகம் வந்தது.

''அதுக்கென்ன சார், தாராளமா...''

பதினைந்து நிமிடங்களில் அனைவரும் அறிமுகப்படுத்தப்பட்டனர். டெஸ்பாச்சில்-தூங்கிக் கொண்டிருந்த கோபு, பிரிண்டிங்கில் யாருமே சட்டை செய்யாத இராமநாதன், எல்லோரிடத்தும் போய் ஒரு ரீஜனல் மானேஜரே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதைப் பார்த்து ஆபீஸே ஆச்சரியப்பட்டது. புதிதாக வந்தவரின் மேல் ஒரு மரியாதை உண்டானது. இதைத் தருந்தபடி தக்க வைத்துக் கொள்ள வேண்டுமே என்று கவலைப்பட்டது. சங்கர் சாயந்திரம் ஆபீஸ் விட்டவுடன் ஹாலில் அத்தனை பேரையும் அழைத்துச் சின்ன விருந்து கொடுத்தவுடன் ஆபீஸே நெகிழ்ந்து போனது. 'சார் சார்' என்று அன்பைப் பதிலுக்குக் கொடுத்துச் சந்தோஷப்பட்டது.

''எஸ், கமின்''

''சார் — ஐ'ம் மூர்த்தி — பர்சேஸ் ஆபீஸர். இன்னிக்குத்தான் லீவ் முடிஞ்சு ஜாயின் பண்றேன்.''

''குட். உட்காருங்க.''

உட்கார்ந்து கொண்ட மூர்த்தி தன்னையே சங்கர் உற்றுப் பார்ப்பதைக் கண்டு தலையைத் திருப்பிக் கொண்டான். நீண்ட மௌனத்தைச் சங்கரின் குரல் கலைத்தது.

''மூர்த்தி என்னை எங்கேயாவது பார்த்த ஞாபகமிருக்கா!''

''சாரி சார்...''

''மாங்கா தலையா!''

— மூர்த்தி சட்டென நிமிர்ந்தான். காலேஜில் அவனது அடைமொழி அது. அவனது தலை கொஞ்சம் சின்னதாக இருக்கும். அதனால் நெருங்கிய நண்பர்கள் எல்லாம் அவனைச் செல்லமாக அப்படித்தான் கூப்பிடுவார்கள்.

''நீங்க..... நீ சங்கர்தானே!''

''முட்டாள்! த சேம் சங்கர். கட் அடிச்சுட்டு உங்கூட சினிமாவுக்கு வந்து தியேட்டரிலே தம் அடிச்சுட்டுத் தியேட்டர்காரன் வந்து ரகளை பண்ணி, வெளியிலே போனோமே — பஸ்ஸில் புட்போர்டில் தொங்கியதால் போலீஸ்காரர் பிடிச்சவுடன் காலேஜ் கார்டைக் காண்பிச்சுத் தப்பிச்சமே அதே சங்கர்டா!''

''உங்க கடையில் ஐந்நூறு ரூபாய்க்கு மேல் விலையுள்ள புடைவைகளை எடுங்கள்; சீக்கிரம்!''

''எடுத்தாச்சு சார்! செலக்ட் பண்றீங்களா?''

''அதையெல்லாம் எங்காவது சீக்கிரம் மறைச்சு வையுங்க. என் வைஃப் புடைவை வாங்க வந்துக்கிட்டேயிருக்கா...!''

— ரா. ரகோத்தமன்.



— அதற்குப் பிறகு அவர்கள் நிறைய பேசினார்கள். மூர்த்தி தனக்குக் கல்யாணமான விவரத்தை, அவனது விலாசம் தெரியாததால் தெரிவிக்காமைக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டான். ஓர் ஆச்சரியகரமான சந்திப்பில் — புதிய சூழலில், மறுபடியும் பார்த்துக் கொண்டதற்குச் சந்தோஷப் படுவதாகச் சொல்லி மாய்ந்து மாய்ந்து போனான். சட்டென்று தன்னால் கண்டு பிடிக்க முடியவில்லையே என்று நினைத்து வெட்கப்பட்டான்.

''சரி — எங்கிருக்கே, எத்தனை பசங்க. மனைவி வேலைக்குப் போறாளா?'' — கேட்டான் சங்கர்.

''கல்யாணம் இப்பத்தான் ஆச்சு. என் மனைவி ஜான்ஸன்ல டைப்பிஸ்ட். எப்ப வீட்டுக்கு வரே?''

''வரேன்..''

''என்னிக்கு?''

— சங்கர் காலண்டரைப் பார்த்தான். நாட்களை எண்ணினான்.

''நாளன்னிக்கு.''

''ஓகே. லஞ்சுக்கு வந்துடு.''

''வாவ்'' — வீட்டைப் பார்த்ததும் சங்கர் ஆச்சரியப்பட்டான். சின்ன வீடு தான். எண்ணினால் மொத்தம் நாலு அறைகளிருக்கும். ஆனால் தனியான வீடு. எந்த விதப் பிரச்னையும் இல்லாத இடம். சின்ன தோட்டத்துடன் அமைதியாக இருந்தது.

''சங்கர் — மீட் மை வொய்ப் மாலதி...''

— காப்பியுடன் வந்த மாலதியைப் பார்த்தவுடன் சங்கர் அதிர்ந்தான். அதே மாலதிதான். சென்னையில் மெல்லிய இசைக்கு நடுவே ஹோட்டலில் பிடிக்க வில்லை என்று முகத்திற்கு நேராய், நாசூக்காய்ச் சொன்ன — த ஸேம் மாலதி! கல்யாணத்திற்குக் கண்டிப்பா வரணும் என்று அழைப்பிதழ் அனுப்பிய மாலதி....

மாலதிக்கும் அதே நிலைமைதான். 'இவர் எங்கே இங்கு வந்தார்? ஒருவேளை நான் இவரை வேண்டாமென்று சொன்னதை அவரிடம் சொல்லியிருப்பாரோ. சே.... சே.... என்ன நெனைப்பு வருது. எதையும் ஈஸியா எடுத்துக்கிற மனிதர் — இப்படியெல்லாம் செய்வாரா....?'

''வணக்கம்!''

— எதையும் கண்டு கொள்ளாமல் சங்கர் கைகூப்பினான். மாலதிக்குத் தெளிவாயிற்று. வணக்கமென்று சொல்லி விட்டு உட்கார்ந்து கொண்டாள்.

சங்கர் ரசித்துச் சாப்பிட்டான். பிரமாதம் என்று பாயசத்தை டம்ளரில் கேட்டு வாங்கிக் குடித்தான். என் மனைவிக்கு எப்படி பாயசம் வைக்கணும்னு ஒருநாள் வந்து சொல்லிக் கொடுங்களேன் என்று மாலதியை வெட்கப்பட வைத்தான். கண்டிப்பா உங்க மனைவியையும் கூட்டிக்கிட்டு மறுபடியும் வரணும் என்று மாலதியின் வேண்டுகோளுக்குச் சிரித்தபடியே சம்மதம் சொன்னான். வாசல் வரை வந்து இருவரும் வழியனுப்பி வைத்தனர்.

''மூர்த்தியைக் குமார் இண்டஸ்ட்ரீஸ் பைலோடு வரச் சொல்லுங்க.''

''இன்னிக்கு மூர்த்தி வரலை சார்.''

''வரலையா! ஏதாவது போன் வந்ததா? இன்னிக்கு குமார் இண்டஸ்ட்ரீஸ் மேட்டரை செட்டில் பண்ணியாகணுமே''

''........................''

— ஏன் வரலை...? வீட்டுக்குப் போன். பண்ணிய போது 'அவர் கார்த்தாலேயே ஆபீஸுக்குப் போறேன்னுட்டுக் கிளம்பினாரே' என்று மாலதியிடமிருந்து பதில் வந்தது.

'எங்கே போயிருப்பான்? இன்னிக்கு முக்கியமான வேலையிருக்கு. எப்படியும் இன்னிக்கு இதை செட்டில் பண்ணியாகணும்னு அவனுக்குத் தெரியும். என்ன பிரச்னை?

சங்கரால் தீர்மானிக்க முடியலை.

''மூர்த்தி கார்த்தால ஏன் வரலை? வீட்டில போன் பண்ணினா ஆபீஸ் போயிருக்கார்னு சொன்னாங்க.''

— மூர்த்தி மதியத்துக்கு மேல் உள்ளே நுழைந்ததும், டிக்டேஷன் கொடுத்துக் கொண்டிருந்ததை நிறுத்தி விட்டு, சங்கர் படபடத்தான். கை காட்டலைப் புரிந்து கொண்டு ஸ்டெனோ வெளியே போனாள்.

''........................''

''உட்கார். என்ன பிராப்ளம்? இன்னிக்குக் குமார் இண்டஸ்ட்ரீஸ் மேட்டரை முடிக்கணும்னு உனக்குத் தெரியுமில்லே.''

கணவன்: நேத்து சொன்ன நியூஸ்தான் இன்னிக்கும் சொல்றா. டீ. வி. யை ஆஃப் பண்ணு!

மனைவி: நானே ஆஃப் பண்ணனும்னு நினைச்சேன். நேத்து கட்டின அதே சேலையைத்தான் இன்னிக்கும் கட்டியிருக்கா... ஹூம்!

— ரா. ரகோத்தமன்.

''எஸ்''

''பின்னே, ஏன் காலையில வரலை....? என்ன பிராப்ளம்? சொல்லேன்.''

''சொல்றதுக்கு என்ன இருக்கு....? ராத்திரி வீட்டில ஒரு சின்னத் தகராறு. அதான் மூடை அப்செட் பண்ணிடுச்சு. அப்படியே கார்த்தால மனம் போன போக்கில் திரிஞ்சுட்டு வரேன்.''

— அவனே சொல்லட்டும்னு சங்கர் பார்த்தான்.

''மேட்டர் பெரிசில்ல. சின்னதுதான். முந்தா நேத்து வீட்டுக்குப் போனா வீடு பூட்டியிருந்தது. அவ ஆபீஸ்லேந்து வரலை. ஒரே தலைவலி. அரை மணி கழிச்சு வந்தா. என்னன்னு கேட்டா, திடீர்னு பிரண்ட் வீட்டுக்குக் கூப்பிட்டா. போனேன். லேட்டாயிடுச்சுன்னு விட்டேத்தியா பதில் சொல்லிட்டுப் படுத்துட்டா. காப்பி கொடுன்னு கேட்டதுக்கு உங்களைப் போல எனக்கும் தலைவலி மண்டையைப் பிளக்குது. போய் ஹோட்டல்லே வாங்கிண்டு வாங்களேன் என்றாள். சரி போனாப் போவுதுன்னு விட்டுட்டேன்.

''நேத்திக்கு நான் வீட்டுக்குப் போகும் போது கொஞ்சம் லேட்டாயிடுச்சு. ஒரே பசி. சரி வா சாப்பிடலாம்னு கூப்பிட்டேன். பத்து நிமிஷம் வெயிட் பண்ணுங்க. டீவில இந்த புரோகிராம் முடியட்டும் சாப்பிடலாம்னு சொன்னா. எனக்குக் கோபம் வந்துடுத்து. உடனே போய் டீவியை ஆப் பண்ணினேன். ரொம்பக் கோபமா கத்திட்டா. கை ஓங்கிட்டேன்.... நேத்து முழுக்கப் பேசவேயில்லை. அதான் எரிச்சல்.

''அதோட இல்லாம அவளை யாரோ ஒரு முறை பொண்ணு பார்க்க வந்தாங்களாம். பையன் தனியா பேசணும்னு சொன்னானாம். தனியா போய், 'தைரியமா சொல்லு, பிடிச்சிருக்கா'ன்னு கேட்டிருக்கான். இவ என்னமோ தெரியலை. உங்களை எனக்குப் பிடிக்கலைன்னு சொல்லிட்டாளாம்!''

''இதில என்ன தப்பு?''

''என்னவா? அவ எப்படி ஒரு பையனைப் பிடிக்காதுன்னு சொல்லுவா? எவ்வளவு திமிர் இருக்கணும்! அதே திமிரோடத்தான் என்னை எதுக்கெடுத்தாலும் எதிர்த்துப் பேசறா... என்னால் பொறுக்க முடியலை.''

''மூர்த்தி நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்கமாட்டியே?''

''சொல்லு...''

''நீ செய்யறது எந்த விதத்தில் நியாயம்? உன் எதிர்பார்ப்புக்களை எப்படி உன் பெண்டாட்டிக்கிட்ட நீ திணிக்க முடியும்? உனக்கொரு கருத்து இருக்கிற மாதிரி அவளுக்கொரு கருத்து இருக்குமில்ல... அதை முதல்ல நீ மதிக்கத் தெரிஞ்சுக்கணும். உனக்குப் பிடிச்சது — பிடிக்காததுன்னு இருக்கிற மாதிரி அவளுக்கும் இருக்கும். யாரோ ஒருத்தனை வேண்டாம்னு சொன்னதுனாலதான் அவ உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடிந்தது. நீ அதையேன் யோசிக்க மாட்டேங்கறே?

''அல்பமாய் காப்பிக்கும் — அவ எங்கோ வெளியில போயிட்டு வந்ததுக்கும் போய்ச் சத்தம் போட்டிருக்கே. அவளும் உன்னைப் போலத்தான் ஆபீஸ் போறா. நீயாவது தூங்கி எழுந்துட்டு, குளிச்சுட்டு, சாப்பிட்டுட்டு நேரா வந்துடறே. ஆனால் அவள் எழுந்து காப்பி போட்டு — குளிச்சுட்டு — நீ குளிக்க வெந்நீர் போட்டுட்டு — மத்தியானச் சாப்பாட்டை டப்பாவிலே போட்டு — கார்த்தால டிபன் பண்ணி உனக்குப் போட்டு — தான் சாப்பிட்டு — அப்புறம் ஆபீஸ் போய் லொட்டு லொட்டென்று சாயந்தரம் வரைக்கும் டைப் அடிச்சிட்டு — திரும்பவும் வந்து சமைச்சு — ஓ — ஹாரிபிள். புரிஞ்சிக்கடா — ப்ளீஸ் — அர்த்தமில்லாம உன் ஈகோவை வ ள ர் த் து க் காதே.''

''.......................''

''புரியுதா?''

''சரி. வேலையை முடிச்சிட்டு வீட்டுக்குப் போறேன்.''

''குட்.''

''**அ**ங்கிள்! ஆன்ட்டிக்கு வெளியே ஏதோ பார்ட்டியாம். போயிருக்காங்க. சாவி இந்தாங்க.''


— பக்கத்து வீட்டுப் பெண்கிட்டேயிருந்து சாவியை வாங்கிக் கொண்டு சங்கர் வீட்டுக்குள்ளே போன போது ஹால் ஹோ.... என்றிருந்தது. போட்டது போட்ட படி கிடந்தது. டீவி மெயின் ஸ்விட்ச் ஆப் பண்ணாமல்..... குழாய் இலேசாக ஒழுகிக் கொண்டு.....

— எரிச்சலில் டம்ளரைத் தூக்கியடித்தான். சொல்லாம கொள்ளாம.... வீட்டுக்கு வந்தா காப்பி கூட குடுக்காம — போன் பண்ணி எங்கே போகிறோம்னு கூட சொல்லாம.....

— சற்று முன்னால் மூர்த்திக்குக் கொடுத்த அறிவுரையின் சாயம் கழன்று, புதிதான முகமூடி மீண்டும் முகமறைக்க, மனத்தின் மற்றொரு அழுக்குப் பக்கம் விரியத் தெரிய ...வரட்டும், பேசிக் கொள்கிறேன் என்று கறுவியபடி வாசலில் வந்து நின்று கொண்டான்.



* நேரு:



* மசானி: 'நேரம் நெருங்கிவிட்டது'

5

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — VI

ராஜ்மோகன் காந்தி

சுதந்திரக் கட்சி உதயம்

"காங்கிரஸ் கட்சி இடதுசாரிக் கொள்கைகளைச் சுவீகரித்துக் கொண்டு விட்டது. எனவே இப்போது வலது சாரிக் கொள்கைகளை நன்றாகப் பேசக் கூடிய ஒரு கட்சி தேவைப்படுகிறது. ஏக கட்சி ஜனநாயகம் நல்லதல்ல."

— இவ்வாறு ராஜாஜி கூறியதைப் பலர் ஒப்புக் கொண்டதுடன் அத்தகைய ஒரு கட்சிக்குத் தலைமைதாங்கி நடத்திச் செல்லக் கூடியவர் அவரேதான் என்றும் சுட்டிக் காட்டினர். "வயதாகித் தளர்ந்து போன நானா? அது நடக்காத காரியம்!" என்பதே ஸி.ஆரின் பதிலாக இருந்தது.

ஆனால் 1959ல் ஓர் ஆச்சர்யமான மாறுதல் நிகழ்ந்தது. வயதாகித் தளர்ந்து போன அந்த முதியவர், திடுமென இளமையைத் திரும்பப் பெற்றவர் போலானார். தமக்கிருந்த தயக்கங்களை உதறித் தள்ளினார். தமது உடல் உபாதைகளை அலட்சியம் செய்தார். தமது எண்பதாவது வயதில் ஒரு புதிய கட்சியைத் தொடங்கி, பேரும் புகழும் ஆட்சி அதிகாரமும் அளவின்றிப் பெற்றிருந்த ஜவாஹர்லாலை எதிர்க்கத் துணிந்தார்! இவ்வாறு அவர் மனம் மாறப் பல காரணங்கள் இருந்தன.

1955ல் காங்கிரஸ் 'சோஷலிஸ பாணி' என்ற சொற்றொடரை உருவாக்கி அதனைத் தனது லட்சியமாக்கிக் கொண்டது. சீக்கிரமே 'பாணி' என்ற சொல்லைக் கைவிட்டு அசல் சோஷலிஸக் கொள்கையையே ஏற்றுக் கொண்டு விட்டது! இந்த சோஷலிஸ கோஷம் கவர்ச்சிகரமாக இருந்தது. ஆனால் "சோஷலிஸம், சோஷலிஸம்" என்று ஜபித்தவர்கள் பிறருக்காகக் கவலைப்பட்டு உழைக்கவில்லை என்பதுடன் தங்களைப் பொருத்தமட்டில் பெரும் பணக்காரர்களாகிக் கொண்டிருந்தார்கள். 1956லேயே ஸி.ஆர்., "காங்கிரஸ்காரர்கள் ரொம்ப வசதியாக இருப்பது போல் காணப்படுகிறார்கள். அவர்கள் ஏதாவது புதிய தொழிலை மேற்கொண்டு பணம் சம்பாதிக்கிறார்களா, என்ன? எங்கிருந்து கிடைத்தது பணம்?" என்று பகிரங்கமாக வினா எழுப்பியிருந்தார். 1958ல் மீண்டும் ஓர் எச்சரிக்கை விடுத்திருந்தார்: "முழு நேரக் காங்கிரஸ்காரர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களுக்கு காங்கிரஸ்காரனாக இருப்பதே உத்தியோகமாகி விட்டது! இவர்கள் பல ஆட்சி அரசியல் மட்டங்களிலும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள். ஒட்டுண்ணி போலிருந்து பணத்தை உறிஞ்சிக் கொள்கிறார்கள்!"

'எப்படியோ பணம் பண்ணி விடுகிறார்கள்' என்று இதுவரை கூறி வந்த ஸி.ஆர். இப்போது — 1959ல் — எப்படி பணம் பண்ணுகிறார்கள் என்பதை வெட்ட வெளிச்சமாக்கினார். "பர்மிட்—லைசென்ஸ்—கோட்டா ஆட்சி" என்ற சொற்றொடரை உருவாக்கித் தந்தார். இந்தச் சொற்றொடர், அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இந்திய அரசியலில் முக்கியமான பங்கு வகித்து, வியத்தகு மாற்றங்களை உருவாக்கியது. காங்கிரஸ்காரர்களைக் கொழுக்க வைப்பது இந்தப் 'பர்மிட் — லைசென்ஸ் — கோட்டா' முறைதான் என்பதை அம்பலப் படுத்தினார் ராஜாஜி.

'சோஷலிஸம்' என்ற போர்வையில் மக்களின் சுதந்திரங்களைக் குறைத்து, ஆட்சியில் அதிகாரங்களைக் குவித்துக் கொண்டு, லஞ்சம் கொடுப்பவர்களுக்கு மட்டும் சலுகைகளை வழங்கும் ஆட்சியின் அநீதிகளை அவர் எடுத்துச் சொல்லி மக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். பர்மிட் — லைசென்ஸ் — கோட்டா ஆட்சி முறையால் குறிப்பிட்ட சில தொழில் வர்த்தக அதிபர்கள் மட்டும் பயனடைந்து மேலும் பணக்காரர்களானார்கள்; இதர மக்கள் தொல்லைகளுக்கும் தொந்தரவுகளுக்கும் மட்டுமே உள்ளானார்கள். இவ்வாறு மக்களின் சுதந்திரங்களைக் குறைத்து, ஆட்சியின் அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்கிற சோஷலிஸத்தை எதிர்த்தாக



* ஸி. டி. தேஷ்முக்:
தலைமை ஏற்கத்...



* ஜெயப்பிரகாஷ்:
...தயக்கம்.

வேண்டும்; அதாவது காங்கிரஸை நேருக்கு நேர் எதிர்த்தேயாக வேண்டும்.

இந்த நம்பிக்கை அல்லது உள்ளுணர்வு ஸி.ஆரின் இதயத்தில் வளர்ந்து கொண்டிருந்த போதே காங்கிரஸ் கட்சியானது மும்முனை விவசாயக் கொள்கையை அறிவித்தது. தானிய வியாபாரத்தை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும், விவசாய நிலத்துக்கு உச்சவரம்பு விதிக்கும்; கூட்டுறவு விவசாயத்தை அமுல்படுத்தும். 1958ல் தெரிவிக்கப்பட்ட இந்த யோசனையானது 1959 நாகபுரி காங்கிரஸ் மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது. இந்தக் கொள்கை மக்களை வேட்டையாட வந்த புலி போன்றது என்று கருதிய ஸி.ஆர்., உரக்க எதிர்ப்புக் குரல் எழுப்பினார். அவருடைய எதிர்ப்பு எப்போதுமே அறிவுபூர்வமானது. இப்போதும் தகர்க்க முடியாத வாதங்களை அவர் சமர்ப்பித்தார்:

நில உச்ச வரம்பு என்பது அரசியல் சாசனத்துக்கு விரோதமானது என்பதுடன், பெரிய விவசாயிகள்தாம் தங்களுக்குக் கிடைக்கிற லாபத்தைச் சேமித்துக் கிராமப் புறங்களில் புதிய, சிறிய தொழில்களைத் தொடங்கி வேலை வாய்ப்புக்களைப் பெருக்க முடியும். இதற்கு அவர்களை ஊக்குவிப்பதற்குப் பதில், நிலத்தைப் பிடுங்கிக் கொண்டால் கிராமப்புறத் தொழில்கள் உருவாகாது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து, மக்கள் பட்டணங்களை நோக்கிப் படையெடுப்பார்கள்...

நில உச்சவரம்புத் திட்டத்தில் 'நிலமில்லாதவருக்கு நிலம்' என்ற கருணையை விட வோட்டுக்களை அடையும் பேராசையால் பொறாமை உணர்வைத் தூண்டிவிடும் போக்கைத்தான் அதிகமாகக் கண்டார் ஸி.ஆர். கூட்டுறவு விவசாயம் என்பது தனி மனிதன் சுதந்திரம் பறிக்கப்பட்ட கம்யூனிஸ நாடுகளில்தான் வெற்றி பெற முடியும் என்பதைச் சுட்டிக் காட்டினார். அங்குதான் மக்களை உழைக்குமாறு உத்தரவு போட்டு வேலை வாங்க முடியும். இங்கு அந்த முறை வெற்றி பெறாது.

காங்கிரஸுக்குள்ளேயே நிலச் சீர்திருத்தத்துக்கும் கூட்டுறவு விவசாயத்துக்கும் எழுந்த எதிர்ப்பு, நேருவின் கோபத்துக்குப் பணிந்து அடங்கியது. காங்கிரஸ் கட்சிக்குள் அபிப்பிராய சுதந்திரம் மறுக்கப்படுவதை ஸி.ஆர். வன்மையாகக் கண்டித்தார். ''நேரு, நிலைக்கண்ணாடி மாளிகையில் இருந்து கொண்டு, திரும்பிய பக்கமெல்லாம் தமது உருவத்தையே காண விரும்புகிறார்'' என்றார்.

இந்தக் கட்டத்தில் திடுமென நேருவின் மகள் இந்திரா காந்தி காங்கிரஸ் தலைவர் என அறிவிக்கப்பட்டார்! அவருக்கு உள்ள ஆற்றல் என்ன என்பது யாருக்கும் தெரியாது! கட்சிப் பணியில் முன் அனுபவம் ஏதும் இல்லாதவர்! நேருவின் சகாக்கள் பலரும் ஆச்சர்யமும் வருத்தமும் அடைந்தனர். ஆனால் அவர்கள் தங்கள் மன நிலையை நேருவிடம் வெளியிடுவது என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத காரியமாக இருந்தது!

காங்கிரஸுக்குள் உட்கட்சி ஜனநாயகமும் கருத்துச் சுதந்திரமும் முற்றிலும் பறிபோய் விட்டதை ஸி.ஆர். உணர்ந்தார். வலது சாரிக் கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம் மட்டுமல்ல, அவசரமும் கூட என்பதைக் கண்டார். ஆனால் தலைமைப் பொறுப்பைத் தாமே ஏற்க விரும்பாமல் பிறர் பக்கமாகப் பந்தை உருட்டி விட்டார். ஜெயப்பிரகாஷ் நாராயண், ஸி.டி. தேஷ்முக் போன்றவர்கள் பந்தைத் திரும்பவும் ஸி.ஆர். பக்கமே அனுப்பி விட்டனர்!

1959 மே மாதம் 29ம் தேதி பெங்களூரில் **Forum of Free Enterprise** என்ற அமைப்பின் சார்பில் நடந்த கூட்டத்தில் மசானியுடன் ஸி.ஆர். கலந்து கொண்டார். அப்போது மசானி, காங்கிரஸைக் கடுமையான மொழிகளால் விமர்சித்து விட்டு, 'புதிய கட்சி உடனே உருவாக வேண்டும்' என்று கருத்துத் தெரிவித்தார். ராஜாஜி, தமது பேச்சைத் தொடங்கும் போது, ''மசானி ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்; அதனால் அவரால் கடுமையான சொற்களைப் பயன்படுத்த முடியாது; என்னால் முடியும்'' என்று கூறி விட்டு, ''நேருவுக்குத் தன்னை விட்டால் வேறு ஆள் கிடையாது என்ற பித்தம் தலைக்கேறி விட்டது'' என்றார்! அவ்வளவுதான், கரவொலியில் அரங்கம் அதிர்ந்தது! மறுநாள் காலை, ''புதிய கட்சியை ஆரம்பித்து விட வேண்டியதுதான்; அதற்குரிய நேரம் வந்து விட்டது'' என்று ஸி.ஆர். மசானியிடம் சொன்னார்!

(தொடரும்)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

குழந்தைகள் கொண்டாடும்

சுற்றுலா பொருட்காட்சி

தீவுத்திடல்-சென்னை.







இன்றே
காண வாருங்கள்!

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

REGISTERED No. M. 4092
Registered as a Newspaper in Sri Lanka

PARRY'S PAGE





லேடி பர்ட் வண்டு விளையாட்டு



இது மிகவும் தமாஷான பொழுது போக்கு. பகடைக்காயைப் போட்டு விளையாடுங்கள். அதே சமயம் படமும் போடுங்கள்!

தேவையானவை:
ஒரு பகடை
ஆளுக்கொரு வெள்ளை காகிதம்
ஆளுக்கொரு பென்சில் அல்லது ஸ்கெட்ச் பேனா



இந்த விளையாட்டின் நோக்கம், ஒரு லேடி பர்ட் வண்டின் படத்தை வரைவது. பகடைக்காயைப் போட்டு, அதில் வரும் எண்ணுக்குச் சரியான வண்டின் பாகத்தை வரைய வேண்டும். வண்டிற்கு மொத்தம் 13 பாகங்கள் உள்ளன. ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு மதிப்பெண் இருக்கும். பகடையில் எந்த எண் வருகிறதோ, அந்த மதிப்பிற்குரிய பாகத்தை தனித்தாளில் வரைய வேண்டும். பாகங்களின் மதிப்பெண்கள் : 1-உடல் • 3-ஒவ்வொரு காலுக்கும் (மொத்தம் 6 கால்கள்) • 5-மீசையின் ஒவ்வொரு பக்கத்திற்கும் (2 பக்கம்) • 2-தலை • 4-கண்கள் (மொத்தம் 2) • 6-வால். எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடலாம்! ஒவ்வொருவராகப் பகடையைப் போட வேண்டும். முதலில் உடல் படம் போட்ட பிறகு தான் மற்ற பாகங்களை வரைய முடியும்.
ஆகவே உடலின் மதிப்பெண்ணை (அதாவது '1' ஐ) முதலில் போட வேண்டும். அதே மாதிரி, தலையைப் போட்ட பிறகு தான் கண்களையும் மீசையையும் வரைய முடியும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். பகடையைப் போட்டு, அதில் வரும் எண்ணிற்கேற்ப பாகங்களை, ஒவ்வொருவரும் வரைய வேண்டும். முதன்முதலில் லேடிபர்ட் வண்டின் படத்தை முழுதுமாக யார் வரைகிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர்கள். இதன் பிறகு மறுபடியும் எல்லோரும் முதலிலிருந்து விளையாடலாம். வேறு ஏதாவது மிருகம் அல்லது பூச்சி படத்திற்கு இது மாதிரி மதிப்பெண்களைக் கொடுத்து விளையாடலாம். ஒரு மீனின் படத்தைப் போட்டு விளையாடிப் பாருங்கள். புதுப்புது மிருகங்களைப் போட்டு நீங்கள் விளையாடலாம்.



பாரசூட் வீரன் செய்யுங்கள்!






FIG.1

தேவையானவை:
ஒரு பெரிய கைக்குட்டை அல்லது காகித நாப்கின்; மெல்லிய நூல்; சிறிய கார்க்; வெள்ளை பேப்பர்; கத்திரிக்கோல்; செல்லோ டேப்; வர்ணங்கள், ஸ்கெட்ச் பேனாக்கள் அல்லது கிரேயன் கலர்கள்

திரைப்படங்களிலும் புத்தகங்களிலும் பாரசூட் வீரனைப் பார்த்து வியந்திருப்பீர்கள். இப்போது, உங்களுக்குச் சொந்தமாக ஒரு பாரசூட் செய்து கொள்ள சொல்லிக் கொடுக்கப் போகிறேன்.



நான்கு நூல் துண்டுகளை 30 செ.மீ. நீளத்திற்கு, அதாவது 12 அங்குலத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள். கைக்குட்டையின் ஒவ்வொரு மூலையிலும் ஒரு நூல் துண்டைக் கட்டுங்கள் (படம் 1). கார்க்கின் நடுப்பகுதியில் வேறு ஒரு துண்டு நூலை எடுத்து அழுத்திக்கட்டுங்கள் (படம் 2) கைக்குட்டையிலிருந்து வரும் நூல்களின் நான்கு முனைகளை கார்க்கைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள நூலில் கட்டுங்கள். (படம் 3 ஐப் பாருங்கள்) காகிதத்தில் ஒரு பாரசூட் வீரன் படத்தை வரையவும். படத்தை காகிதத்திலிருந்து வெட்டி, கார்க்கின் மீது செல்லோ டேப்பினால் ஒட்டி விடுங்கள். (படம் 4 ஐப் பார்க்கவும்). பாரசூட் வீரன் தயார்! மாடிப்படியில் ஏறி மேலிருந்து பாரசூட்டைத் தூக்கி வீசவும். அல்லது மாடி ஜன்னலிலிருந்து போடவும். சற்று உயரமான இடத்திலிருந்து போட வேண்டும் என்பது தான் முக்கியம். வீசப்பட்ட வீரன், அழகாக மிதந்து இறங்குவதைப் பாருங்கள்.



FIG.2



FIG.3




FIG.4





இது உண்மை!



நிழல் சித்திரத்தில் எந்த மீன் சரியாகப் பொருந்துகிறது?

இது எந்த மீனின் நிழல்? மீன் 1, மீன் 2, மீன் 3, மீன் 4, மீன் 5 - இவற்றில் எது?



1 2 3 4 5

THE KING OF SWEETS

HTA 7129

CUT AND KEEP